# லாவண்யா



ரமணிசந்திரன்

# லாவண்யா

ரமணிசந்திரன்

தேவி வெளியீடு
தபால் பெட்டி எண் 668
23/11, காசிம் சாகிப் தெரு
இராயப்பேட்டை :: சென்னை-600 014

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

லாவண்யா

# பொலன்னயா

## 1

அன்று பம்பாயிலிருந்து சென்னைக்கு வந்த எக்ஸ் பிரஸ் ரெயில் வெகு தாமதமாகி விட்டது. சில நூறு நிமிடம் தாமதம்.

அந்த ரெயிலில் இருந்து சிவநாதர் இறங்கியபோது இரவு மணி பத்தைத் தாண்டிவிட்டது. கையில் இருந்த சிறு பெட்டி தவிர வேறு எதையும் அவர் கொண்டு வரவில்லை. பெட்டியுடன் நேரே என்கொயரிக்கு (விசா ரிக்கும் இடம்) சென்றார். ''அடுத்து வேலூருக்குச் செல் லும் ரெயில் எது?'' என வினவினார்.

''வேலூருக்குச் செல்வதானால் காட்பாடியில் இறங்க வேண்டும், சார். காட்பாடிக்கு அடுத்த ரெயில் காலையில்தான்'' என்றார் அங்கிருந்த மனிதர்.

''நான் அவசரமாகச் செல்ல வேண்டுமே'' என்றார் சிவநாதர் கவலையோடு.

''இந்த வண்டி விரைவாகச் செல்லும் சார். காலை ஒன்பதே முக்காலுக்கு காட்பாடி சேர்ந்துவிடும்.''

''அங்கிருந்து...?''

''ரெயில் நிலையத்தில் டாக்ஸி கிடைக்கும். நீங்கள் முகவரியைச் சொன்னால் கொண்டுபோய் விட்டு விடு வார்கள்.''

''மிக்க நன்றி'' என்றபடி வெளியேறினார் சிவநா தர். ஓர் ஓட்டல் அறைக்குள் குறுக்கும் நெடுக்கும் நடந்தபடி குருட்டு யோசனை செய்தார். திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. நேரே ஓட்டல் பொறுப்பாளரி டம் சென்றார். ''வேலூர் செல்வதற்கு டாக்ஸி கிடைக் குமா?'' என்று விசாரித்தார்.

பொறுப்பாளர், சிவநாதரை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு ''வேண்டாம் சார்'' என்றார் நிதானமாக. ''சார், காலம் கெட்டுக் கிடக்கிறது. நீங்கள் வேறு, பணத்தோடு வந்திருப்பது போலத் தெரிகிறது. எதற்கு சார் வீண் வம்பு?'' என்றார்.

அதற்குமேல் சிவநாதர் ஒன்றும் பேசவில்லை. பேசாமல் அறைக்குத் திரும்பிக் கட்டிலில் பொத்தென விழுந்தார்.

மறுநாள் காலையில் ரெயில் நிலையத்துக்கு வந் தார். ஏதோ நல்ல காலம் - பிருந்தாவனம் எக்ஸ்பிரஸில் டிக்கெட்டு கிடைத்தது. ரெயிலின் பச்சை வண்ணப் பெட்டியில் ஏறித் தன் இருக்கையில் அமர்ந்து கொண் டார். ரெயில் தன் வழக்கமான விரைவுடன் பறந்தது. ஆனால் சிவநாதரின் எண்ணங்கள் அதைவிட வேகமா கப் பறந்தன.

சற்றுப் பொறுத்து டிபன், காபி, வடை என்று பணியாளர்கள் வந்தனர். அவர்களைப் பார்த்த பின்தான்

தான் சாப்பிடவில்லை என்ற நினைவு அவருக்கு வந்தது. ஒரு செட் இட்லி, வடை, காபியில் உணவை முடித்தார். பிறகு நேரம் ஆமையாக ஊர்ந்தது.

அங்குமிங்கும் பார்த்துப் பார்த்து அவர் அலுத்துப் போனார். பிறகு கைப்பெட்டியைத் திறந்து ஒரு கடிதத்தை எடுத்து மீண்டும் படிக்கத் தொடங்கினார்.

'மீண்டும்' என்றால்...?

ஆமாம், அந்தக் கடிதத்தை அவர் இதற்குள் பத்துத் தடவையாவது படித்திருப்பார். கடிதத்தின் வாசகம் கிட்டத்தட்ட மனப்பாடமாகி விட்டது என்றே கூறலாம். ஆயினும் மீண்டும் வரிவடிவமாகச் செந்திருவின் எழுத்துகள் அவர் மனதைக் கலக்கின.

''செந்திரு ஏன் இப்படி எழுத வேண்டும்?''

'என் பெண்ணுக்கு இனி திலகமும், நீங்களுந்தான் பெற்றோர் என்று எழுதியிருக்கிறாளே ஏன்? சம்பந்தம் என்ன ஆனான்? மேலாகச் செந்திருவுக்கு என்ன ஆயிற்று? அல்லது என்ன ஆகப் போகிறது?' எதை எதையோ எண்ணுகையில் அவருக்கு மனம் பதறியது. 'கடவுளே, யாருக்கும் எந்தவித ஆபத்தும் இல்லாமல் காப்பாற்று' என மனதினுள் வேண்டினார்.

காட்பாடி ரெயில் நிலையத்தை ரெயில் அடைந்தது. ரெயிலை விட்டு இறங்கி சிவநாதர் வெளியே நின்ற ஒரு டாக்ஸியில் ஏறி அமர்ந்தார். தான் செல்ல வேண்டிய முகவரியைக் காரோட்டியிடம் கூறினார்.

காட்பாடி எக்ஸ்டென்ஷனில் இருந்தது அந்த வீடு. டாக்ஸி அங்கே சென்றதும் இறங்கிக் கொண்டு முகவரி

யைச் சரிபார்த்தார். காரோட்டியிடம் பணத்தைக் கொடுத்து அனுப்பினார். வீட்டின் சிறுகேட்டைத் திறந்து கொண்டு உள்ளே சென்றார். மூடியிருந்த கதவருகில் சற்று நின்றார். 'செந்திருவின் இருப்பிடத்துக்குச் சற்றும் பொருந்தாத மோனம் அல்லவா' என நினைத்தார். பிறகு மெல்லக் கதவைத் தட்டினார்.

ஒன்றிரண்டு நிமிடங்களில் வெண்கரம் ஒன்று கத வைத் திறந்தது. கைக்குரிய பெண்ணின் முகம் தெரிந்தது. வாடியிருந்த அந்த முகத்தின் பேரழகு அவரை பிரமிக்க வைத்தது.

அந்தப் பெண்ணின் முகத்தில் தயக்கத்துடன் கூடிய மெல்லிய புன்னகை மலர்ந்தது. ''நீங்கள்...'' என்று பதிலையும் அறிந்தவள் போல முடிக்காமல் நிறுத்தினாள்.

''சிவநாத்'' என்றார் பெரியவர் சுருக்கமாக. அவ ருக்கு இன்னமும் திகைப்பு அடங்கவில்லை. செந்திரு வின் பெண் இவ்வளவுக்குத் தாயை ஒத்த அழகியாக இருப்பாள் என அவர் எண்ணவே இல்லை.

அவரது பெயரைக் கேட்டதும் அவள் கதவைத் திறந்தாள். ''என் பெயர் லாவண்யா'' என்றாள் இனிய குரலில். ''நீங்கள் உள்ளே வாருங்கள். வேறு பெட்டி ஒன்றும் இல்லையே'' என்று வெளியே எட்டிப் பார்த் தாள். டாக்ஸி திரும்பிச் சென்று கொண்டு இருந்தது. அதைப் பார்த்து மீண்டும் சிவநாதரிடம், ''நீங்கள் வாருங் கள். நீங்கள் குளித்தாயிற்றா? இல்லையானால் சின்னியி டம் வென்னீர் எடுத்து வைக்கச் சொல்லுகிறேன். அல்லது குளித்து விட்டீர்கள் என்றால் பலகாரம் சாப்பிடலாம்'' என்று உபசரித்தாள்.

''இன்னமும் குளிக்கவில்லையம்மா. ஆனால் காலைச் சிற்றுண்டி இரயிலிலேயே முடிந்து விட்டது. நாம் முதலில் அம்மாவை...''

''இல்லை மாமா. அம்மா தூங்குகிறார்கள். நீங்களும் வெகு தூரத்திலிருந்து வந்திருப்பதால் களைத்துப் போயிருப்பீர்கள். நல்ல சுடுநீரில் குளித்து ஒரு கப் காபி குடியுங்கள். உடம்புக்கு உற்சாகமாக இருக்கும். சரிதானா?'' என்று அவரிடம் வினவினாள்.

சிவநாதருக்குப் புன்னகை முழுமையாக மலர்ந்தது. 'இவள் தன் தாயின் மறுபதிப்போ' என வியந்தார். ''நீ சொன்னால் சரிதான் அம்மா'' என்றார் வெகு பணிவாக.

லாவண்யா சட்டெனச் சிரித்துவிட்டாள். பிறகு அவசரமாக வாயைப் பொத்திக் கொண்டாள். ''அம்மா விழித்திருப்பார்களோ என் சத்தத்தில்...'' என்று முணு முணுத்தபடி ஓடினாள். பிறகு சற்று நேரத்தில் மீண்டும் திரும்பி வந்தாள். ''வாருங்கள் மாமா. குளியலறை இந்தப் பக்கம் இருக்கிறது'' என்று அவரை அழைத்துச் சென்றாள்.

அவர் குளித்துவிட்டு வந்ததும் சுவையும், மணமும் மிகுந்த காபி கொண்டு வந்தாள். கூடவே ஒரு சிறுதட்டில் கொஞ்சம் உப்பு பிஸ்கட்டுகளும் வந்தன. ''இதையும் சேர்த்துச் சாப்பிட்டு விடுங்கள் மாமா. உங்களுக்குப் பசிக்கத் தொடங்கியிருக்கும்'' என்று அவற்றை அவர் எதிரே வைத்துவிட்டு நின்றாள்.

''உன் வயது என்ன லாவண்யா?'' என்று அவளைப் பேச்சுக்கு இழுத்தார் சிவநாதர்.

''பதினெட்டு முடிந்து ஆறு மாதங்கள் ஆகி விட்டன.''

''எனக்கு உன் வயதில் ஒரு மகள் இருக்கிறாள். உன்னைக் காட்டிலும் ஆறு மாதங்கள் சின்னவள். பானு மதி அவள் பெயர்.''

''பானுமதி'' என்று சொல்லிப் பார்த்தாள் லாவண்யா. ''பெயர் மிக அழகாக இருக்கிறது மாமா. பானு என்று அழைப்பீர்களோ?'' என்று வினவினாள்.

''ஆமாம். ஆனால் அவள் பொல்லாத பெண். கோபமும் குளிர்ச்சியும் சட்சட்டென்று வரும்.''

''அவளது பெயருக்குத் தகுந்தபடி இருக்கிறாள்'' என்று குறுக்கிட்டுச் சொன்னாள் லாவண்யா.

''எப்படி?''

''பானு என்றால் சூரியன். சூரியனைப் போலக் கோபச் சூடு; மதி என்றால் நிலவு. நிலவைப் போலக் குளிர்ச்சி'' என்று விளக்கினாள் லாவண்யா.

''அடேடே ஆமாம். சரியாகச் சொல்லிவிட்டாயே. நீ வெகு கெட்டிக்காரி லாவண்யா?'' என்று மெச்சினார் சிவநாதர்.

லாவண்யாவின் முகம் லேசான வெட்கச் சிவப்பு டன் மலர்ந்தது; உடனே வாடியது. ''மாமா, அம்மா அசைகிற சத்தம் கேட்கிறது. நான் போகிறேன். அம்மா நன்றாக விழித்து விட்டால் உங்களை அழைத்துப் போகி றேன்'' என்ற வார்த்தைகள் முடியுமுன்னர் மின்னலாய் மறைந்து விட்டாள்.

மறைந்தவள் உடனேயே திரும்பி வந்தாள். "வா ருங்கள் மாமா. உங்களை அழைத்து வரும்படி அம்மா சொன்னார்கள்," என்றாள் அவசரமாக.

நேராகத் தன்னை நோக்கிய விழிகளில் தேங்கியி ருந்த கலக்கத்தைக் கண்டதும் சிவநாதரின் மனம் உருகி யது அவளைக் கேட்க நினைத்த பல கேள்விகள், 'உன் தந்தை எங்கே? உன் அம்மாவுக்கு என்ன? டாக்டர் என்ன சொல்லுகிறார்?'—என்பன போன்ற கேள்விகள் உதடு வரை வராமல் உள்ளேயே அடங்கிப் போயின. 'இந்தக் கேள்விகளின் பயனாக அவளது கண்களின் கலக்கம் இன்னமும் அதிகமானால் அதை எப்படித் தாங்குவது?

"போகலாம் கண்ணம்மா" என்று எழுந்தார்.

திடுக்கிட்டவள் போல நிமிர்ந்தாள் லாவண்யா. விழிகளில் சட்டெனை நீர் திரண்டது. அதைக் காட்ட மனம் இல்லாதவள் போல சட்டெனத் திரும்பி முன்னே நடந் தாள்.

சிவநாதரும் பின் தொடர்ந்தார்.

ஓர் அறையின் முன்னே நின்று லேசாகத் தட்டினாள் லாவண்யா.

ஒரு மெல்லிய முனகல் கேட்டது.

அதற்கு 'வா' என்று பொருள் போலும். கதவை மெள்ளத் திறந்துகொண்டு லாவண்யா உள்ளே சென் றாள். நெஞ்சு படபடக்க சிவநாதரும் சென்றார்.

அங்கே கட்டிலில் ஓர் உருவம். மேலே போர்த்த தோல் மட்டும் இல்லாதிருந்தால் வெறும் எலும்புக்கூடு

என்றே சொல்லிவிடலாம். அந்த உருவத்தின் கண்களில் மட்டும் எவ்வளவு ஒளி? சிவநாதரைக் கண்டதும் அந்த முகத்தின் புன்னகையின் சாயல் தோன்றியது. அருகில் வருமாறு விழிகளால் அழைத்தாள் அந்தப் பெண்மணி,

ஆனால் சிவநாதர்தான் உடைந்து போனார். ''செந் திரு... செந்திரு'' குரல் தளுதளுக்கக் கண்கலங்கினார்.

செந்திருவின் பார்வை, மகள் முகத்தில் பதிந்தது. புரிந்து கொண்டவள் போல அறையை விட்டு வெளியே றினாள் லாவண்யா.

அதற்குள் ஒருவாறு தன்னைச் சமாளித்தார் சிவநா தர். கட்டிலின் அருகே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தார். ''சம்பந்தம் எங்கே செந்திரு?'' என அந்தப் பெண்மணியின் கணவரைப் பற்றி விசாரித்தார்.

ஆனால் செந்திருவின் இதழ்கள் துடித்தன. பார்வை கதவருகில் இருந்த மேசைமேல் நிலைத்தது.

அவளது பார்வையைத் தொடர்ந்து திரும்பினார் சிவநாதர். அங்கே... அங்கே... இனிய புன்னகையுடன் சம்பந்தத்தின் பொன்னான முகத்தில் புகைப்படம் மட்டி லும் இருந்தது. புகைப்படத்தின் அடியில் மலர்கள் சட்டெ னத் திரும்பினார். செந்திருவின் நெற்றியில் திலகம் இல்லை.

''செந்திரு, செந்திரு. இது என்ன கொடுமை? எப்போது நேர்ந்தது? நீ எனக்குத் தெரிவிக்கவே இல் லையே!'' என்று குமுறினார் சிவநாதர்.

''தெரிவிக்கும் நேரம் இப்போதுதான் வந்தது, சிவா அண்ணா'' என்றாள் செந்திரு சற்றுப் பிரயாசையுடன்.

மீண்டும் திடுக்கிட்டு முகம் வெளுத்தார் சிவநாதர்; ''நீ என்ன சொல்கிறாய்?''

''அவரைப் பிரிந்த பிறகு நான் எத்தனை நாள் இருப்பேன் அண்ணா? என் காலம் முடியப் போகிறது. ஆனால் லாவண்யா? என் மகளை நல்ல விதமாகத்தான் வளர்த்திருக்கிறேன், அண்ணா, இனி அவள் உங்களுக்கும் ஒரு மகளைப் போலத்தான்...'' என்று முடிக்குமுன் அவளுக்கு மூச்சு வாங்கியது.

''அதெல்லாம் பிறகு பேசிக் கொள்ளலாம், செந்திரு. இப்போது பேசாமல் தூங்கு'' என்றார் சிவநாதர் அவசரமாக.

''பிறகா?'' என்று லேசாகச் சிரித்தாள் செந்திரு.

வாயிலில் ஒரு கார் வந்து நின்ற ஓசை கேட்டது.

''அம்மா, டாக்டர்'' என்று குரல் கொடுத்தாள் லாவண்யா.

டாக்டர் வந்தார். செந்திருவின் நாடியைப் பார்த்தார். கண் இரைப்பையை இழுத்துப் பார்த்தார் உதட்டைப் பிதுக்கினார்.

''இன்னமும் கொஞ்ச நேரம் எனக்கு உயிர் வேண்டும் டாக்டர்,'' என்றாள் செந்திரு சிறு புன்னகையுடன்.

''கொஞ்ச நேரம் என்னம்மா? பல காலம்கூட வாழலாம். ஆனால் உங்களுக்கு மனம் இருக்க வேண்டும்'' என்றார் டாக்டர். லாவண்யா கொண்டுவந்து தந்த ஊசி மருந்தைச் செலுத்தினார். பிறகு சிவநாதர் பக்கம் திரும்பினார். ''உடலுக்கு மருத்துவம் செய்யலாம் சார். ஆனால் உள்ளத்துக்கு? இவருக்குப் பிழைக்கும் ஆர்

வமே இல்லையே? அதுமட்டுமல்ல, சாவதில் பிடிவாத மாக வேறு இருக்கிறார். நீ அழாதேயம்மா பார்ப்போம். நம்மால் ஆனவரை முயலாமல் விட்டு விடுவோமா? என்னதான் ஆசைப்பட்டாலும் சாவது என்பது லேசா என்ன?'' என்று செந்திருவின் தலைப்பக்கம் நின்று ஓசையற்றுக் குலுங்கி அழுது கொண்டிருந்த லாவண்யா வுக்குத் தேறுதல் கூறினார். பிறகு மீண்டும் சிவநாதரிடம் திரும்பினார். ''சார், நீங்கள்...? இவர்களுக்கு...''

''நான் செந்திருவினுடைய சகோதரன், டாக்டர்'' என்றார் சிவநாதர்.

''ம்...'' என்று அவரை ஏற இறங்கப் பார்த்தார். டாக்டர் தங்கையுடைய கணவனது மறைவுக்குக்கூட வராத அண்ணன் என அவர் நினைத்திருக்கலாம். ''நல்ல வேளை, இப்போதாவது வந்தீர்களே இந்த பெண்ணைப் பற்றி எனக்குப் பெரும் கவலையாக இருந்தது.'' என்று வெளியே சென்று கொண்டிருந்த லாவண்யாவைப் பார்த் தார் டாக்டர். ''ஏன் அம்மா, நீங்கள் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்து விட்டீர்களா?'' என்று செந்திருவிடம் வினவினார்.

''டாக்டர்...'' என்று எச்சரிக்க முயன்றார் சிவநாதர்.

டாக்டர் அலட்சியமாக அவரைப் பார்த்தார். ''நோ யாளியிடம் இறுதி நேரத்தை பற்றிப் பேசுகிறேனே என்று நினைக்கிறீர்களா? அது சாவை நினைத்துப் பயப்படுகிற வர்களுக்கு. இந்த அம்மாவோ சாவே வாவா என்று வெற்றிலை பாக்கு வைத்து வருந்தி அழைக்கிறார்களே'' என்று சிறு கோபத்துடன் கூறினார் டாக்டர். தன் வைத்தி யத்துக்கும் மருந்துக்கும் செந்திரு ஒத்துழைக்க மறுக்கி

றாரே என்ற ஆற்றாமை அவருக்கு. ''உடன்கட்டை ஏறி உயிர் விடுவதைச் சட்டம் செய்து தடுத்தார்கள். ஆனால்? இதை? இந்த மாதிரி உடம்பை வருத்தி உயிர் விடுவதும் உடன்கட்டை ஏறுவது போலத் தானே. இதை எந்தச் சட்டம் தடுக்கிறது? என்னைக் கேட்டால் ஒருவரை ஒருவர் உயிராக நேசிப்பதையே சட்ட விரோதம் ஆக்க வேண்டும் என்பேன்'' என்றார் வேகத்துடன்.

செந்திரு புன்னகை செய்தாள்.

''ஆமாம் அம்மா, நீ சிரி. எனக்கு வயிறு எரிகிறது. வயதுக்கு வந்த பெண் இருக்கிறாள். இவளுக்காகவே னும் வாழ நினைக்க வேண்டாமா? புருஷன் போனால் நீயும் போய்விட வேண்டுமாக்கும்? சரிசரி. இனி அது ஏன்? உனக்கு என் கெடு இருபத்து நான்கு மணி நேரம்தான். அதற்குள் சொல்ல வேண்டியது, செய்ய வேண்டியது எல்லாம் முடித்து விடு. நான் வருகிறேன்'' என்று தன் பையை எடுத்துக் கொண்டு வேகமாக வெளியேறினார். கதவைத் தாண்டியதும் சற்றுத் தாமதித் தார். அங்கே விம்மிக் குலுங்கிக் கொண்டிருந்த மகளின் முதுகு தெரிந்தது. இதுபோல எத்தனையோ இழப்புக ளைக் கண்டவர். ஆயினும் அவரது கண்களிலும் நீர் கசிந்தது. முழுக்கைச் சட்டையால் அதைத் தேய்த்து விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்.

சற்றுப் பொறுத்து மகளை அழைத்தார். சிவநாத ரைக் காட்டி, ''இவர்தான் இனி உனக்குத் தந்தை. இவருடைய மனைவிதான் உன் தாய். உன்னை மகிழ்ச்சி யோடு எண்ணும்படி நடந்து கொள்ளம்மா'' என்றார். அதன் பிறகு ஏதும் பேசவில்லை. 'கடமை முடிந்தது'

என்று எண்ணியோ என்னவோ அந்த உயிர் சிட்டாகப் பறந்து சென்றுவிட்டது.

ஆனால், அந்த உடலிலிருந்து உதித்த உயிர் தந்தையையும் அவரைத் தொடர்ந்து அன்னையையும் இழந்து புழுவாகத் துடித்துக் கொண்டிருந்தது.

## 2

"அம்மா லாவண்யா" என்ற சிவநாதரின் அன்பான அழைப்பு, லாவண்யாவின் காதுகளில் விழுந்தது. உடனே அவசர அவசரமாகக் கண்ணைத் துடைத்தாள். இதழ்களில் புன்னகையை லேசாக மலரவிட்டாள். "இதோ வருகிறேன் மாமா" என்றபடி அவரது குரல் கேட்ட முன் அறைக்கு விரைந்தாள்.

"இன்னொரு தடவை நன்றாகப் பார்த்துவிடம்மா. உனக்கு இவை ஒன்றுமே வேண்டாமா? யோசித்துச் சொல். பிறகு அதை வைத்துக் கொண்டோமில்லையே, இதை எடுத்துக் கொண்டோமில்லையே என்று ஏக்கம் வந்துவிடக் கூடாது" என்றார் அவர் மென்மையாக.

அந்தக் குரலின் பரிவிலும், அங்கே விரித்துக் கிடந்த சாமான்களின் தோற்றத்திலும் லாவண்யாவின் கண்கள் மீண்டும் கலங்கின. 'அதோ அப்பாவின் ஷேவிங் செட்' அம்மாவின் சின்ன டிரான்சிஸ்டர் ரேடியோ... பார்க்கப் பார்க்க வேதனைதான், "ஒன்றுமே வேண்டாம் மாமா" என்றாள் அவள்.

"அம்மா அப்பா நினைவுக்காக..." என்று இழுத்தார் பெரியவர்.

''அம்மா அப்பாவை நினைவூட்டுவதற்கு என்று ஒன்று வேண்டுமா மாமா? அப்படியே வேண்டுமானா லும் என்னிடம் நிறையப் படங்கள் இருக்கின்றன. போதும். அம்மா அப்பா உடைகளை எல்லாம் மிஷனரி யில் கொடுத்து விடுங்கள். வாங்கித் தேவைப்படுபவர்க ளுக்குக் கொடுப்பார்கள். இந்த ரேடியோ மற்ற சாமான் களை எல்லாம் ஏதோ, உங்களுக்குத் தோன்றியபடி செய்யுங்கள் மாமா. என்னைப் பொறுத்த வரையில் இவைகளைப் பார்க்கப்...'' கண்ணீர் பொங்கப் பேச்சுத் தடைப்படத் தலைகுனிந்தாள் லாவண்யா.

குனிந்திருந்த இளம் முகத்தைப் பார்க்க சிவநாத் ருக்கு மிகவும் வேதனையாக இருந்தது. பால் போலக் கபடமற்ற முகம். தாமரை மலர் போல அழகான அமைப்பு. இப்போது வேதனையால் மொட்டுப் போலக் கூம்பி விட்டதைக் காண அவருக்குச் சகிக்கவில்லை.

''சரியம்மா. நானே பார்த்துக் கொள்கிறேன். உனக்கு யாராவது தோழிகளிடம் சொல்லிக் கொள்ள வேண்டியிருக்கிறதா? அல்லது தோழன் என்று யாரே னும் உண்டா?'' என்று சிரித்தார்.

அவரது சிரிப்பின் எதிரொலியாக அவளது கன்னங் களும் குழிந்தன. ''ஊகூம், அதெல்லாம் கிடையாது மாமா. அதிலும் வேலூரில் சினேகிதிகள்கூட அதிகம் இல்லை. இரண்டு பக்கத்து வீடுகள். எதிர் வீடு ஆக மூன்று வீட்டினர்தான் தெரியும். அவர்களிடம் கூட விடை பெற்று விட்டேன். நம் டாக்டர் வீடு மட்டிலும் பாக்கி.''

''மாலையில் நாம் இருவரும் சேர்ந்தே அங்கே போய் விட்டு வரலாம். வருகிற திங்களன்று நமக்கு

பம்பாய்க்கு டிக்கெட் கிடைத்து விட்டதாம். தந்தி வந்து விட்டது. அப்படியானால் செவ்வாயன்று மதியம் நீ பம்பாயில் இருப்பாய்'' என்றார் உற்சாகமாக.

லாவண்யாவின் முகம் சட்டென வெளுத்தது. 'புதிய ஊர், புதிய வீடு, புதிய மனிதர்கள், அவர்கள் இவளை வெறுத்தால்? அனாதைப் பெண் என்று அலட்சியம் செய்தால்?'

லாவண்யாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சிவநாதர் சற்று யோசித்து விட்டுக் கூறினார். ''அங்கே செல்ல பயமாக இருக்கிறதாம்மா? பயப்படத் தேவையே இல்லை. அங்கே உன் அத்தை இருக்கிறாள் பார். அவளுக்கு உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரை ஒரே அன்பு மயம். என் இரண்டு குழந்தைகளைக் கூட அவள் தட்டிப் பேசி நான் கேட்டது இல்லை. அவளைப் பார்த்ததுமே நீ உன் அம்மாவை மறக்கத் தொடங்கி விடுவாய்... ஆனால் செந்திருவோடு ஒரு நாள் பழகியவர்கூட அவ்ளை இலகுவில் மறந்து விட முடியாது அதிலும் அவளைத் தாயாகவே அமைந்த பாக்கியசாலி நீ. இத்தனை ஆண்டுகளாக அனுபவித்த சுகத்தை நினைத்து மகிழ்ச்சி அடைய வேண்டுமே தவிர இன்னமும் அந்த சுகம் கிடைக்கவில்லையே என்று ஏங்கக் கூடாது. ஏங்கினால் உடம்பு கெட்டு விடும்.'

''அம்மாகூட அதைத்தான் சொன்னார்கள்'' என்று மெல்லிய குரலில் கூறினாள் லாவண்யா.

''அப்படியாம்மா?''

''ஆமாம் மாமா. 'கடவுள் கிருபையால் இவ்வளவு காலம் வெகு ஆனந்தமாக வாழ்ந்தோம். அதை

நினைத்து இன்புற வேண்டுமே தவிர வருந்தக் கூடாது; நீ இளம் தளிர். மேலே மேலே ஒளியை நோக்கி வளர வேண்டுமே தவிர உதிர்கின்ற பழுத்த இலைகளைக் குனிந்து நோக்கிக் கண்ணீர் விடக் கூடாது' என்று சொன்னார்கள்.

''செந்திரு என்றால் செந்திருதான்'' என்று பெருமை பட்டார் சிவநாதர். ''எவ்வளவு முன்னறிவோடு சொல்லி யிருக்கிறாள் பார், தன்னை நினைத்து வருந்தக் கூடாது என்று நாசூக்காகக் கூறியிருக்கிறாள். அதே குரலிலேயே உன் எதிர்காலம் ஒளி மிகச் சிறப்பாக அமைய வேண்டும் என்பதையும் கூறி விட்டாளே. அந்த நம்பிக்கை நிறை வேற நான் என்னால் இயன்ற அளவு எல்லாமே செய் வேன் லாவண்யா இது நிச்சயம்'' எனப் பரவசத்துடன் கூறினார்.

லாவண்யா வியப்புடன் அவரைப் பார்த்தாள். லாவண்யா பிறந்து இந்தப் பதினெட்டு ஆண்டுகளில் அவள் ''சிவநாதர்'' என்ற பெயரைக் கேள்வியுற்றதே இல்லை; தாயார் மரணப் படுக்கையில் வீழ்ந்தபின் ஒரு நாள் 'இந்தப் பெயரில் ஒரு மாமா வருவார்' என்றாள். அதே போல அவரும் வந்தார். இவர்தான் இனி உன் தந்தையும் தாயும் என்று கூறி தாய் மறைந்தாள். இவரோ தாயின் பெயரைச் சொல்லும்போதே பரவசப்படுகிறாரே!

அவளது ஆச்சரியத்தை சிவநாதர் கவனிக்க வில்லை. அவர் செந்திருவின் சிறப்புகளை ஒவ்வொன் றாக விளக்கிக் கொண்டு இருந்தார்.

லாவண்யாவின் கருவிழிகளும் தாயின் வெள்ளி பிரேமிட்ட புகைப்படத்தில் பதிந்தன. பளிச்சென்ற முகம்;

ஒருதரம் பார்த்தவர்கள் எளிதில் மறக்க இயலாத முகம்; அறிவின் கூர்மையைக் காட்டும் கூர்மையான கண்கள்; குறும்பாக மலர்ந்த இதழ்கள். இந்த முகம்தான் இந்தக் கடைசி இரண்டு மாதங்களில் எப்படி மாறிவிட்டது? தந்தையின் இறுதிக் கடன்களை முடித்துவிட்டுப் படுத்த வள்தான். பிறகு எழவே இல்லையே. அன்றிலைப் போலத் துணையுடன் ஒன்றி வாழ்ந்த உயிர், துணையை இழந்ததும் இற்று, இடிந்து அவர் பின்னேயே ஓடி விட்டதே.

கூடவே இணைந்திருந்த தந்தையின் படத்தைப் பார்த்தாள் லாவண்யா. அந்த முகம் ஒரே அன்பு மயம். சிவநாதர் சொன்னாரே அவருடைய மனைவியைப் பற்றி அதுபோல அன்பு. உரத்த குரலில் அவர் பேசிக்கூட லாவண்யா அறிந்ததில்லை. 'கண்ணம்மா' என்று தந்தை அழைப்பதுபோல இருந்தது. தன்னையும் அறியாமல் ''அப்பா'' என்று விம்மி அழுதாள்.

சிவநாதர் திடுக்கிட்டுப், பெண்ணைப் பார்த்தார். முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு அவள் விம்முவ தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

''வேண்டாம்மா. அழாதே, அப்பா இல்லையென்று இருக்கிறதா? என் பானுவைப் போல நீயும் எனக்கு ஒரு மகள்தான். அழாதே கண்ணம்மா'' என்று ஆறுதல் கூறினார்.

'கண்ணம்மா' என்ற அழைப்பில் மீண்டும் குலுங் கிப் போனாள். லாவண்யா, ''மாயா'' என்று தழுதழுத்த குரலில் அழைத்து அவர் கரத்தைப் பற்றிக் கொண்டாள்.

அவர் பேச்சிழந்து பெண்ணின் கூந்தலை வருடி னார்.

இதே போன்ற இன்னும் சில சம்பவங்கள். அவை களுக்குப் பின் லாவண்யா தன் உடமைகளுடன் வேலூரி லிருந்து சிவநாதரோடு பம்பாய்க்குப் பயணப்பட்டாள்.

ஞாயிறன்று இரவில் சென்னையை அடைந்தார்கள். மறுநாள் காலை பம்பாய் செல்லும் ரெயிலில் ஏறினார் கள். பயணம் நீண்டது. அதில் லாவண்யாவுக்கு சலிப்புத் தட்டாதபடி சிவநாதர் கவனித்துக் கொண்டார். நிறைய கதைப் புத்தகங்களையும் பத்திரிகைகளையும் வாங்கிப் போட்டார். சுவாரசியமான ஊர்க்கதைகளை அளந்தார். சிறுவயதில் வெளிநாடு சென்று வந்தவர் அவர். அந்த நாட்டுப் பழக்கங்களைப் பற்றி நகைச்சுவையோடு சொல்லி அவளுக்குச் சிரிப்பு மூட்டினார். கொஞ்ச நேரத்திலேயே லாவண்யாவுக்குச் சிரிப்பு வரத் தொடங் கியது.

மெல்ல லாவண்யாவும் பேசத் தொடங்கினாள். பம்பாயில் காத்திருக்கும் அத்தையைப் பற்றி வின வினாள். அவரும் தன் மனைவி திலகவதியைப் பற்றி வெகுவாகப் பேசினார். அவளது அன்பையும், அனுசர ணையான அரவணைப்பையும் பற்றிப் பக்கம் பக்கமாகக் கூறினார். ஒத்த வயதுத் தோழியான பானுமதியோடு எப்படி எல்லாம் சுவாரசியமாகப் பொழுது கழியப்போகி றது என்று ஆருடம் கூறினார். பம்பாயில் பார்க்க வேண்டிய இடங்களைப் பற்றிக் கூறினார்.

அவரது பேச்சில் அடிக்கடி ஓர் அருணும், ஒரு மணி வண்ணனும் வந்து போயினர். உலகத்தில் உள்ள சிறப் பெல்லாம் அந்த அருணிடம் குவிந்து கிடப்பது போல அவர் பேசியது அவளுக்கு எரிச்சலை மூட்டியது. "உ...

அத்தையின் பெரிய அக்காவின் மகன் அருண். நிரம்பவும் கெட்டிக்காரப் பயல். அவனுடைய அப்பாவின் உடல்நலம் கெட்ட பிறகு வஜ்ரேசுவரி பக்கமாக வீடு கட்டிக்கொண்டு தாயாரும், தகப்பனாரும் சென்று விட்டனர். இவன் தொழிலைப் பார்த்துக்கொண்டு தனியாகத் தான் ஒரு 'பிளாக்'கில் இருக்கிறான். இவனுக்கு ஒரு கால் கட்டைப் போட்டுப் பார்த்துவிட வேண்டும் என்று அவன் பெற்றோருக்கு மிகவும் ஆசை. இவன் பிடி கொடுப்பதே இல்லை. எந்தப் புண்ணியவதிக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ?''

''மிஸ்டர் மணிவண்ணன் யார் மாமா?'' என்று பேச்சை மாற்றினாள் லாவண்யா.

''அந்தப் பையனும் கெட்டிக்காரன்தான். லாவண்யா நம்ம கம்பெனியிலேயே வேலை பார்க்கிறான். மிகவும் சாது. பழக மிகவும் பிரியமானவன். அருண் மாதிரி அழுத்தம் இல்லை. இருவருமே ஆளுக்கு ஒரு வகையில் சிறந்தவர்கள் என்று வையேன். அதிலும் அருண் ஆளை எடைபோடுவதில் கெட்டிக்காரன். அவனுக்கு சந்தேகம் லாவண்யா இவ்வளவு நாள் இருந்த ஊரை விட்டுவிட்டு பம்பாய் வாசம் உனக்குச் சரிப்பட்டு வராது என்றான். வேண்டுமானால் இங்கே ஏதாவது ஆஸ்டலில் சேர்க்கலாம் என்றுகூட...''

''மாமா, உங்களுக்குத் தூக்கம் வரவில்லையோ?''

''இல்லையே, ஏனம்மா?''

''எனக்குத் தூக்கம் வருகிறது, படுக்கட்டுமா?'' என்று எழுந்தாள்.

''ஓ, உனக்கும் ஒரே அலுப்பாக இருக்கும்'' என்று கூறி தலையணையை எடுத்துக் கொடுத்தார் சிவநாதர்.

லாவண்யா மேலே ஏறிப் படுத்தாள். சற்று நேரத்திலேயே தூங்கிவிட்டாள். நன்றாகத் தூங்கி எழுந்தபோது மனம் பழையபடி வேதனைப்பட்டது. சிவநாதருடனாவது பேசலாம் என்று கீழே பார்த்தாள். அவரும் தூங்கிக் கொண்டு இருந்தார். படிக்கவும் ஓடவில்லை. என்ன செய்வது? மனதைப் பிடிவாதமாகப் பெற்றோரிடமிருந்து திரும்பினாள். சிவநாதர் சொன்னதை எல்லாம் எண்ணிப் பார்த்தாள்.

'அந்த அருண், லாவண்யாவுக்கு பம்பாயில் சரிப்படாது என்றானாமே!' விடுதியில் சேர்க்கச் சொன்னானாமே' சட்டென அவன் பேச்சின் பொருள் லாவண்யாவுக்கு விளங்கியது. 'லாவண்யா பம்பாய்க்குச் செல்வது அவனுக்குப் பிடிக்கவில்லை. அதை இப்படியெல்லாம் மாற்றிச் சொல்லி சிவநாதரை தடுக்கப் பார்த்திருக்கிறான் ஏன்? தன் வரவை விரும்பாத ஒருவன் அங்கே இருக்கிறானே' என்று எண்ணியதும் அவளுக்கு அவமானத்தால் முகம் சிவந்தது.

## 3

ஒரு குடும்பத்தில் ஒருவரது மனம் வேறுபட்டு இருந்தாலும் மற்றவருக்கு அது வேதனையாக இருக்கும். 'இந்த அருண் நேரில் பார்க்குமுன்பாகவே லாவண்யாவை வெறுக்கிறான். அவன் இருக்கும் வீட்டில் தன் வாழ்வு இனி எப்படி இருக்கும்' என்று எண்ணிப்

பார்த்தாள் லாவண்யா. கசந்தது. கூடவே ஒரு வீம்பும் எழுந்தது. 'வீட்டுக்கு உரியவர் விருப்பத்துடன் அழைத்துப் போகிறார்: இவன் என்ன நினைத்தால் யாருக்கு என்ன வந்தது?' என்று அலட்சியமாக எண்ணமிட்டாள். கூடவே அருண் தனிமையாக ஒரு 'பிளாக்'கில் வசிப்பதாக சிவநாதர் கூறியது நினைவு வந்தது. 'எப்போதாவது வருவான், போவான், அவன் வரும்போது அவன் முன்னிலையில் வராமல் ஒதுங்கிக் கொண்டால் போகிறது,' என்று எண்ணிக் கொண்டாள் லாவண்யா.

மறுநாள் மதியம் இரண்டு மணிக்கு பம்பாய் தாதர் ரெயில் நிலையத்தைச் சென்றடைந்தது ரெயில்.

அங்கே சிவநாதருடைய குடும்பம் அவர்களை எதிர் கொண்டழைத்தது.

''வாம்மா'' என அன்புடன் அழைத்தார் திலகவதி.

ஆவலுடன் அவரை நிமிர்ந்து பார்த்தாள் லாவண்யா. புன்னகை புரியும் இதழ்கள். கனிவு காட்டும் கண்கள், ஆனால் அந்தக் கண்களில் கனிவோடுகூட ஒரு கலக்கம்—கலக்கமா அச்சமா—ஏதோ ஒன்று கூடக் கலந்திருந்தது. ஏன்? என்று புரியாமல் லாவண்யா திகைத்தாள்.

''இவள்தான் என் மகள் பானுமதி. பானு இவள் லாவண்யா, உன் சினேகிதி'' என்று அறிமுகம் செய்வித்தார் சிவநாதர்.

தந்தையின் ஜாடையில் நிமிர்ந்து நின்ற ஓர் இளம் பெண் வெண்பற்களை அழகுறக் காட்டிச் சிரித்தாள்.

''அலோ பானு'' என்று வலது கையை நீட்டினாள் லாவண்யா.

''அலோ, லாவண்யா'' என்று மொழிந்தபடி லாவண்யாவின் கரத்தில் தன் கையை வைத்தாள் பானுமதி.

''இதோ, இவன் என் தம்பி, பெயர் வினோதன். இவனது வேலைகளும் வினோதமாகத்தான் இருக்கும்'' என்று கேலியாக நகைத்தாள் பானுமதி.

''அதெல்லாம் நம்பாதே, அக்கா. இந்த பானு ஒரு வடிகட்டின மக்கு. ஒன்றுகூடப் புரியாது. புரியாது என்று ஒத்துக்கொள்ளாமல் வினோதம், விசித்திரம் என்று கூறி விடுவாள் என்றான் பதினாலு வயது வினோதன்.

பானுமதிக்கு முகம் கன்றியது ''போடா, நீ பெரிய மேதாவி போலப் பேசாதே'' என்றாள் கோபத்துடன்.

தன்னந்தனியாக வளர்ந்திருந்த லாவண்யா இந்த அக்கா—தம்பியின் பூசலை ஆச்சரியத்துடன் வேடிக்கைப் பார்த்தாள். திலகவதி என்ன செய்யப் போகிறார் என்று அவரைத் திரும்பிப் பார்த்தாள். அவர் பிள்ளைகளின் சச்சரவைப் புன்னகை மங்காமல் ரசித்துக் கொண்டிருந்தார். 'சிவநாதர் கூறியபடி முழு அன்பின் மொத்த உருவம் அப்போது தெரிந்தது. கண்ணிலும் கூடத்தான். பின்னே தன்னைப் பார்த்தபோது மட்டும் அந்த அன்பு வழியும் கண்களில் கலக்கம் தோன்றியதே, ஏன்?' இந்தக் கேள்வி சட்டென மனதில் எழவும் லாவண்யா குழம்பினாள். செலவாக வந்துவிட்டாள் என்று திலகவதி எண்ணியிருப்பாரோ? ஆனால் செலவைப் பற்றி எண்ணிக் கவலைப்பட்டு வாழுகிறவர்கள் போலத் தெரியவில்லையே!

''உஷ், இது என்ன சண்டை? லாவண்யா உங்களைப் பற்றி என்ன நினைப்பாள்? பானு, நீ பெரியவள்

அல்லவா? உனக்காவது தெரிய வேண்டாமா?'' என்று கண்டித்தார் சிவநாதர்.

சட்டென முகத்தைத் திருப்பிக் கொண்டாள் பானு மதி.

அலட்சியமாகத் தலையைக் குலுக்கிக் கொண்டு லாவண்யாவிடம் திரும்பினான் வினோதன். ''இந்தப் பானு எப்போதும் இப்படித்தான், அக்கா. ஒன்றுமில்லாத தற்கெல்லாம் சண்டைக்கு வந்து விடுவாள். நீ இதையெல் லாம் பொருட்படுத்தாதே. இங்கே உனக்கு என்ன தெரிய வேண்டுமோ, என்னிடம் கேள். நான் சொல்லித் தருகி றேன்'' என்றான் பெரிய மனிதன் போல.

''அப்படியே செய்கிறேன் வினோதன்'' என்று பணி வாகப் பேசினாள் லாவண்யா.

''வினோதனா? என்னை எல்லோரும் வினு என்று தான் கூப்பிடுவார்கள். நீ கூட வினு என்றே அழை.''

''உன் சொல்படியே வினு'' என்று கண்கள் குறு குறுக்க மீண்டும் பணிந்து போனாள் லாவண்யா.

எல்லாருமாகக் காரில் ஏறிக்கொண்டனர்.

பம்பாயின் உயர உயரமான கட்டிடங்கள் லாவண் யாவுக்கு வியப்பை அளித்தன. சென்னையிலும் உயர மான கட்டிடங்கள் நிறைய உண்டுதான். ஆனால் அவை கள் புதியவை. பம்பாயில் பழைய கட்டிடங்கள் கூட நாலடுக்கு ஐந்தடுக்கு என்று இருப்பது ஆச்சரியத்தை அளித்தது.

''இது இந்த இடம், இது அது'' என்று வினு சொல்லிக் கொண்டே வந்தான்.

''வருமுன் இப்படிச் சொல்லிக் கொண்டே வந்தால் அவளுக்கு எப்படி நினைவு இருக்கும்?'' என்று தம்பியை அடக்க முயன்றாள், பானுமதி.

''அவள் என்ன உன்னை மாதிரி மண்டூகம் என்று நினைத்தாயா?'' என்று மட்டம் தட்டினான் வினு.

''வினு, அக்காவிடம் இப்படியா பேசுவது?'' என்றார் திலகவதி. கண்டிக்கிறார் என்றே தோன்றவில்லை. அவ்வளவு தூரம் குரல் குழைந்தது, கெஞ்சியது.

ஆயினும் மகன் அடங்கிப் போனான். ''இனி இல்லையம்மா'' என்றான் பணிவாக, பிறகு மீண்டும் லாவண்யாவுக்கு விளக்கம் கூறத் தொடங்கினான்.

''நேற்று நான் வடேகரிடம் ஆட்டோ கிராப் வாங்கினேன்'' என்றான் திடீரென்று.

''மெய்யாகவா? நான் சென்னையில் அவர் ஆடும் போது பார்த்தேன். ஆனால் ஆட்டோகிராப் வாங்க முடியவில்லை. அவரைச் சுற்றி ஒரே கூட்டம். இடித்து நெரித்துக் கொண்டு போகக் கூடாது என்று அம்மா தடுத்துவிட்டார்கள்'' என்றாள் லாவண்யா குறையோடு.

''நீ பரவாயில்லையே அக்கா. இந்த பானுவிடம் வடேகர் என்றால் எந்த சினிமாவில் நடிக்கிறார் என்று கேட்பாள். கிரிக்கெட் வீரர்களில் சலீம்துராணி மட்டும் தெரியும். ஏனென்றால் அவர் ஒரு சினிமாவில் நடித்து விட்டாராம்'' என்றான் வினு ஏளனமாக.

''ஆமாம், பெரிய வடேகர், இங்கிலாந்தில் நன்றாக மண்ணைக் கவ்விவிட்டு வந்தாரே'' என்று சமயம் வாய்த்தது என்று மட்டம் தட்டினாள் பானு.

லாவண்யாவுக்கு இது அநியாயமாகப்பட்டது. ''விளையாட்டு என்றால் வெற்றி தோல்வி சகஜம். பானு' என்றாள்.

''அப்படி சொல்லு அக்கா. முன்பெல்லாம் வெற்றி தேடித் தரவில்லையா? இங்கிலாந்து டெஸ்ட் சமயம் ஏதோ கெட்ட காலம். அதோடு சந்திரசேகருக்கும் கையில் அடி.''

'தன்னை அறியாமலேயே வினுவிடம் பாஸ் மார்க் வாங்கிவிட்டோம் என்று' லாவண்யாவுக்கு இப்போது தான் புரிந்தது. தனக்குள்ளே புன்னகைத்துக் கொண்டாள்.

வீடு வந்துவிட்டது என்றார்கள். காரில் இருந்து இறங்கிப் பார்த்த லாவண்யாவுக்கு ஒரே ஆச்சரியம். ஏனெனில் வானை அளாவி நின்றது வீடு. பிறகு பார்த் தால் அந்தக் கட்டிடத்தில் மொத்தம் பன்னிரண்டு வீடு இருக்கிறது என்றார்கள். இவர்கள் வீடு மூன்றாவது மாடியில் சாலைப்பக்கம் உள்ள பகுதி. எல்லாரும் சென் றார்கள்.

தனி வீடு. இல்லை என்று சொல்லவே முடியாதபடி வீட்டில் சகல வசதிகளும் இருந்தன. ''வீட்டைப் பிறகு பார்க்கலாம். முதலில் குளித்துச் சாப்பிடு'' என்றார் சிவநாதர். அவரும் ஒரு குளியலறைக்குச் சென்றார்.

லாவண்யாவுக்கு நல்ல சூடாக வென்னீர் வைத்தி ருந்தார்கள். நன்கு குளித்துவிட்டு வரவும் உணவு வேளை.

பல நாட்களுக்குப் பிறகு நல்ல சுவையாக உண் டாள் லாவண்யா. 'அம்மா படுத்தபின் சமையலாவது

சாப்பாடாவது?' மனம் மீண்டும் தாயிடம் ஓடியது. மேலே உணவு ரசிக்கவில்லை. பேச்சும் ரசிக்கவில்லை. தட்டில் இருந்ததை மருந்தென விழுங்கிவிட்டு எழுந்தாள்.

லாவண்யாவின் முகவாட்டத்தைக் கவனித்து, அவள் கூடவே வந்தார் திலகவதி.

லாவண்யாவுக்கு என்று ஒதுக்கியிருந்த அறைக்கு அவளை அழைத்துச் சென்றார். "படுத்துக் கொஞ்ச நேரம் தூங்கம்மா. தூங்கி எழுந்தால் உடம்பும் மனமும் கொஞ்சம் தெளிவாக இருக்கும்" என்றார். "தலை காய்ந்துவிட்டதா?" என்று தொட்டுப் பார்த்தார். "பரவா யில்லை. கிட்டத்தட்டக் காய்ந்துவிட்டது. கொஞ்சம் பொறு" என்று லாவண்யாவின் கூந்தலை இரு பிரிவாகப் பிரித்து லேசாகப் பின்னி விட்டார். "இனி படுத்துக் கொள்" என்றார்.

தூக்கம் வரும் என்று லாவண்யாவுக்குத் தோன்ற வில்லை. ஆயினும் திலகவதியைத் திருப்தி செய்வதற்கா கப் படுத்துக் கொண்டாள்.

போர்வையை அவளது இடைவரை இழுத்துப் போர்த்தி விட்டார் திலகவதி. மின்விசிறியைச் சுழல வைத்து கதவை லேசாகச் சாத்திக் கொண்டு வெளியே சென்றார்.

எவ்வளவு பரிவு? எப்படிப் பார்த்துப் பார்த்துச் செய்கிறார். எண்ணி எண்ணி வியந்தாள் லாவண்யா.

'ஆனால் இவ்வளவு பரிவும் பாசமும் காட்டுகிறவர் முதலில் ஏன் கண்ணில் கலக்கத்தைக் காட்ட வேண்டும்?

அல்லது லாவண்யாவின் விழிகளில்தான் கோளாறா? தப்பாக எண்ணிவிட்டோமா?'

ஏதேதோ யோசனையின் ஊடே லாவண்யா கண் ணயர்ந்து போனாள். நல்ல உறக்கம்.

இடையே திலகவதி உள்ளே வந்து எட்டி பார்த்தது அவளுக்குத் தெரியாது. மாலை வெயில் படுக்கை வரை வருவதைக் கண்டு திரைச்சீலையை இழுத்து மூடி வெயிலை அவர் தடுத்தது தெரியாது. குழந்தைபோல் உறங்கிக் கொண்டிருந்த அவளது முகத்தையே பார்த்த படி அவர் கட்டிலருகே வெகுநேரம் நின்றதோ ஒரு பெருமூச்சுடன் வெளியேறியதோ எதுவுமே லாவண்யா வுக்குத் தெரியாது. அவ்வளவு தூரம் தன்னை மறந்து தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்.

அவளது துயில் மெல்லக் கலையத் தொடங்கிய போது மணி ஐந்தரை ஆகிவிட்டது. கலைந்தும் கலை யாத அரை குறையான உறக்க மயக்கத்துடன் அவள் விழிகளை மெல்ல மெல்லப் பாதி திறந்தாள். அப்போது அவளது காதுகளில் அழுத்தமான ஓர் ஆண் குரலில் பேச்சு விழுந்தது.

''ஏன் சித்தி, அந்த எழிலூர் இளவரசியார் வந்தா யிற்றா?'' என்று வெகு எகத்தாளமாக அந்த ஆண் குரல் யாரிடமோ வினவியது.

## 4

''உஸ், மெல்லப் பேசுடா. அவள் அடுத்த அறை யில்தான் தூங்கிக் கொண்டு இருக்கிறாள்'' எனத் திலகவ

தியின் குரல் தொடர்ந்து ஒலிப்பதும் லாவண்யாவின் காதுகளில் விழுந்தது.

ஒருகணம் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏதும் கனவு காண்கிறோமா என்று தோன்றியது. அதற்குள், ''ஏன் சித்தி பயப்படுகிறீர்கள்? மகாராணியாரின் உறக்கம் கலைந்தால் தலையைக் கொய்து விடுவாளோ?'' என்றபடி அவன் சொல்லும் சத்தம் கேட்டது.

கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு சுற்றிலும் பார்த்தாள். இடம் பொருள் புரிந்தது. கூடவே அந்த ஆண் குரலுக்கு உரியவன் தன்னைத்தான் ''எழிலூர் இளவரசி'' ''மகாராணியார்'' என்றெல்லாம் கிண்டல் செய்திருக்கிறான் என்பதும் புரிந்தது. 'சித்தி' என்றானே. அப்படியானால் பேசியவன் அருணாகத்தான் இருக்க வேண்டும். அவனுக்குத் தன்னைப் பிடிக்கவில்லை' என்று லாவண்யா ஊகித்தது எவ்வளவு சரியான கணிப்பு! 'எழிலூர் இளவரசியாமே, லாவண்யா என்ற பெயரைக் கிண்டல் செய்வதாக எண்ணிக் கொண்டானோ? இருக்கட்டும், இருக்கட்டும்'' சட்டென எழுந்தாள் லாவண்யா.

அவள் எழுந்த அரவம் கேட்டுத் திலகவதி உள்ளே வந்தாள். ''விழித்து விட்டாயா லாவண்யா? காபி குடிக்கிறாயா?'' என விசாரித்தார்.

ஒருகணம் அவரது முகத்தை நேராகப் பார்த்தாள் லாவண்யா. பிறகு, ''நான் முகம் கழுவ வேண்டும்'' என்று திரும்பினாள்.

''கழுவிக் கொள். வெந்நீர் வேண்டுமா?''

''ஊகூம். எனக்குப் பச்சைத் தண்ணீர்தான் பிடிக்கும்'' என்று குளியலறைப் பக்கம் திரும்பினாள் லாவண்யா.

''கழுவிவிட்டு அங்கேயே வந்துவிடு. அதற்குள் நான் காபி கலந்து வைக்கிறேன்'' என்று வெளியேறினார் திலகவதி.

நன்றாக சோப்புப் போட்டு கைகால் கழுவினாள் லாவண்யா. அழுந்தத் துடைத்துவிட்டு சந்தனப் பவுடரை சீராக முகத்தில் பூசினாள். மையிட்டாள், கோபி போல செஞ்சாந்துப் பொட்டிட்டாள். தலை வாரிக் கொண்டு நாதோரமாக இரு கேசச் சுருளைக் கலைத்துக் காற்றில் அலையவிட்டாள்.

ஒரு கணம் யோசித்தாள். இந்த வீட்டின் வரவேற்பு அறையில் இளம் பச்சை வண்ணம். அதில் பளிச்சென்று தெரியும்படியாக ஆரஞ்சு வண்ணச் சேலை உடுத்தாள். அதே நிறத்தில் வளையல்களும் காதணிகளும் மடமட வென்று கைகளிலும் காதுகளிலும் ஏறின. பொருத்தமாகப் பவளம் பதித்த தங்கமாலையைக் கழுத்தில் அணிந்தாள். அதிகமாகத் தெரியவே கழற்றி விட்டாள். கண்ணாடியில் பார்த்து திருப்தி அடைந்தவளாக அறையை விட்டு வெளியேறினாள்.

வரவேற்பு அறையை நெருங்கும்போது புதிய குரல்கள் கேட்டன. 'இதில் யார் அந்தத் திமிர் பிடித்தவன்' என்ற யோசனையோடு மெல்ல நடந்தாள்.

லாவண்யாவின் தலையைக் கண்டதும் சிவநாதர் அவசரமாக எழுந்தார். ''வா கண்ணம்மா. நன்றாகத் தூங்கினாயா?'' என்று எதிர்கொண்டு அழைத்து வந்தார்.

"சரியான கும்பகர்ணியாகத் தூங்கினேன், மாமா" என்று சிரித்தாள் லாவண்யா.

"இங்கே பாரம்மா. இந்தப் பையன்தான் நம் மணி வண்ணன் மிகவும் நல்ல பையன் என்றேனே. இவள் பக்கத்து பிளாக்கில் வசிக்கும் நீது. இவர் அவளுக்கு சினேகிதர். இவர் நம் ஆபீஸ் மானேஜர்" என ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்தினார், சிவநாதர்.

வணக்கங்களைப் பரிமாறிக் கொள்ளும் போதே 'அருண் எங்கே?' என்று யோசித்தாள் லாவண்யா. ஏனெனில் இவர்களில் யாரும் அவளை "எழிலூர் இளவரசி" என்றவன் இல்லை. அந்தக் குரலே வேறு. வேணுவின் மென்மையான குரல் இல்லை. ஆபீஸ் நிர்வாகியின் வயதான குரலோ, அந்த நீதுவினுடைய தோழனின் கீச்சுக் குரலோ இல்லை. அவன், அவன் எங்கே?

அவள் எல்லோரிடமும் புன்னகையை முடித்துக் கொண்டபோது வரவேற்பு அறையை ஒட்டிய வராந்தா விலிருந்து ஓர் இளைஞன் உள்ளே வந்தான். அவனது கூரிய விழிகள் லாவண்யாவின் மேல் படிந்தன. லாவண் யாவும் திரும்பிப் பார்த்தாள். நல்ல உயரம்; கூர்மையான கண்கள்; எதிராளி மனதில் இருப்பதைக் கொக்கிபோட்டு இழுப்பதைப் போல பார்வை; அழுத்தமான உதடுகளில் புன்னகையே அறியாதது போன்ற தோற்றம்—கையில் இருந்த சிகரெட்டைக் கீழேபோட்டு மிதித்து அணைத் தான். பிறகு அறையினுள் வந்தான்.

'யாரும் சொல்லுமுன்பாகவே இவன்தான் அந்த அருண்' என்பது லாவண்யாவுக்குப் புரிந்து போயிற்று.

சட்டெனப் பார்வையைத் திருப்பினாள். ''மிஸ்டர் மணி வண்ணன், நீங்கள் தனியாக இருந்தால் உங்கள் சாப்பாட் டுக்கு...'' என்று ஏதோ சொல்லத் தொடங்கினாள்.

ஆனால் சிவநாதர் விடவில்லை. ''லாவண்யா'' என்று அவசரமாக அழைத்தார். ''இங்கே பார். இவன் தான் நான் சொன்னேனே இந்த அருண். எப்படி இருக்கி றான் பார்த்தாயா?'' என்றார் பெருமையாக. ''அருண், இவள் தானப்பா லாவண்யா. செந்திருவின் ஒரே மகள்'' என்றார் தொடர்ந்து.

''அப்படியா சித்தப்பா?'' என்றான் அருண் வறட்சி யாக. லாவண்யாவின் பக்கம் திரும்பினான். ''வணக் கம்'' என்றான் உணர்ச்சியே இல்லாத குரலில்.

'செந்திருவுக்கு இந்த ஒரு மகள் கூட இல்லாதிருந் தால் நலமாகியிருக்கும் என்று எண்ணுகிறானோ?' லாவண்யாவுக்குக் கோபம் வந்தது அடக்கிக்கொண்டு பட்டாம்பூச்சி போல இமைகளைப் படபடவென்று கொட் டினாள். கண்களை மலர்த்தி அருணை ஏற இறங்கப் பார்த்தாள். ''பரவாயில்லை மாமா, நீங்கள் சொன்னது போல ஆள் ஐம்மென்றுதான் இருக்கிறார். துணிக்கடை பொம்மைக்கு பதிலாக நிறுத்தி வைத்தால் வித்தியாசமே தெரியாது'' என்றாள் கிண்டலாக.

அவன் முகம் கருக்க மூச்சை வேகமாக உள் வாங்குவது கேட்டது. தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

சிவநாதர் கட கடவென்று உரக்கச் சிரித்தார். ''உன் னைச் சரியாக மட்டம் தட்டி விட்டாளேடா. வெறும் துணிக்கடை பொம்மை என்று சொல்லி விட்டாளே! இவள் உன்னை மடக்கு மடக்கென்று மடக்கி விடுவாள் பார்'' என்றார் பெருமையுடன்.

'இனி இவனிடம் என்ன பேச்சு?' என்பது போல மணிவண்ணனிடம் திரும்பினாள் லாவண்யா. ''அப்புறம் மிஸ்டர் மணிவண்ணன். நாம் என்னவோ வெகு சுவாரசியமாகப் பேசிக் கொண்டு இருந்தோமே?...ம்... வந்து விட்டது. உங்களுக்குத் தனிமையில் சாப்பாட்டுக்கு என்ன செய்கிறீர்கள்?''

மணிவண்ணன் லேசான புன்னகையோடு பதில் கூறினான். ''அதில் கஷ்டம் ஒன்றும் இல்லை மிஸ் லாவண்யா. இங்கே ஓட்டல்களில் சாப்பாடு நன்றாகவே இருக்கும். அதோடு நாக்கு செத்தால் இங்கே ஓடி வந்து விடுவேன்'' என்றான்.

''சட்டி காலி என்றால்தான் மணி சார் எழுந்திருப்பார்'' என்று நகைத்தான் வினு.

''மானத்தை வாங்குகிறாயே'' என்று கூடச் சேர்ந்து சிரித்தான் மணிவண்ணன்.

லாவண்யாவுக்கு சிரிப்பு வந்தது.

அப்போது சிற்றுண்டித் தட்டுகளுடன் பானு வந்தாள். அவள் பார்வை சிரிப்பவர்களின் பக்கம் பாய்ந்து அகன்றது.

''கொண்டுவா, பானு பாவம்; மிஸ்டர் மணிவண்ணன் வீட்டுச் சாப்பாட்டுக்கு ஏங்கிப்போய் வந்திருக்கிறார். அவருக்கு முதலில் கொடுக்கலாம்'' என்று பானுவின் கையில் இருந்த ட்ரேயில் இருந்து ஒரு சிற்றுண்டித் தட்டை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

ட்ரேயைக் கைமாற்றிக் கொண்டு பானுவும் ஒரு தட்டை நீட்டினாள்.

அதற்குள் லாவண்யா அளித்த தட்டை வாங்கி விட்ட மணிவண்ணன் அதை மறுத்தான். ''வேண்டாம் பானு என்னதான் நான் சாப்பாட்டுப் பிரியன் என்றாலும் எனக்கு இருப்பது ஒரு சாண் வயிறுதானே. இந்த ஒரு தட்டு போதும்'' என்று வேடிக்கை பேசினான்.

வினுவும் சிரித்துக் கொண்டே, ''உனக்குக் கொஞ் சம் சுறுசுறுப்பு வேண்டும், பானு'' என்று கேலி செய்தான்.

பானு முகம் கடுக்கத் திரும்பும்போது அருணின் கை நீண்டு அவள் கையிலிருந்த தட்டைப் பெற்றுக் கொண்டது.

சாவதானமாக அவன் பார்த்த பார்வையில் லாவண் யாவின் முகம் சிவந்தது.

நல்ல வேளையாக 'டக்டக்' என்ற ஷூவின் சத்தம் எல்லாரது கவனத்தையும் கவர்ந்தது.

தடபுடலாக ஓர் இளைஞன் உள்ளே வந்து கொண்டி ருந்தான். காலிலிருந்து தலைவரை அலங்கார நாயகன், முகம் பார்க்கலாம் போலப் பளபளத்த முனை வளைந்த ஷூக்கள், பெல்பாட்டம் பேண்ட். நல்ல சிவப்பில் ஒரு முழுக்கை ஸ்லாக் சட்டையை ''இன்'' பண்ணி சாண் அகலத்தில் சரிகை பெல்ட் போட்டிருந்தான். கழுத்தில் ஒரு மணி மாலை, கவனமாகக் கலைத்து விடப்பட்ட சிகை அலங்காரம், லாவண்யாவுக்கு அவனைப் பார்த்த துமே கண்ணில் சிரிப்பு மலர்ந்தது.

வந்ததுமே புதியவன் பார்வை இளம் பெண்களிடம் தான் பாய்ந்தது. ''அல்லோ பானுதேவி, இந்தப் பச்சை நிற ஜீன்ஸ் உன் அழகை எப்படி எடுத்துக் காட்டுகிறது தெரியுமா?'' என்று பானுவுக்கு ஐஸ் வைத்தான்.

மணிவண்ணனிடம் கொஞ்சம் கோபமாக நின்று கொண்டிருந்த பானுவுக்கு ஒரேயடியாகக் குளிர்ந்துவிட்டது.

''மெய்யாகவா சொல்லுகிறீர்கள்?'' என்றாள் கிளியின் குரலில்.

''எங்கே அடித்துச் சத்தியம் செய்ய வேண்டும்? கையிலா தலையிலா'' என்று அடித்துப் பேசினான் அவன். அதற்குள் பத்துத் தடவை அவனது பார்வை லாவண்யா மேல் படிந்துவிட்டது. பிறகு அப்போதுதான் பார்ப்பவன் போல அவள் பக்கம் திரும்பினான். ''ஓ .. என்ன அழகு... அடடே என்ன பொருத்தமான பெயர். உங்கள் அழகுக்கு...'' என்று தொடங்கினான்.

''மன்னிக்க வேண்டும். நீங்கள் ஏதோ தவறாக எண்ணிப் பேசுகிறீர்கள்'' என்று சிரிக்காமல் சொன்னாள் லாவண்யா.

வந்தவன் தன் பேச்சு மழை ஓய்ந்து அசடு வழிந்தான். வீட்டிலேயே மனப்பாடம் செய்து கொண்டு வந்த வார்த்தைகள் போலும். எதிர்பாராத இடையீட்டினால் அவனுக்குக் காலும் ஓடாமல் கையும் ஓடாமல் திருதிருவென்று விழித்தான்.

பேயடித்தாற்போல அவன் முகத்தைப் பார்த்ததும் லாவண்யாவுக்குச் சிரிப்பு அடக்கமாட்டாமல் வந்தது. சட்டெனத் தலையைக் குனிந்து அதை மறைத்தாள்.

அதற்குள் அவன் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, ஆ...அதனாலென்ன, நீங்களும் வெகு அழகாகத்தான் இருக்கிறீர்கள். உங்கள்... பெயர் என்ன மிஸ்?'' என்று திக்கித் திணறி விசாரித்தான்.

''லாவண்யா'' என்றாள் அவள் சாதுவாக.

அவனோ மீண்டும் வாயைப் பிளந்தான், ''பின்னே இல்லை என்கிறீர்களே.''

''என்ன இல்லை என்றேன்?''

''லாவண்யா இல்லை என்றீர்களே.''

''இல்லையே.''

அவன் மீண்டும் விழித்தான்.

''மெய்யாகவேதான் கேட்கிறேன். நான் லாவண்யா இல்லை என்று எப்போது சொன்னேன்?'' என்று அழுத்தம் திருத்தமாக வினவினாள் லாவண்யா.

வந்தவன் மீண்டும் அசடு வழிந்தான். ''கி... கிட்டத் தட்ட அது மாதிரித்தானே...''

லாவண்யா கலகலவென்று நகைத்தாள். ''நீங்கள் படபடவென்று பேசியதும் நான் யாரையோ என்று எண்ணிவிட்டேன் மிஸ்டர்...''

''கேபால்'' என்றான் அவன் பெருமையாக.

''கேபால் என்றுதான்!'' லாவண்யாவுக்கு ஆச்சரியம். ''நான் கோபால் என்றுதான் கேட்டிருக்கிறேன்.''

''லாவண்யா இவன் பெயர் காபலி'' என்றார் சிவநாதர்.

''அதெப்படி மாமா கபாலி கேபால் ஆயிற்று?'' என்று சுவாரசியமாகக் கதை கேட்டாள் லாவண்யா.

''அதுவா? ரொம்ப சிம்பிள் மிஸ் லாவண்யா. கபாலி என்ற பெயர் பட்டிக்காடு போல இருக்கிறது

இல்லையா? அதனால் கவை எடுத்துவிட்டு "பாலி" ஆக்கினேன். உடனே எல்லாரும் 'வைஜயந்திமாலாவின் கணவனா?' என்று விசாரிக்கத் தொடங்கி விட்டார்கள். எனக்கு என்ன அவ்வளவு வயதாகி விட்டதா என்ன? உடனே அந்த "இ" காரத்தை எடுத்துவிட்டு கேயைச் சேர்த்து "கேபால்" ஆக்கிவிட்டேன். எப்படி என் ஐடியா?" என்று பெருமையாகக் கேட்டான் கபாலி.

"பிரமாதம்!" என்று விழுந்து விழுந்து சிரித்தாள் லாவண்யா. வேணுவுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்த அருண், தலையைத் திருப்பித் தன்னைப் பார்ப்பதை லாவண்யா உணர்ந்தாள்.

அப்போது திலகவதி கையில் காபிக் கோப்பைகள் அடங்கிய தட்டுடன் வந்தார்.

அருண் எழுந்தான். திலகவதிக்கு உதவி புரியும் நோக்கத்துடன் லாவண்யாவும் எழுந்து அவரிடம் சென்றாள்.

அதைக் கவனித்த சிவநாதர் கூறினார், "திலகம், கவனித்தாயா? அதே சுறுசுறுப்பு, அதே அழகு, அதே பண்பு எல்லாம் அவளுடைய தாய் செந்திரு போலவே இருக்கிறாள் அல்லவா?"

ஓர் அடி பிசகாக எடுத்து வைத்ததாலோ அல்லது சேலை தட்டியதாலோ திலகவதி தடமாறினார். கைப்பிடியிலிருந்து காபிக் கோப்பைகள் அடங்கிய தட்டு நழுவியது.

# 5

வினாடி நேரம்தான். திலகவதியின் தடுமாற்றத்தினால் தட்டு கைநழுவக் கண்டாள், லாவண்யா. சரேலெனக் கையை நீட்டித் தட்டைப் பிடித்தாள். அதே சமயம் அருணின் கரமும் ஒருபுறமாக தட்டை தாங்கியது. காபியும் கோப்பைகளும் தப்பின.

'தட்டை அவன் பிடியில் விடுவதா, தானே ஏந்திச் செல்வதா' என்று புரியாமல் லாவண்யா நிமிர்ந்து அருணைப் பார்த்தாள்.

அவனது பார்வை அவளைத் தீ போலச் சுட்டது. என்னவோ தட்டைத் தடுமாற வைத்ததே அவள்தான் என்பது போலப் பார்வையாலேயே குற்றம் சாட்டுகிறானே. எதற்காக அவளை வெறுக்க வேண்டும். வெறுக்கும்படி அவளிடம் என்ன உள்ளது? லாவண்யா அறிந்த வரையில் ஏதுமில்லை. காரணம் இல்லாமல் அருண் அவளை வெறுப்பதனால் லாவண்யா வெறுப்பதற்கு இந்த ஒரு காரணம் போதுமே. ஆத்திரத்துடன் அவனை உறுத்து விழித்தாள்.

அதற்குள்ளாகச் சமாளித்துக் கொண்ட திலகவதி தட்டை அழுந்தப் பற்றிய வண்ணம் முன்னே நடந்தார்.

லாவண்யா முகத்தைத் திருப்பிக் கொண்டு மணிவண்ணன் பக்கத்தில் சென்று அமர்ந்தாள். ''மிஸ்டர் மணிவண்ணன் உங்கள் அறை எங்கே இருக்கிறது? வசதியாக இருக்குமா? என்று ஏதோ விசாரித்தாள்.

''இம்...அதெங்கே, ஓர் எலிப் பொந்து மாதிரி சின்ன இடம். அதில் வசதியாவது? மண்ணாங்கட்டியா வது? ஏன் மணி?'' என்றான் கபாலி.

''எலி வளையானாலும் தனி வளை, என்னைப் பொறுத்தவரையில் அது அரண்மனை.''

''ஆகாகா! எவ்வளவு பெரிய அரண்மனை? அது அரண்மனை என்றால் என் வீட்டை என்ன சொல்வது? ஒரு பெரிய ஹால், இரண்டு பெரிய படுக்கை அறைகள். குளியலறை வசதிகள் வேறு உண்டு. சாப்பாட்டு அறை. சமையல் அறை இது போகத் தரையெல்லாம் மொசைய்க் சுவரெல்லாம்...''

''உங்கள் வீட்டை விற்கப் போகிறீர்களா மிஸ்டர் கேபால்?'' என்று விசாரித்தாள் லாவண்யா.

''என்ன என்ன? என் வீட்டையாவது, விற்பதா வது? ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?'' எனத் திகைத்தான் கபாலி.

''நிரம்பவும் பிரமாதமாக வர்ணித்தீர்களே, விற்கும் பொருளைத்தானே யானை, பூனை என்று விளம்பர படுத்துவார்கள் என்று நினைத்தேன்.''

''இ... இல்லை. என் வீடு மெய்யாகவே நன்றாக இருக்கும்'' என அசடு வழிந்தான் கபாலி.

''அப்படியா மிஸ்டர் கேபால்? நான்தான் தப்பாக நினைத்துப் பேசிவிட்டேன். தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்'' என்று வெகுவாகப் பணிந்து பேசினாள் லாவண்யா.

''இதில் எல்லாம் மன்னிப்பதற்கு என்ன இருக்கிறது? நீங்கள் கேட்பதற்காக வேண்டுமானால் சொல்லுகிறேன், நான் உங்களை மன்னித்து விட்டேன்'' என்று பெருந்தன்மையாகப் பதில் கூறினான் கபாலி.

லாவண்யாவுக்குச் சிரிப்பு பொங்கியது. அடக்க மாட்டாமல் அவள் திணறியபோது திலகவதி அவளைக் கவனித்தார். ''இந்தத் தட்டை உள்ளே வைத்துவிட்டு வாம்மா'' என்று உள்ளே அனுப்பினார்.

உள்ளே சென்று நன்றாகச் சிரித்துவிட்டு வந்து அமர்ந்தாள் லாவண்யா.

கபாலி தொண்டையைக் கனைத்துக் கொண்டான். 'என்ன பேசப் போகிறான்?' என்று புன்னகையோடே திரும்பிப் பார்த்தாள் லாவண்யா.

'மிஸ் லாவண்யா, எனக்கு மிகவும் வேதனை.''

''வேதனை?'' லாவண்யா விழிகளை விரித்தாள்.

''ஆமாம், உங்கள் பெற்றோர் பற்றி பானு கூறியபோது எனக்கு அழுகையே வந்துவிட்டது. மிகவும் பரிதாபம், வாழ்க்கையில் அனாதை ஆகிவிட்டோமே என்று நினைக்கும் போது மிகவும் வருத்தமாகத்தான் இருக்கும். ஆனால் பாவம், உங்கள் தாயாராவது உயிரோடு இருந்திருக்கலாம். அதை நினைக்கும்போது...'' கண்ணீர் வராத கண்களைக் கைக்குட்டை கொண்டு நாசூக்காக ஒற்றி எடுத்தான். லாவண்யாவின் நெஞ்சில் வேதனையும் வெறுப்பும் மண்டியது. 'இந்த மாதிரி அல்காப் பேர்வழி கூடவா என்னிடம் இரக்கம் காட்டுவது?' என்று உள்ளூரத் துடித்தாள். முகத்தில் உணர்ச்சியைக் காட்டாமல் மறைத்தாள்.

"நீங்கள் சொல்வது தவறு மிஸ்டர் கபாலி. என் தந்தையைப் பிரிந்த பிறகு தனியே என் தாய் வாழ நேர்ந்திருந்தால் அதுதான் பரிதாபமாயிருக்கும். நான் சமாளித்துக் கொள்வேன். அதோடு இங்கே மாமா அத்தை எல்லாரும் எனக்கு இருக்கிறார்களே!" என்றாள் சாதாரணமான குரலில்.

"நீங்கள் சொல்வது மிகவும் சரி, லாவண்யா. இந்த வீட்டிற்கு வந்தால் சொந்த வீட்டுக்கு வந்த உணர்ச்சிதான் எனக்கு வரும். தாய்க்குத் தாயாக பானுவுடைய அம்மா வின் அன்பு உங்கள் வேதனையை..."

"பம்பாயைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் லாவண்யா?" என்று சட்டென்று பேச்சை மாற்றினான் மணிவண்ணன்.

நன்றியுடன் புன்னகை செய்தாள். லாவண்யா "உங் கள் பம்பாய் நன்றாக இருக்கிறது. பார்ப்பதற்கு மட்டு மல்ல. மிதமான வெயில். குளிரவும் இல்லை."

"இப்போது இப்படிச் சொல்கிறீர்கள். மழை நாளில் தாங்க முடியாது. இரவு பகல் இடைவிடா மழை பெய்து கொண்டே இருக்கும். மூச்சுவிட முடியாத மாதிரி கஷ்ட மாகிவிடும்" என்றான் மணிவண்ணன்.

"அதுமாதிரி நேரம் ரேடியோ கிராமைப் போட்டுக் கொண்டு குஷனில் சாய்ந்து கொண்டு விடுவேன். ஒரு கஷ்டம் தெரியாது" என்று பெருமையடித்தான் கபாலி.

லாவண்யாவுக்கு அவன் பெருமை அலுப்பாக இருந்தது. "வேலைவெட்டி உள்ளவர்கள் அப்படி இருக்க முடியாது பாருங்கள்" என்றாள் கிண்டலாக.

''கேபாலுக்கு அந்த மாதிரி முதுகு ஒடிய உழைத் தாக வேண்டிய கட்டாயம் இல்லை'' என்று அலட்சியமா கப் பேசினாள் பானு. இவ்வளவு நேரம் உம்மென்று இருந்தவள் இப்போதுதான் வாய் திறந்து பேசினாள். அந்த ஒரு பேச்சில் மணிவண்ணனது முகம் வாட கபாலியின் முகம் களிப்பில் மலர்ந்தது.

இது லாவண்யாவுக்குப் பொறுக்கவில்லை. ''குந்தித் தின்றால் குன்றும் மாளும்'' என்றாள்.

''நான் ஒரேயடியாக உட்கார்ந்து உண்பவன் அல்ல மிஸ் லாவண்யா. எனக்கும் ஒரு தொழில் இருக்கிறது. ஆனால் எந்நேரமும் மாடாக உழைக்க வேண்டிய கட்டாயம் எனக்கில்லை.'' என்றான் கபாலி.

''கேபால், இவர்களிடம் ஏன் வீண் பேச்சு? நாளை ரிஷிகபூரின் வெளிப்புறப் படப்பிடிப்பு இருக்கிறதாம். போகலாமா, என்று நீது கேட்டாள்,'' என்று கபாலியை வேறுபுறம் இழுத்துச் சென்றாள் பானு. முகவாட்டத்து டன் அதை பார்த்திருந்தான் மணிவண்ணன்.

மணிவண்ணனது மனம் லாவண்யாவுக்குப் புரிந் தது. அவனை அவளுக்குப் பிடித்தும் இருந்தது. அமைதி யான பேச்சும் கனிவான பார்வையும் அவனுக்குச் சொந்தம். கபாலியின் ஆடம்பரமும் தற்பெருமையும் அவனுக்கு இல்லை. அதே சமயம் அருணின் அழுத்த மும் அலட்சியமும் கூட இல்லை. இதமான இனிமை யான குணம். அவளது இழப்பை மதித்தான். வீணான அலங்கார வார்த்தைகளால் வேஷம் போடவில்லை. இதெல்லாம் அவளுக்கு அவன்மீது பாசத்தை ஊட்டியது. கடைசியாக அவன் கிளம்புகையில் அவளுக்கு மனமே

சரியில்லை. ''அத்தை சாப்பாடு என்கிறீர்களே — உண்ணாமலே கிளம்புகிறீர்களே'' என்று குறைப்பட்டாள்.

''வேறு யாராவது சாப்பாட்டுக்கு அழைத்திருப்பார்கள். இல்லாவிட்டால் அவனாவது ஓசிச் சாப்பாட்டை விட்டுக் கிளம்புகிறதாவது?'' என்றான் ஒரு காதை இவர்கள் பேச்சில் பதித்திருந்த கபாலி.

மணிவண்ணன் ஏதோ கேட்பதுபோல பானுவைப் பார்த்தான். ஆனால் அவளோ இந்தப் பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை. அவன் முகம் வாடியது. பிறகு அவன் தங்கவில்லை. சாப்பிட்டுவிட்டுச் செல்லும்படி திலகவதி எவ்வளவோ வற்புறுத்தியும் நில்லாமல் சென்று விட்டான்.

கிளம்பும்போது பானுவிடம் சென்று, ''வரட்டுமா பானு?'' என்று விடைபெறும் போதுகூட பானு அவனை நிமிர்ந்து பார்த்து பதில் சொல்லவில்லை. ''ம் ம், சரி சரி'' என எங்கோ பார்த்துச் சொன்னாள். மேலே பேச்சின்றி அவன் சென்று விட்டான்.

லாவண்யாவிற்கு நெஞ்சில் வலித்தது. 'இந்த பானு ஏன் இப்படி நடந்து கொண்டாள். அவளிடம் ஒரு பார்வை ஒரு சிரிப்புக்காக மணிவண்ணன் ஏங்குவது நன்கு தெரிந்தது. அதை ஏன் அவனுக்கு அவள் தரக் கூடாது? இந்த வெற்று வேட்டுக் கபாலியிடம் சிரித்துச் சிரித்து உரிமையுடன் பேசுகிறாளே. இந்த மணிவண்ணன் நம் தந்தையிடம் வேலை பார்க்கிறவன் தானே என்ற அலட்சியமா? அல்லது கபாலியின் ஸ்டைலும் பணமும் அவளுக்கு மயக்கத்தைத் தருகின்றனவா?'

கபாலியை எண்ணும்போதே அவளுக்குக் குமட்டியது. அவன் பார்வை ஆண்கள்மேல் படியவே இல்

லையே. கிட்டப் பார்வை உள்ளவர்களுக்குத் தூரத்தில் உள்ளது எதுவும் தெரியாதாம்; இவனுக்கு ஆண்களே கண்ணில் படுவதில்லை போலும். அந்த நீதுவின் பாதி திறந்த உடலில் அவன் பார்வை மேய்வதைக் கண்டதும் இழுத்து மூடத் தோன்றியது அவளுக்கு. அருவருப்புடன் உடலை குலுக்கிக் கொண்டாள். இந்தக் குறை, ஏன் பானுவின் கண்ணில் படவில்லை? பொருந்தாத நிறமா லாவண்யாவின் கண்களை உறுத்துகிறதே...

லாவண்யா யோசனையோடு திரும்பிய போது அருண் அவள் அருகில் நிற்பது தெரிந்தது. அவனது பார்வை காலிலிருந்து தலைவரை அவளை அளவிட் டது. அலட்சியமாக முகத்தை திருப்புவதா? அன்றி அவனையும் பதிலுக்கு அதே போல ஏற இறங்க பார்ப்பதா?' என்று யோசித்தாள் லாவண்யா.

ஆனால் இரண்டையுமே அவளால் செய்ய முடிய வில்லை. அன்று வரை அவள் அறிந்திராத விதமாக இதயம் அமைதியிழந்து 'படபடத்தது அந்தப் பட படப்பை அவன் அறியா வண்ணம் மறைத்துக் கொண்டு தன்னால் இயன்ற மட்டும் இயல்பாக நின்றாள் லாவண்யா.

அவன் பார்வை எதையோ தீவிரமாக மனைவி யிடம் பேசிக் கொண்டிருந்த சிவநாதரிடம் சென்று மீண்டது. பிறகு ''உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்'' என்றான் மெல்லிய ஆனால் அழுத்தமான குரலில்.

கண்டிக்கும் உயர் அதிகாரி போல அவன் தொடங்க வும் அவளுக்கு ஆத்திரம் வந்தது. அதுவரை இருந்த தயக்கம் மறைந்தது. ''கேட்டுத்தான் ஆக வேண்டும் இல்லையா.'' என்று உதட்டைச் சுளித்தாள்.

அவன் முகம் கருத்தது. ''ஆமாம். அப்படித்தான். அதை நன்றாகக் கேட்டுக் கொள். எந்த விதமான உறவும் இல்லாமல் உன்மேல் பரிதாபப்பட்டு உன்னை இங்கே அழைத்து வந்திருக்கிறார் சிவநாத சித்தப்பா. உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்து விடாமல் நன்றியோடு நடந்து கொள்'' என்றான் அதட்டலாக.

நெஞ்சு துடிக்க லாவண்யா நிமிர்ந்தாள்.

## 6

லாவண்யாவின் நெஞ்சு வலியால் துடித்தது. தந்தையையும் தாயையும் இழந்த நிராதரவான நிலை விசுவரூபம் எடுத்தது.

''ஆனந்தமாக இருந்த குடும்பம் கலைந்து அவள் தனித்து விடப்பட்ட நிலையை அவன் சொல்லிக் காட்ட வேண்டுமா?''

கலகலவென்ற சிரிப்புக் கேட்டுக் கொண்டே இருக்கும் சென்னை வீடு நினைவுக்கு வந்தது. எத்தனை நண்பர்கள், தந்தைக்கு 'ஸ்ட்ரோக்' வந்தபின் மருத்துவ வசதிக்காக வேலூர் சென்றார்கள். அங்கும் கூட லாவண்யாவின் கலகலப்புக்குத் தடை இருக்கவில்லை. இளமைத் துள்ளலும் உற்சாகமும் துடிப்பும் நிறைந்த பெண் அவள்.

''நீ மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் கண்ணம்மா. அம்மா அப்பாவின் நினைவு வந்தால் நாம் ஆனந்தமாகக் கழித்த நாட்களை மட்டுமே நினை. அழுது ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது. அதோடு மாமா வீட்டில் நீ ஓர் உற்சாகமான உறுப்பாக மாற வேண்டுமே

தவிர அழுது வடிந்து வேதனையின் சின்னமாக இருக்க லாகாது'' என்று தன் தாய் கூறியதும் நினைவுக்கு வந்தது. அந்த நினைவில் சட்டென இமைகள் நனைந்தன.

எதிரே தன் முகத்தையே கவனித்தபடி அவன் நிற்கிறானே? அழுவதா? ஆத்திரத்துடன் தலையை உயர்த்தினாள்.

''நன்றி கொன்றாற் போல நான் இப்போது என்ன செய்து விட்டேன்?'' என வினவினாள்.

இதற்கு அவன் நேரடியாகப் பதில் சொல்லவில்லை. ''உன்னைப் பார்த்தால் வெகு சமீபத்தில் பெற்றோரை இழந்த பெண் போலத் தெரியவில்லை'' என்றான் அதே நிதானத்துடன்.

வேண்டுமென்றே புண்ணில் வேலிடுகிறான். வேதனையை உள்ளடக்கி அவனை நேராகப் பார்த்தாள். ''அது தெரிந்துதான் ஆக வேண்டுமா?'' என அவனைப் போலவே நிதானமாகக் கேட்டாள்.

''தைரியசாலியாக இருக்கிறாயே'' என்றான் அவன்.

''என் பெற்றோர் என்னைக் கோழையாக வளர்க்க வில்லை'' என்றாள் அவள் பதிலுக்கு. ''அதோடு நீங்கள் என் கேள்விக்கு இன்னமும் பதில் கூறவில்லை. நன்றி கொன்ற விதமாக நான் என்ன செய்து விட்டேன்?''

''பானுவின் முகத்தில் எப்போதும் புன்னகை இருக்கும். இன்று அதைக் காண முடியவில்லை. காரணம் நீதான்'' என்று சொல்லாமல் சொன்னான்.

''அவள் புன்னகை புரியவிடாமல் அவளது உதடுகளை தான் பிடித்து வைக்கவில்லை.''

''அடே, பிரமாதமாகப் பேசிவிட்டாயே'' என்றான் அருண் கிண்டலாக.

''நான் குட்டுப்பட்டு வளர்ந்தவள் இல்லை. என் அம்மா என் வாயை அடக்கியதும் இல்லை.''

''அது சொல்லாமலே தெரிகிறது'' என்று வெறுப் பாக உதட்டை வளைத்தான் அருண்.

''தெரிந்த பின்னும் துணிந்து என்னிடம் பேசுகிறீர் களே'' நீங்களும் வெகு தைரியசாலிதான் போலும்'' என வியந்தாள் லாவண்யா. தொடர்ந்து, ''அதோடு உங்க ளுக்கும் மரியாதைக்கும் இடைவெளி அதிகம் போலத் தெரிகிறது'' என்றாள் ஏளனமாக.

அவனது புருவங்கள் வினாக்குறியாக உயர்ந்தன.

''ஆமாம், அப்படித்தான். உங்களை ஒத்த எல்லா ரும் என்னை 'மிஸ் லாவண்யா' நீங்கள் வாங்கள் என்று மரியாதையாகப் பேசுகிறார்கள். நீங்களோ எடுத்த எடுப் பிலேயே ஏகவசனமாகப் பேசுகிறீர்களே?''

''அவர்கள் அன்னியர்கள். ஆனால் எனக்கு இங்கே ஒரு பிள்ளையின் உறவு. ஆகவே உறவினன் என்ற முறையில் நான் உனக்கு மரியாதை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை'' என்றான் அவன் அலட்சியமாக.

''அதெப்படி? எந்தவித உறவும் இல்லாமல் பரிதா பம் காரணமாக மாமா என்னை அழைத்து வந்ததாக நீங்கள் தானே சொன்னீர்கள்?'' என்று அவனது வார்த் தைகளையே திருப்பிப் படித்தாள் லாவண்யா.

''ஆனால் அவர்கள் உன்னை ஒரு மகளாக ஏற்று விட்டார்களே.''

''அவர்கள் தானே. நீங்கள்தான் அதை ஏற்கவில்லையே'' என்று மடக்கினாள் அவள்.

அருண் திகைத்தான். அவனது ஆயுளில் இதுவரை அறிந்திராத நிலை. ஒரு பெண்ணிடம் பதில் கூற முடியாமல் தடுமாறும் நிலை. நல்ல வேளையாக அந்த நேரத்தில் சிவநாதர் வந்து சேர்ந்தார். ''இருவரும் இங்கே தனியாக என்ன பேசுகிறீர்கள்?'' என்று சிரித்துக் கொண்டே வினவினார். ''இனம் இனத்தோடு சேரும். என்ன லாவண்யா. எங்கள் அருண் எப்படி?'' என்று அபிப்ராயம் வேறு கேட்டார். அறியாதவர் பாவம்.

''நிரம்பவும் அறிவுக் கூர்மையுடன் பேசுகிறார் மாமா'' என்று அவரிடம் வெகுவாகச் சிலாகித்தாள் மருமகள். பிறகு ''அப்படித்தானே?'' என்று அருண் பக்கம் திரும்பிச் செவ்விதழ்களைக் காதுவரையில் நீட்டி ஒரு புன்னகை செய்தாள்.

அவன் முகம் கன்றிச் சிவப்பது கண்டு அவளுக்கு மெய்யாகவே சிரிப்பு வந்துவிட்டது. கலகலவென்று நகைத்தாள்.

''லாவண்யாக்கா, நீ சிரித்தால் கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது'' என்று கூறியவாறு அங்கே வந்து வினுபானுவின் பக்கம் முகத்தைத் தூக்கிப் பழிப்புக் காட்டினான். ''சரியான சினிமாப் பைத்தியங்கள். அக்கா இவர்களிடம் பேசுவதற்கு ஒரு சினிமா டைரியை வாங்கிப் புரட்டிப் பார்த்துவிட்டுப் போகலாம்.''

''உன் பேச்சு கிரிக்கெட் டைரியாக்கும்?'' என்று கேலி செய்தாள் லாவண்யா.

"சினிமாவும் கிரிக்கெட்டும் ஒன்றா? இது மேம்பட்ட விளையாட்டு!" என்று வரிந்து கட்டினான் சிறுவன்.

புருவத்தைச் சுருக்கி யோசித்தாள் லாவண்யா: "சில முட்டாள்கள் ஆடுவதைப் பல முட்டாள்கள் பார்த்துக் கொண்டு இருப்பதுதான் கிரிக்கெட் என்று எதிலோ படித்திருக்கிறேன்."

"எவனாவது ஒரு முட்டாள் அப்படி எழுதியிருப்பான்" என்று ரோஷத்துடன் கிளம்பினான் வினு. "சொல்லு அக்கா. நீயுமா அப்படி நினைக்கிறாய்?"

"அய்யய்யோ. இல்லையப்பா இல்லை. அப்படி நினைத்தாலும் இப்போது சொல்லுவேனா? எனக்கும் ஒரே வார்த்தையில் முட்டாள் பட்டம் கட்டிவிடுவாயே" என்று பயந்தவள் போல நடித்தாள் லாவண்யா.

வினு சிரித்துவிட்டான். "அக்கா நீ நிரம்பவும் பொல்லாதவள்" என்றான் வாஞ்சையோடு.

"ம்ம்...? அப்படித்தான் எல்லாரும் சொல்லுகிறார்கள்" என்று கடைக்கண்ணால் அருணை நோக்கினாள் லாவண்யா.

கல்லைப்போல இறுகியிருந்த அந்த முகத்தைப் பார்க்கையில் அவளுக்குக் கொஞ்சம் அச்சமாகக்கூட இருந்தது. சட்டை பண்ணாதவள் போன்ற பாவனையுடன் வினுவோடு பேசிக்கொண்டு அங்கிருந்து அகன்றாள்; ஆயினும் ஊசி குத்துவதுபோல ஓர் உணர்ச்சி அவள் முதுகில் உறுத்தியது.

அன்றிரவு உறங்குமுன் லாவண்யா, அன்றைய நிகழ்ச்சிகளை அசை போட்டாள்.

பானுவை நினைக்கையில் லாவண்யாவிற்குக் கோபமும் வருத்தமும் உண்டாயின. மணிவண்ணனைப் போன்ற ஒரு சிறந்த மனிதன் வேண்டி நிற்கையில் அந்த வெற்று வேட்டிடம் இளிக்கிறாள். அருகில் அமர்ந்து மணிக்கணக்கில் பேசுகிறாள். பாவம்—மணியின் முகம் வாடிப் போயிற்று.

மணிவண்ணனிடம் லாவண்யா ஒரு நல்ல நண்பனைக் கண்டாள். அவனைப் பார்த்தால் ஒரு புதியவன் போலவே தோன்றவில்லை. ஏதோ பல்லாண்டு பழகிய ஓர் உணர்வு சட்டென நினைவு வந்தது. சென்னையில் லாவண்யாவுடைய தந்தை சம்பந்தத்திடம் உதவியாளராக ஓர் இளைஞன் வேலை பார்த்தான். அப்பாவின் வலது கை. அவன் ஒரு முறை கடலில் நீந்தப் போனான். அங்கே மூழ்கிக் கொண்டிருந்த ஒருவனைக் காப்பாற்றப் போனானாம். அவன் காப்பாற்ற வருவதைப் புரிந்து கொள்ள முடியாத அந்த ஆளின் கரடிப்பிடியில் சிக்கினானாம். அதிலிருந்து மீள, முடியாமல் தானும் மாண்டு விட்டான். அவன் மறைவைச் சம்பந்தத்தால் தாங்க முடியவில்லை. அந்த உடல்களைப் பார்த்தபோதுதான் முதலில் அவருக்கு ''ஸ்ட்ரோக்'' வந்தது, பிறகு...

லாவண்யா கண்களை இறுக மூடிக் கொண்டாள். அப்பா, உங்கள் மனம் ஏன் அவ்வளவு இளகியதாக இருந்தது? மூடிய இமைகளின் வழியே கண்ணீர் பொங்கி வழிந்தது. அதை அழுந்தத் துடைத்தாள்.

அழுவது அன்னைக்குப் பிடிக்காது. லாவண்யாவுடைய பெற்றோரை எண்ணுகையில் அழ ஏதும் இல்லை. ஆனந்தமான அந்தக் குடும்பம் இன்னமும் கொஞ்சகா

லம் இணைந்து இன்புற்று இருந்திருக்கலாம். ஆனால் ஆண்டவனுக்கு அந்த எண்ணம் இல்லையே. பார்க்கப் போனால் நம்மினும் கேடு நாட்டிலே கோடி. இந்த மணிவண்ணன் பெற்றோரின் முகத்தைப் பார்த்ததே இல் லையாம். ஆசிரமத்தில் வளர்ந்தானாம். பெற்றோரின் அன்பை அனுபவித்ததே இல்லை என்றல்லவா ஆகிறது? அவன் சும்மா இருக்கையில் பதினெட்டு ஆண்டுகளுக் கும் மேலாக அந்த சுகத்தில் மூழ்கிக் களித்தவள் கண்ணீர் விடலாமா? பிடிவாதமாக மனதை வேறுபுறம் திருப்பி னாள்.

அதை எண்ணியபோது அழுகை வந்தது? ம்...மணி வண்ணனது முகம், அப்பாவுடைய உதவியாளரான குமரனின் ஜாடை, வீட்டில் ஒரு மூத்த மகனின் உரிமை அவனுக்கு. அண்ணா அண்ணா என்று சுற்றுவாள் லாவண்யா. இந்த மணிவண்ணனிடமும் சகோதர பாசம் தான் லாவண்யாவுக்குத் தோன்றிற்று.

திலகவதி அன்பின் உருவம்தான். ஆனாலும் ''எழி லூர் இளவரசி'' என்று அருண் பேசிய பேச்சை அவள் கண்டிக்கவில்லையே. ஒரு வேளை யாரையும் கண்டிக் கும் எண்ணம் அவளுக்கு வருவதில்லை போலும்.

சிவநாதரும் பாசத்தைக் காட்டினார்.

வினு ஓர் அருமையான தம்பிதான்.

கபாலி...சினிமாக் கதாநாயகன் போல அவனது அலங்காரமும் உதட்டளவில் பேசிய உபசார வார்த்தை களும் அவனை அறவே பிடிக்கவில்லை.

அந்த நீதுவும் அவளுடைய பாய்பிரண்டும் வாழ் வில் சாதாரணமாகச் சந்திக்கும் உருவங்கள்.

அடுத்து—கடைசியாக அருண், அவனை நினைக் கையில் லாவண்யாவின் முகம் இருளிலும் சிவந்தது. எவ்வளவு அலட்சியமாகப் பேசுகிறான்! அவளிடம் அவனுக்கு மரியாதையும் இல்லை. மதிப்பும் இல்லை. திலகவதி கால் தடுமாறினால் லாவண்யாதான் தட்டி விட்டாற்போலப் பார்க்கிறான். பானுமதி அசடு போல் முகத்தைத் தூக்கினால் அதற்கும் லாவண்யாவைக் குற்றம் சாட்டுகிறான் என்னவோ, சிவநாதருடைய குடும்பத்தை வேரோடு சாய்த்து வென்னீர் ஊற்றுவதற்காக லாவண்யா இங்கு வந்திருப்பதுபோலப் பேசுகிறான். இத்தனைக்கும் லாவண்யாவைப் பற்றி அவனுக்கு எதுவுமே தெரியாது. சரியாகத் தெரிந்து கொள்ளுமுன் அவளைப் பற்றித் தப்பாக நினைப்பது என்றால் அது என்ன நியாயம்? ''நன்றியோடு நட'' என்று உபதேசிக்க வந்து விட்டான். தீர ஆராயாமல் ஒரு முடிவுக்கு வரக்கூடாது என்று அவன் ஏன் அறிந்து கொள்ளவில்லை. அதோடு லாவண்யாவால் என்ன பிழை நேர்ந்து விடும் என அவன் அஞ்சுகிறான்? பானுவுக்குப் போட்டியாக இவள் வந்துவிடக் கூடுமோ என்றா? பானுவும் ஒருவிதத்தில் அழகிதான். தெரிந்த அளவில் மணிவண்ணனை லாவண்யா அண்ணனாகத்தான் எண்ணுகிறாள். கபாலியைக் கண்டாலே கசக்கிறது. இதில்—பானுவுக்குப் போட்டி எங்கே வரும்?

என்னதான் யோசித்தும் லாவண்யாவுக்கு ஒன்றும் பிடிபடவில்லை. ''கழுதை கிடக்கிறது'' என்று வழக்கம் போல விட்டுத் தள்ளவும் முடியவில்லை. எதனாலோ தெரியவில்லை—அருண் அவளைத் தப்பாக நினைக்கிறான் என்ற எண்ணமே அவளுக்கு ஊமையடிபோல

வேதனையைத் தந்தது. அந்த வேதனையுடனேயே மெல்ல உறங்கிப் போனாள்.

## 7

**லா**வண்யாவுக்கு வடாலா (சிவநாதர் வீடு இருக்கும் இடம்) பழகிப் போயிற்று, காலையில் துயில் கலைந்து எழும்போது மட்டும் பெற்றோரின் நினைவில் உலகம் இருண்டு தோன்றும். மந்திரம் கவசம்போல "அப்பா அம்மா" என்று பத்துத் தடவை சொல்லுவாள். மூவருமாகக் கலந்து கொண்ட இன்ப நிகழ்ச்சி ஏதாவது நினைவு வரும். அந்தப் புன்னகையுடனேயே எழுந்து கொள்வாள்.

திலகவதி மெய்யாகவே பிரியமாக இருந்தார். மறந்தும் லாவண்யாவின் பெற்றோரைப் பற்றிப் பேசுவது இல்லை. பெற்றவர்களின் நினைவில் லாவண்யா வேதனைப்படுவாளே என அஞ்சினார் போலும். சில சமயங்களில் சிவநாதர் பேசத் தொடங்கினாலும் ஏதேனும் சாக்கிட்டு திலகவதி எழுந்து சென்று விடுவார். சில பெண்டிரின் வம்பு பேசும் தன்மைக்குத் திலகவதியின் போக்கு மெய்யாகவே ஆச்சரியம்தான்,

காலையில் திலகவதிக்கு வீட்டில் மூச்சுவிட நேரம் இராது. பள்ளி செல்லும் வினு. அலுவலகம் செல்லும் சிவநாதர் இருவரது தேவைகளையும் கவனித்துச் சமையலும் செய்யுமுன் திணறிப் போவார். பானுவுக்கு மதியத்துக்கு மேல்தான் கல்லூரி. ஆயினும் காலை வேளையில் தாயாருக்கு உதவும் எண்ணம் அவளுக்கு அதிகம் வருவது இல்லை. எப்போதேனும் ஒன்றிரண்டை தூக்கி

வைப்பதோடு சரி, அதோடு தையல், அலங்காரக் கலை வகுப்பு என்று சென்று விடுவாள். அல்லது சினேகிதி வீட்டுக்கேனும் போய் விடுவாள்.

லாவண்யா தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வாள். எல்லாரும் வெளியே சென்றதும் வீட்டில் கொஞ்சம் அமைதி நிலவும். திலகவதியும் லாவண்யாவும் காலை உணவை நிதானமாக உட்கொள்வார்கள்.

பிறகு மடமடவென்று சமையல் நடக்கும். சிவநாதருக்குச் சாப்பாடு அனுப்பும்போது மணிவண்ணனுக்கும் சேர்த்தே எடுத்து வைப்பார் திலகவதி. 'மணிப் பையனுக்கு வெங்காய வடகம் இஷ்டம்' என்று பொரித்துக் காற்றுப் புகாத டப்பாவில் வைத்து அனுப்புவார் அடிக்கடி மணிவண்ணனைப் பற்றிப் பேசுவார். அவனை மருமகனாக்கிக் கொள்ளும் ஆவல் அவருக்கு உள்ளூர இருந்ததை லாவண்யா கண்டு கொண்டாள். ஒரு வேளை...

அன்று லாவண்யாவுக்குத் தலைவாரிப் பின்னலிட்டார் திலகவதி பேச்சு எப்படியோ சுற்றி மணிவண்ணனிடம் வந்து நின்றது. ''நல்லவேளை அவரவர்... கொடுத்து வைத்தால் கிடைக்கும்'' என, முடித்தார் அவர்.

''இதுதான் தருணம்'' என நினைத்தாள் லாவண்யா.

''அத்தை, நான் வந்த அன்று நீங்கள் என்னைச் சற்று பயத்தோடு பார்த்தீர்கள் அல்லவா? அந்த அச்சத்திற்குக் கொஞ்சமும் அவசியமே இல்லை அத்தை. நான் ஒரு நாளும் மணிவண்ணனுக்கும்—யாருக்கும் இடையே வரவே மாட்டேன். மணிவண்ணனை நான் என் மூத்த சகோதரனைப்போல் எண்ணுகிறேன்'' என்று மளமளவென்று கொட்டி விட்டாள்.

சற்று நேரம் அமைதி. அளவு மீறிவிட்டோமோ என்று அஞ்சிவிட்டாள் லாவண்யா. மெல்லத் திரும்பிப் பார்த்தாள். ''அதிகப் பிரசங்கிபோலப் பேசியிருந்தால் என்னை மன்னியுங்கள். அத்தை'' எனப் பணிவுடன் வேண்டினாள்.

திலகவதி அவள் முகத்தைத் தொட்டுத் தன்னோடு சேர்த்து அணைத்தார். ''கண்ணம்மா, நீ மிகவும் நல்ல பெண்'' என்றார் கம்மிய குரலில்.

மாலை நேரங்களில் வீடு கலகலக்கும். வினு தன் பள்ளிக் கதைகளை லாவண்யாவிடம் அளப்பான். அவ னுக்கு அவள் வந்ததில் அதிக மகிழ்ச்சி. அவனது பேச்சைக் கேட்கும் பொறுமை பானுவுக்கு இல்லை; திலகவதிக்குப் புரியாது; சிவநாதரிடம் பேச முடியாது. இப்போது லாவண்யா ஒரு தோழனைப் போல அவனுக் குக் கிடைத்தாள்.

லாவண்யா சுதந்திரமாக வளர்ந்தவள். விளையாட் டிலும் படிப்பிலும் ஆர்வம் உள்ளவள். வினுவுக்கு ஆலோசனைகளும் கூறுவாள். பாடத்திலும் உதவுவாள்.

சில நாட்களில், கபாலி, மணிவண்ணன் இருவரும் வருவார்கள். அருணும் வருவதுண்டு. அவன் வந்து விட்டால் வினுவுக்கு ஒரே கொண்டாட்டம்.

அன்று சிவநாதரோடு மணிவண்ணன் வந்தபோது சிற்றுண்டிக்காக அவல் கேசரி தயாராகியிருந்தது.

''மணி, உங்களுக்கு அவல் கேசரி பிடிக்கும் அல் லவா? இந்தாருங்கள்'' என்று தட்டில் தாராளமாக அள்ளி வைத்தாள் லாவண்யா.

''மணியின் விருப்பு வெறுப்பெல்லாம் அதற்குள் அத்துபடியாகி விட்டதா?'' என்றாள் பானு கேலியாக.

''அத்தையிடம் பேசிக் கொண்டு இருந்தால் அத்தனை பேருடைய விருப்பு வெறுப்புகளுமே தெரிந்து விடும்'' என்றாள் லாவண்யா.

''அனைத்தும் அறிந்தவள் கொண்டுவந்து தந்திருக்கிறாள். நன்றாகச் சாப்பிடுங்கள் மணி'' என்றாள் பானு ஏளனமாக.

''லாவண்யா அன்பாக உபசரிக்கும் விதத்தில் புளியேப்பம் விடுகிறவன் கூட இன்னும் ஒருமுறை சாப்பிட்டு விடுவான்'' என்று உண்ணத் தொடங்கினான் மணி.

''இதிலும் உங்களுக்கு ஸ்பெஷல் உபசாரம்.''

''எல்லாருக்கும் ஒரே உபசாரம்தான். எதை எடுத்தாலும் ஒரு ரூபாய் மாதிரி ஒரே கவனிப்புதான்'' என்று சூழ்நிலையை லேசாக்க முயன்றாள் லாவண்யா.

நம்பாததுபோலச் சிரித்தாள், பானுமதி.

இப்போது என்ன சொல்வது என்று லாவண்யாவுக்குப் புரியவில்லை. 'மணிவண்ணன் எனக்கு அண்ணன் போல்' என்று சொல்லலாம். அப்படிச் சொன்னால் அவனுக்கு ''ஸ்பெஷல்'' உபசாரம் என்பதை ஒப்புக் கொள்வதுபோல ஆகும். அப்படி அல்ல, என்றும் இப்போதுதான் பேசியிருக்கிறாள்.

சமய சஞ்சீவியாக அல்லது அசமய சஞ்சீவியாக சிவநாதர் இடையிட்டார். ''பொறாமையாக இருந்தால் நீ ஒரு பங்கு அவனுக்கு ஸ்பெஷல் உபசாரம் செய்யேன் பானு'' என்று சிரித்தார் அவர்.

பானுவுக்கு ஜிவ்வென்று முகம் சிவந்தது. "பொறாமையா? எனக்கா? அதுவும் இந்த மணிக்கு உண்டி கொடுப்பதிலா? நல்ல வேடிக்கை அப்பா, பெரிய வேடிக்கை," என்று குரல் கீச்சிடச் சிரித்தாள். அடக்கிக் கொண்ட ஆத்திரத்தில் கண்கள் பளபளத்தன.

மணியின் தலை குனிந்திருக்க அவனது கை தட்டில் அளைவதை லாவண்யா கவனித்தாள். பரிதாபமாக இருந்தது.

"பானு, நீ ஏதோ கடைக்குப் போக வேண்டும் என்றாயே அம்மா," என்று மென்குரலில் பேச்சைத் திசை திருப்பினார் திலகவதி.

"ஆமாம். போகத்தான் வேண்டும். ஆனால் எப்படிப் போவது? இந்த நேரத்தில் தனியாகச் செல்ல அப்பா விட மாட்டார்களே," என்று சலித்துக் கொண்டாள் மகள்.

"தனியாக வேண்டாம். மணிவண்ணனையாவது லாவண்யாவையாவது கூட அழைத்துக் கொண்டு போ," என்றார் சிவநாதர் அமைதியாக. அவருக்கு மற்றவரின் உள்ளுணர்ச்சி புரியாது போலும்.

"எனக்கு இங்கே என்ன தெரியும்?" என்று ஒதுங்கினாள் லாவண்யா.

"இருவருமே சரியில்லை," என்று மறுத்தாள் பானுமதி. "வேலூர் லாவண்யாவுக்கோ ஆசிரமத்து மணிவண்ணனுக்கோ நாகரிகத்தைப் பற்றி என்ன தெரியும்?" என்று அலட்சியமாகத் தோளைக் குலுக்கினாள்.

"நாகரிகத்தை அப்புறம் பார்க்கலாம். முதலில் பண்பாட்டைக் கற்றுக்கொள். அது உனக்கு அடியோடு இல்லை," என்று கடிந்தார் தந்தை.

''பண்பாட்டுக்காகப் பட்டிக்காடாக வேண்டுமா, அப்பா?'' என்று எதிர்த்துப் பேசினாள் பானு.

''அப்பாவிடம் இப்படிப் பேசினால் அம்மா பட்டென்று ஒன்று போட்டிருப்பார்கள்'' என்று எண்ணிக் கொண்டாள் லாவண்யா.

ஆனால் திலகவதியோ, ''பானும்மா'' என்று அழைத்து விட்டுக் கெஞ்சுவது போலப் பார்த்தார்.

பானு அவரையும் முறைத்துவிட்டு, ''நான் வெளியே போகவில்லை சரிதானா?'' என்றாள் சினத்துடன்.

''ஏன் பானு?'' என்று கேட்டுக்கொண்டு கபாலி உள்ளே வந்தான்.

''ஒன்றுமில்லை, கடைப்பக்கம் செல்ல வேண்டும். துணைக்கு வர நாகரிகம் தெரிந்த ஒருவரும் இல்லை'' என்றாள் பானு.

''அடியேன் காத்திருக்கிறேன்,'' என்று நாடக பாணியில் குனிந்து வணங்கினான் கபாலி.

தலை குனிந்திருந்த மணிவண்ணனை ஒருமுறை முறைத்து விட்டுக் கபாலியிடம் திரும்பினாள் பானு. ''மிகவும் நன்றி கேபால்'' என்று உள்ளே போனாள். கையில் அலங்காரப் பையுடன் திரும்பி வந்தாள். ''வாருங்கள் போகலாம். நான் வருகிறேன்'' என்று கபாலியுடன் வெளியேறி விட்டாள்.

திலகவதியின் கண்களில் வேதனையைக் கண்டதும் லாவண்யாவுக்குப் பானுவிடம் கோபம் வந்தது. 'இந்த மட்டிப் பெண்ணுக்கு புத்தியே இல்லையே. தாயின்

மனதைத் துன்புறுத்தி, தங்கமான மணியைப் புண்படுத்தி அந்த 'அல்கா'வுடன் போகிறாளே, இந்த மணிவண்ணனின் கால் தூசிகூட அந்தக் "கேபால்" பெறமாட்டான் என்பது அவளுக்குப் புரியவில்லையே."

ஒருநாள் அருண் ஓர் அழைப்புடன் வந்தான். வந்ததும் ஆராய்ச்சியாளன் போல அவன் பார்வை லாவண்யாவை அளவிட்டது. லாவண்யா அக்கறை இல்லாதவள் போலக் காட்டிக் கொண்டு வளைய வந்தாள்.

அவளைப் பார்த்துவிட்டு அருண் சிவநாதரிடம் "சித்தப்பா, இந்த ஞாயிறன்று உங்கள் எல்லாரையும் வஜ்ரேசுவரிக்கு அழைத்து வரும்படி அப்பா எழுதி இருக்கிறார்கள். போகலாமா? உங்களுக்கு வேறு வேலைகள் இல்லையே?" என்று வினவினான்.

"ஞாயிறு என்றால் நாளை மறுநாள்..." என்று தாடையைத் தடவி யோசித்தார், சிவநாதர். "ஊகூம் வேறு வேலை இல்லை போகலாம். கேட்க வேண்டுமா? உன் அக்கா வீடு என்றால் உனக்கு சொர்க்கம் அல்லவா?" என்று சிரித்தார்.

திலகவதியும் மென்குரலாகச் சிரித்தார். "உங்களுக்கும் அங்கு பிடித்தம்தானே. மாப்பிள்ளை உபசாரம் இன்னமும் கிடைக்கிற இடம் ஆயிற்றே."

"ஓகோ" என்று நகைத்தார் சிவநாதர். "கேட்டுக் கொள் லாவண்யா, உன் அத்தைக்குக் கூடச் சில சமயம் பேசவரும். அதுவும் அவளுடைய அக்கா வீட்டுக்குப் போகிறோம் அல்லவா? இனி நாம்தான் வாயை மூடிக் கொள்ள வேண்டும்.

லாவண்யாவும் புன்னகை செய்து வைத்தாள். அவ ளுக்குள் குழப்பம். 'அருண் அவளை அழைக்கவில்லை. ஒட்டு மொத்தமாக எல்லாரும் என்றான். மற்றவர் களோடு இணைத்துப் பேசுகிறானா அல்லது அவளைத் தனியே விலக்குகிறானா? இணைத்தாலும் இதை அழைப்பாக ஏற்று எப்படி அவன் வீட்டுக்குச் செல்வது?'

''போய்விட்டு எப்போது திரும்புவீர்கள்?'' என மெல்ல விசாரித்தாள்.

''திரும்புவீர்களா? எப்போது திரும்புவோம் என்று கேள், நீயும் சேர்ந்துதான் வருகிறாய்'' என்று அடித்துப் பேசினான் வினு. ''அப்படித்தான்'' என்றார் சிவநாதர்.

யோசனையோடு அருணைப் பார்த்தாள் லாவண்யா.

## 8

''உன்னையும் அழைத்து வரும்படிதான் அப்பா எழுதியிருக்கிறார்கள்'' என்றான் அருண்.

''அங்கே சிறப்பாக என்ன இருக்கிறது?'' என்று திலகவதியிடம் திரும்பி வினவினாள் லாவண்யா.

''எங்கள் வீடு இருக்கிறது'' என்றான் அருண் அழுத்தமாக.

''நான் 'சிறப்பாக' என்று கேட்டேன்'' என்றாள் அவளும் அழுத்தமாகவே.

''எங்கள் வீடே சிறப்புதான்'' என்றான் அருணும் விட்டுக் கொடுக்காமல்.

அவனைச் சட்டை பண்ணாதவள் போல, ''நீங்கள் சொல்லுங்கள் அத்தை'' என்றாள் லாவண்யா.

''நான் சொல்லகிறேன். அங்கே வென்னீர் ஊற்றுக் கள் இருக்கின்றன'' என்றான் வினு.

''ம்ம்...'' புருவத்தைச் சுருக்கினாள் லாவண்யா. ''இமயமலையில் பத்ரிநாத் செல்லும் வழியில் வென்னீர் ஊற்று இருப்பதாகப் படித்திருக்கிறேன். அந்த வென்னீ ரில் அரிசிகூட வெந்து குழைந்து விடுமாமே. அதுபோ லவா?''

''அவ்வளவு சூடு இங்கே கிடையாது. மலை மேல் உள்ள ஊற்றுக்களில் கை பொறுக்காத சூடு இருக்கும். கீழே அப்படி அல்ல'' என்றாள் திலகவதி.

''என்ன பானு. உம்மென்று இருக்கிறாயே?'' விசா ரித்தான் அருண்.

''அது எப்போதும் உம்மணா மூஞ்சிதானே அண் ணா'' என்று சிரித்தான் வினு.

''சரிதான்டா, சும்மா இரு. என்ன பானு ஞாயிறன்று வேறு ஏதேனும் திட்டம் போட்டிருந்தாயா?''

''நானும் என் தோழிகளும் சத்ருகன் சின்கா படம் பார்க்கலாம் என்றிருந்தோம்...'' என்று இழுத்தாள் அவள்.

''சினிமா அதற்குள் ஓடிவிடுமா? அப்படி ஓடுகிற படம் எப்படி இருக்கும்? அதைப் பார்த்துக் கண்ணைக் கெடுக்க வேண்டாம். பேசாமல் கிளம்பு'' எனக் கட்டளை யிட்டான் அருண்.

''சரி அண்ணா'' என்று பணிந்து போனாள் பானு.

''மணிவண்ணனிடமும் சொல்லி விடுங்கள் சித்தப்பா'' என்று எழுந்தான் அருண்.

''ஆகா! மணியும் வருகிறாரா?!' என்று உற்சாகத்துடன் துள்ளி எழுந்தாள் லாவண்யா.

''மெல்லத் துள்ளு. தளத்தைப் பொத்துக் கொண்டு மேல் வீட்டில் போய் விழப் போகிறாய்'' என்று எரிந்து விழுந்தாள் பானு.

''லாவண்யா அக்கா மெல்லத்தான் துள்ளினாள்'' என்று வக்காலத்து வாங்கினான் வினு.

அவனை அலட்சியம் செய்து பானு மேலே தொடர்ந்தாள். ''நீ என்ன கேட்டாய்? மணியும் வருகிறாரா என்றுதானே? பின்னே மூட்டை முடிச்சு தூக்க ஆள் வேண்டாமா?'' என்றாள் குத்தலாக.

''பானு, மணியை வீட்டு மனிதனாக மதித்துதான் நான் அழைக்கிறேன்'' என்றான் அருண்.

'உச்'க் கொட்டிவிட்டு அகன்றாள் பானு.

அவள் அருகில் சென்றான் அருண். ''பானு நீ ஏன் இப்படி மாறி விட்டாய்? மணிக்காகப் பரிந்துகொண்டு வரிந்து கட்டுவாயே. இப்போது ஏன் இப்படி?'' என விளக்கம் கேட்டான்.

''சந்தர்ப்பம் வரும்போதுதானே அண்ணா மனிதர்களின் தராதரம் தெரிகிறது'' என்றாள் அவள் அசட்டையாக.

''அப்படி என்ன தெரிந்துவிட்டது? சொல்லு பானு சும்மா உளறக் கூடாது'' என்று அதட்டினான் அருண்.

''ஏன் அண்ணா, நீயும் என்னையே விரட்டுகிறாய்? வினு, அப்பாவோடு நீயும் சேர்ந்து கொண்டாயா? நான் என்ன மாகி...'' என்பதற்குள் அவள் குரல் உடைந்தது. எழுந்து உள்ளே சென்று விட்டாள்.

லேசாக நெறித்த புருவங்களுடன் தங்கை சென்ற திசையைப் பார்த்தான் அருண். அங்கிருந்து மீண்ட பார்வை ரேடியோவின் அருகில் அரட்டை அடித்துக் கொண்டிருந்த லாவண்யாவிடம் ஆத்திரத்துடன் பாய்ந்தது. பிறகு யோசனையோடு அமர்ந்தான்.

''என்னடா அருண்? ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்? என்ன கவலை?'' என்று கேட்டார் திலகவதி.

அவரது பேச்சைக் கவனித்த லாவண்யா, ''இவ்வளவு பேரைக் கூப்பிட்டு விட்டோமே; விலைவாசி இருக்கிற நிலையில் இரண்டு வேளைச் சாப்பாடு எப்படிப் போடப் போகிறோம் என்ற கவலையாக இருக்கும்'' என்றாள் கிண்டலாக.

தன்னையும் மீறிப் புன்னகை மலர்ந்தது அருண் முகத்தில், ''பக்''கென்று சிரித்தார் திலகவதி. பொல்லாத வாயாடி,' என்று அவள் காதைச் செல்லமாகத் திருகினார்.

''அய்யோ, காது பேச்சே...போச்'' என்று வலிதாளாதவள்போல நடிக்கத் தொடங்கிய லாவண்யா அருண் தன்னைப் பார்ப்பதைக் கண்டதும் குழம்பிப் போய்ப் பாதியில் நிறுத்தினாள். 'சும்மாவே இவனுக்கு நம்மைப் பிடிக்காது. இவன் முன்னிலையில் இவ்வளவு சிறுபிள்ளைத் தனமாக நடந்து கொண்டோமே!' என வெட்கிப் போனாள். சற்று தயங்கி விட்டு ''அத்தை நாம் எத்தனை

மணிக்கு இங்கிருந்து கிளம்ப வேண்டியதாக இருக்கும்?'' என்று பேச்சை மாற்றினாள்.

''அதிகாலையிலேயே கிளம்ப வேண்டும்'' என்றவர் ஏதோ வேலையாக எழுந்து சென்றார்.

லாவண்யாவின் அருகில் வந்தான் அருண், ''அழகாகப் பேச்சை மாற்றினாயே.'' என்றான் புன்சிரிப்புடன்.

அந்தச் சிரிப்பில் லாவண்யா ஒரேயடியாகத் திகைத்துப் போனாள்.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் கிளம்பி சுமார் எட்டு மணியளவில் அருணின் வீட்டையும் அடைந்தாயிற்று. அவனுடைய பெற்றோர்அவர்களை ஆவலுடன் வரவேற்றனர். ''செந்திருவின் பெண்ணா?'' என்று அன்பாக லாவண்யாவை அணைத்தார் அருணுடைய அன்னை பார்வதி. லாவண்யாவுக்கு அவரை மிகவும் பிடித்துப் போயிற்று.

''அக்கா அக்கா'' என்று திலகவதி, பார்வதியின் பின்னே ஒட்டிச் சென்றது பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தது. ஆனால் அன்னையர் இருவரும் உள்ளே சென்றதும் தனித்து விடப்பட்டாற் போல உணர்ந்தாள் லாவண்யா.

கொஞ்ச நாட்களாகவே, ஏன் வந்த தினத்தின் மாலையிலிருந்தே பானு லாவண்யாவிடம் நெருங்காமல் ஒதுங்கிப் போனாள். இப்போதும் கையில் ஓர் ஆங்கில நாவலுடன் சோபாவில் சாய்ந்து கொண்டாள். மணியும், சிவநாதரும், அருணும், அவனுடைய தந்தையும் ஏதோ பேசினர். வினுவோ ஆளையே காணோம்.

லாவண்யா விழித்துக் கொண்டு நிற்பதைப் பார்த்து விட்டு அருண் அவளிடம் வந்தான். "எங்கள் வீடு எப்படி இருக்கிறது லாவண்யா?"

தன் பெயர் அவன் குரலில் ஒலிப்பது மிகவும் விசித்திரமாக இருந்தது அவளுக்கு. தன்னை அவன் பெயர் சொல்லி அழைப்பது இதுதான் முதல் தடவை என்பதை உணர்ந்தாள். ஆனால் பல்லாண்டு பழகியவன போல எவ்வளவு இயல்பாகச் சொல்லுகிறான்.

"என்ன பதிலையே காணோம்; வீட்டின் அழகில் மயங்கி விட்டாயா?" என்று சிரிப்புடன் அவன் வின வவும் அவள் தடுமாறிப் போனாள்.

"அது... நான் இன்னமும் சரியாகப் பார்க்கவில்லை யே" என்று சமாளித்தாள்.

"பார்த்தால் போகிறது. வாயேன் சுற்றிக் காட்டு கிறேன்."

"வந்து...அத்தை தேடுவார்களே" என்று தயங்கி னாள் லாவண்யா.

அவன் சிரித்தான். "அம்மாவும் சித்தியும் இன்ன மும் ஓர் அரைமணி நேரம் யாரையும் தேட மாட்டார்கள். அதோடு நீ என்ன சிறுபிள்ளையா தொலைந்து போக?"

'அங்கே வெறுத்து முகம் சுளுக்குகிறவன் இங்கே வலிய அழைக்கிறானே, விருந்தோம்பலாக்கும்!' என்று எண்ணியபடி அவனுடன் சென்றாள் லாவண்யா.

வசதியான வீடு. வரவேற்புக் கூடம். பழமையும் புதுமையுமாகப் "பளிச்" சென்று மிளிர்ந்தது. அடுத்து விருந்தினருக்காக இரண்டு அறைகள். அவைகளும்

நல்ல வசதியும் அழகும் கொண்டு பளபளத்தன. அடுத்து கையைக் காட்டினான் அருண். "இதெல்லாம் பெண்கள் சமாசாரம். அம்மாவின் பூசை அறை. சாப்பாட்டு அறை, சமையலறை வகையறா. மாடியில் முதலில் என் அறை. பார்க்கலாமா?" என்று அழைத்தான் அவன்.

"இல்லை இல்லை" என்று அவசரமாக மறுத்தாள் லாவண்யா. அவனது அறைக்குள் சென்று பார்க்க என்னவோ போலிருந்தது. கூடவே அதிக அவசரம் காட்டி மறுத்தோமோ என்று தோன்றவும், "தோட்டம் பார்ப்போமா?" என்று தானாகவே கேட்டாள்.

அவள் முகத்தையே பார்த்திருந்த அவனுக்குச் சிறு நகை உண்டாயிற்று. "சரி, வா போகலாம். அங்கே மாமரத்தில் வினுவைக் கூடப் பார்க்கலாம்" என்றான்.

மாமரம் என்றதும் அவளுக்கு வாய்ப்பூட்டு கழன்றது.

"மாமரம் இருக்கிறதா?" என்றாள் ஆவலுடன். "என்ன ஜாதி? அங்கே சென்னையில் எங்கள் வீட்டில் ஒரு மரம் இருந்தது. நிறையக் காய்க்கும். நான் காய் பிடித்ததும் தின்னத் தொடங்குவேன். அம்மாதான் 'புளிப்படி தின்னாதே' என்பார்கள். அப்பா என்பக்கம். 'ஆசைப்படுவதைத் தின்னட்டும். விட்டுவிடு' என்பார்" என்று உற்சாகத்துடன் விவரித்தாள். கூடவே மறைந்த பெற்றோரின் நினைவில் முகம் வாடியது.

ஓரக்கண்ணால் அவளைப் பார்த்துவிட்டு, "பிறகு, புளிப்பு ஏதேனும் செய்ததா? அல்லது அதன் ஜம்பமும் உன்னிடம் சாயவில்லையா?" என்று விளையாட்டாக வினவினான். அருண்.

லாவண்யாவின் அரிசி பற்கள் மின்னலாய் ஒளிர்ந் தன. ''அதன் ஜம்பத்தைக் காட்டாவிட்டால் தானே? அம்மா தான் ஒரு முழத்தம்ளர் நிறைய கஷாயம் போட்டுத் தந்து விடுவார்களே. குடிக்காமல் விடவே மாட்டார்கள். கெஞ்சல், கொஞ்சல் ஒன்றும் நடக்காது.''

''உன் அப்பா சொன்னால் கூடவா?''

''அப்பாதான் இப்போது கட்சி மாறிவிடுவார் களே.'' மீண்டும் பல் தெரியச் சிரித்தாள் லாவண்யா.

அருணும் உடன் சேர்ந்து சிரித்தான்.

''நம் வீட்டு மாமரம் அந்தப் பக்கம்'' என்று வீட்டைச் சுற்றிக்கொண்டு நடந்தார்கள்.

''திலகம், இல்லாத பூச்சாண்டிக்குக் குழந்தை மாதிரி பயந்து...'' என்று பார்வதியின் குரல் பக்கத்து சன்னலில் கேட்டது.

''அங்கே அத்தையும் உங்கள் அம்மாவும்...'' என்று காலை எட்டிப் போட்டு அருணுக்குச் சரியாக நடந்தபடி அவன் முகத்தைப் பார்த்தாள் லாவண்யா. பேச்சு தானாக நின்றது. காரணம்—இவ்வளவு நேரம் காட்டிய நகை முகம் மாறி அவன் முகம் கருத்திருந்தது. லாவண்யா தன்னைப் பார்ப்பதை உணர்ந்ததும் சட்டென முகத்தை மாற்றிக் கொண்டான் அருண். ''இங்கே மாமரம் அதிகம் காய்ப்பது இல்லை. ஆனாலும் நம் தேவை போக மிஞ்சும்'' என்று செய்திப்பட அறிவிப்பாளர் போலக் கூறினான் அருண்.

பேச்சில் குறை காண முடியவில்லை. ஆயினும் அவன் குரலில் மாற்றுக் குறைந்தது புரிந்தது. மாமரத்தில்

வினுவைக் கண்டபோதும், ''டேய் எனக்கும் ஒன்று கொடுடா'' என்று கேட்டு வாங்கி வெண்பற்களைப் பதித்து மாங்காயை சுவைத்த போதும் மனதில் ஏதோ நெருடியது. ''நான் என்ன தப்பு செய்தேன்?'' என்று தன்னையே வருத்தத்துடன் கேட்டுக் கொண்டாள்.

மூவருமாக வீட்டுக்குள் வந்தபோது சகோதரிகள் இருவரும் உணவு படைக்கும் வேலையைத் தொடங்கி யிருந்தனர். இயல்பாகத் தானும் சென்று உதவினாள் லாவண்யா.

ஆண்கள் சிற்றுண்டி முடிந்து சென்றதும் பெண்கள் நால்வரும் அமர்ந்தனர். பார்வதி பானுவைக் கண்டித் தார். ''உன் வயதில் இந்த வேலையெல்லாம் பார்க்க வேண்டாமா? லாவண்யா செய்வதைப் பார்த்தாவது நீயும் உதவியிருக்கலாம் அல்லவா?'' என்றார்.

''நீங்கள் சொல்லவில்லையே பெரியம்மா. நீங்கள் சொல்லி நான் மறுத்தேனா?'' என்று பதிலுக்குக் கேட் டாள் பானு.

''சொல்லிச் செய்யத்தான் வேலையாட்கள் இருக்கி றார்களே. அதற்கு நீ வேறு ஏன்?'' எனப் பார்வதி கடுமையாகப் பேசவும் பானுவின் முகம் சுண்டிப் போயிற்று. கோபத்துடன் லாவண்யாவை முறைத்துப் பார்த்தாள். ஆனால் அதற்கும் டோஸ் விழுந்தது.

''அவளை முறைப்பானேன்? ஒரு தப்பைத் திருத் திக் கொள் என்றால் இன்னொரு தப்பையும் சேர்த்துச் செய்யாதே. பெண்ணாகப் பிறந்தால் ஐம்புலனிலும் அடக்கம் வேண்டும்'' என்று அதட்டினார் பெரியன்னை.

லாவண்யா வியப்புடன் திலகவதியைப் பார்த்தாள். எங்கே சென்றாலும் சரிதான். இயன்ற உதவியைத் தேவையானபோது செய்யாவிட்டால் செந்திரு மகளை வாங்கு வாங்கென்று வாங்கி விடுவார். இங்கேயோ திலகவ்தி மகளை அதட்டுவதுகூட இல்லை. தாயிட மிருந்து கனிவும் கண்டிப்பும் கலந்து பிறப்பது தானே இயற்கை. "இன்னும் கொஞ்சம் எடுத்துக் கொள் லாவண்யா. நீ வருகிறாய் என்று இந்தச் செவலை கன்று போட்டிருக்கிறது பாரேன்" என்று இன்னொரு பால் கட்டியை அவளுக்கு வைத்தார் பார்வதி.

கடம்புப் பாலில் சர்க்கரை கலந்து இட்டிலி மாதிரி அவித்திருந்தார் அவர். வெகு ருசியாக இருந்த போதும் பாதிச் சாப்பாட்டில் பானு சென்றதால் லாவண்யாவால் சுவைத்து உண்ண முடியவில்லை!

## 9

அன்று மாலையில் மலைக்குச் சென்றார்கள். திலக வதியும், சிவநாதரும் வரவில்லை என்று மறுத்துவிடவே இளைய தலைமுறையினர் மட்டும் சென்றார்கள்.

கொஞ்சம் ஏறியதும் செருப்பு காலைக் கடிப்பதாகச் சொல்லி பானுமதி உட்கார்ந்து விட்டாள்.

"மட்டி" என்று தலையில் அடித்துக் கொண்டான் வினு. "மலை ஏறுவதற்கு நீண்ட குதிகால் உயர்ந்த செருப்பை யார் போடுவார்கள்? லாவண்யா அக்கா வைப் பார். எவ்வளவு மிருதுவான செருப்பு போட்டிருக் கிறாள். உனக்கு மண்டையில் மூளை இருந்தால் தானே?" என்று பெரிய மனிதன் போலக் கண்டித்தான்.

ஆத்திரத்துடன் நிமிர்ந்தாள் பானுமதி. அதற்குள் ''போதுமடா வினு'' என அடக்கினான் அருண்.

''பிறகு பார்க்கலாம். இப்போது வீடு திரும்பு வோம்'' என்றாள் லாவண்யா.

''அருண், நீங்கள் லாவண்யாவையும் வினுவையும் அழைத்துக் கொண்டு செல்லுங்கள். நான் பானுவுக்குத் துணை இருக்கிறேன்'' என்று பரிந்து வந்தான் மணிவண் ணன்.

''எனக்காக யாரும் தொல்லைப்பட வேண்டாம்'' என்றாள் பானு அசட்டையாக.

பேசாமல் தரையில் கைக்குட்டையை விரித்து அமர்த்தான் மணிவண்ணன். ஆயினும் முகம் மட்டும் கன்றிச் சிவந்து போயிற்று.

இவனை அனுதாபமாகப் பார்த்தாள் லாவண்யா. அந்த இடத்தில் கபாலி இருந்தால் என்ன எல்லாம் அளந்திருப்பான்? ''உன்னுடன் பேசிக்கொண்டு இருப்ப தைவிடச் சிறந்த பொழுது போக்கு உண்டா? அது என் பாக்கியம். முன் பிறவியின் புண்ணியத்தின் பலன்'' என்று கதைவிட்டிருப்பான். ''இந்த அசட்டு மணிவண்ண னுக்கு ஒன்றும் தெரியவில்லையே'' என வருந்தினாள்.

''சரிதான் மணி. நாங்கள் போகிறோம்'' என்று கிளம்பினான் அருண்.

இரண்டு எட்டு செல்லுமுன் முன்னே வினு ஓடிவிட் டான்!

அருணுடன் தனியே சென்றாள் லாவண்யா. காலை நடந்தது எல்லாம் நினைவுக்கு வந்தது. கோபமும் குழப்ப முமாக நேரே சாலையைப் பார்த்து நடந்தாள்.

''உன் வயது என்ன?'' என்று திடீரென்று அருணின் குரல் கேட்கவும் லாவண்யா சற்றுத் திகைத்தாள். ''ஓ... ஏன்?''

''சொல்லேன்.''

''ஏன் கேட்கிறீர்கள்?'' என மீண்டும் வினவினாள்.

''சும்மா தெரிந்து கொள்ளத்தான். அம்மாவானால் உன்னை வானளாவப் புகழ்ந்து தள்ளுகிறார்கள். நானும் தான் உன்னைச் சற்று புரிந்து கொள்ளுகிறேன்.''

''ஓகோ!''

''ஆமாம், ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளா மலே கீரியும் பாம்புமாய்ச் சண்டையிடுவதை விடப் புரிந்துகொண்டு யுத்தம் செய்யலாமே என்று நினைத் தேன்.''

''சண்டை...?'' என்று இழுத்தாள் லாவண்யா.

''சண்டையேதான், கோல்டு வார் என்பார்கள். கத்தியின்றி ரத்தமின்றி நாம் நடத்தும் யுத்தம்.''

லாவண்யா பதில் சொல்லாமல் நடந்தாள்.

''இல்லையா? இல்லையென்று சொல்லிவிடு பார்க் கலாம்'' என்று விளையாட்டாக மிரட்டினான் அருண்.

அதன் பதிலாக லாவண்யாவிடம் ஓர் இனிய புன்னகை மலர்ந்தது.

''உன் சிரிப்பு மிக அழகாக இருக்கிறது. பார்ப்பதற் கும் கேட்பதற்கும் கூட'' என்றான் அவன் புன்னகை யுடன்.

சட்டென முகம் சிவந்து விட்டது அவளுக்கு சமாளித்துக் கொண்டு "அப்படிச் சண்டை போட்டாலும் அதற்கு யார் காரணம்?" எனக் கேட்டாள் லாவண்யா.

"காரணம்...அது போகட்டும் லாவண்யா. இது சாதாரண காலம், சரிதானா? எனக்கு வயது இருபத்தி ஏழு. உனக்கு?" என எடுத்துக் கொடுத்தான்.

"பதினெட்டரை" என்ற பதிலின் பின்னே பேச்சு கொஞ்சம் இயல்பாகச் சென்றது.

"சென்னை வீடு என்றாயே லாவண்யா; அப்படியானால் நீ வேலூர்க்காரி அல்லவா?"

"சென்னைதான் நான் பிறந்து வளர்ந்த ஊர். அப்பாவுக்கு உடம்பு சரியில்லாமல் போன பிறகுதான் வைத்திய வசதிக்காக வேலூருக்கு போனோம். ஆனால்..." என்று உதட்டைக் கடித்துக் கொண்டு மவுனமானாள் அவள்.

"ஆறி வரும் புண்ணைக் கீறிவிட்டு விட்டேன். என்னை மன்னித்துவிடு லாவண்யா?" என்று இதமாகப் பேசினான் அருண்.

தன் வேதனையெல்லாம் மறைவதை உணர்ந்தாள். லாவண்யா, "அதெல்லாம் இப்போது அதிகம் தெரியவில்லை. அம்மா அப்பாவை நினைக்கையில் மனதில் நிறைவுதான் தோன்றுகிறது. அம்மா கண்டிப்பாக இருப்பார்கள். ஆனால் எனக்குத் தேவையான எதையும் மறுத்தது கிடையாது. அப்பா கனிவே உருவாக இருப்பார். ஆனாலும் கண்டிக்க மாட்டார் என்று எண்ணித் தப்பு செய்துவிட முடியாது. என் தோழிகள் கல்லூரிக்கு மட்டம் போட்டு விட்டு சினிமாவுக்குப் போவார்கள்.

நான் அப்படிப் போனதே இல்லை. அந்தத் தேவை நேர்ந்ததும் இல்லை. சினிமா நாடகம் என்றால் அம்மா அப்பாவே அழைத்துப் போவார்கள். தோழிகளுடன் அனுப்புவார்கள். 'ஏ படத்துக்கு கூட அனுப்புவார்கள் என்றால் பாருங்களேன்.''

'' 'ஏ' படங்கள் பிடிக்குமா?''

''பிடிக்கும் என்பது இல்லை. சில...'' என்றவளுக்கும் பேச்சின் தடம் மாறியது. சட்டெனப் புரிந்தது. 'வேண்டும் என்றே மாற்றினானோ?' முகம் சிவக்க. ''என் வீட்டுக் கதையெல்லாம் சொல்லி உங்களை போரடித்து விட்டேன். சாரி'' என மன்னிப்புக் கோரினாள்.

''இதென்ன திடீர் சாரி? ஓகோ, நான் வேண்டும் என்று பேச்சை மாற்றியதாக நினைத்து விட்டாயா? அப்படி இல்லை. உன்னைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும். என்றேன் அல்லவா! உன் ரசனை பற்றித் தெரிந்தால் உன்னைத் தெரிந்து கொண்டது போல் தானே அதனால் கேட்டேன்'' என்றான் அருண்.

லாவண்யாவின் மனம் சமாதானம் அடைந்தது. அதற்குள் ஒரு சன்னமான பாதை வந்தது. பாதையின் முடிவில் சிறு ஊற்று ஒன்றிருந்தது. அங்கே வினுவும் இருந்தான். மூவருமாக மலைக் கோயிலையும் பார்த்து விட்டுத் திரும்பினார்கள்.

திரும்பி வந்து பார்த்தால் மணிவண்ணன் இடித்த புளிபோல் அமர்ந்திருக்க பானு தன் கையோடு கொண்டு வந்திருந்த நாவலில் ஆழ்ந்திருந்தாள்.

''அய்யோ மணி அண்ணா'' என்று தலையில் அடித்துக் கொள்ளத் தோன்றியது லாவண்யாவுக்கு.

இரவு உணவின்போது பானு, மணியின் திருமணம் பற்றிய பேச்சு எழுந்தது. "அவள் படிப்பு முடிந்ததும் திருமணம்தான், அண்ணி" என்றார் சிவநாதர். "அவளது திருமணத்தை முடித்து மாப்பிள்ளையிடம் பணத்தையும் ஒப்புவித்தேனேனால் என் பொறுப்பு நீங்கும்."

"மாப்பிள்ளை பார்க்கிறீர்களா?" என்று அருணுடைய அப்பா கேட்டார்.

"உம்; எனக்கும் திலகத்துக்கும்..."

"அப்பா," என்று அழுத்தமாக குரல் கொடுத்தாள் பானுமதி.

"கடைசி முடிவு உன்னதுதான் கண்ணம்மா. நாளை வாழப் போகிறவள் நீதானே," என்று பணிந்தார் சிவநாதர்.

"லாவண்யாவுக்கும் பானுவின் வயதுதான். அவளுக்கும் சேர்த்துப் பார்ப்பதுதானே" என்றார் பார்வதி.

"அக்கா," என்றார் திலகவதி கலவரத்துடன்.

"ஏன். அவளுக்கே முதலில் செய்து அழகு பாருங்களேன்" என்றாள் பானு துடுக்காக.

லாவண்யாவின் முகம் வாடியது "அதிகப் பிரசங்கித் தனமாகப் பேசுகிறேன் என்று நினைக்காதீர்கள் பெரியத்தை. இந்தப் பேச்சு இப்போதைக்கு வேண்டாம்" என்று இலையை மூடிவிட்டு எழுந்து விட்டாள்.

திரும்புகையில் அருண் அவர்களுடன் வரவில்லை. பெற்றோருடன் இரண்டு நாள் தங்கி வரப்போவதாகக் கூறிவிட்டான். ஒரு கடிதத்தைச் சிவநாதரிடம்

நீட்டினான். ''இதை மட்டும் என் செயலாளரிடம் கொடுத்து விடுங்கள். சித்தப்பா'' என்றான்.

திரும்பி வருகையில் எல்லாருக்குமே பயணம் போர் அடித்தது.

பானுமதி போக்கைக் கண்டு லாவண்யா கவலையுற்றாள். மணிவண்ணனை நினைத்தும்தான். அவர்கள் இருவரும் இணைவதை எல்லாருமே ஆவலுடன் எதிர் பார்ப்பது புரிந்தது. மணிக்கும் அதே ஆசை இருந்தது. ஆனால் பானுவின் நடப்பு மாறுபாடாக இருந்தது. அவள் கபாலி பக்கம் சாய்வது நன்றாகத் தெரிந்தது. அது தவறு ஆயிற்றே.

பெண்ணுக்குப் பெண்ணாக பானுவிடம் எடுத்துச் சொல்லவும் வழியில்லை. பானு இப்போதெல்லாம் லாவண்யாவிடம் பேசுவதே இல்லையே. இந்தப் பெரிய வர்களுக்கும் சற்றுத் தைரியம் வரலாம் என்று எண்ணிக் கொண்டாள் லாவண்யா. உடன் ஒத்த வேறு பெண்ணைச் சுட்டிக்காட்டி மட்டம் தட்டினால் அவளுக்கும் கோபம் வராதா? வளர்ந்த விதத்தில் கோளாறு இருக்க பானு வைக் குறை கூறலாமா? அது எப்படியோ போகட்டும். பானுவிடம் எப்படியும் மணிவண்ணனைப் பற்றிப் பேசியே ஆக வேண்டும் என்று முடிவு செய்தாள் லாவண்யா.

பேச்சைத் தொடங்குவதுதான் கடினமாக இருந்தது. காரணம்-வஜ்ரேசுவரியிலிருந்து வந்த பிறகு மணிவண் ணன் வடாலாவுக்கு வரவே இல்லை. கபாலி தினமும் வந்தான். வந்தது மட்டும் அல்ல. பானுவின் சினிமா ஆசையைக் கிளறிவிட்டு அந்தக் கனவில் குளிர்

காய்ந்தான். ''சஞ்சீவ்குமார் இன்றைய காட்சிக்கு வருகி றாராம். 'ப்ளா'க்கில் இரண்டு டிக்கெட்டு வாங்கி விட் டேன் பானு'' என்று அழைத்தான் ஒரு நாள்.

''இன்று பர்வீன் பாபி ஒரு பாஷன் பரேடுக்குத் தலைமை தாங்குகிறாளாம். வருகிறாயா பானு?'' என்று கூட்டிச் செல்வான் ஒருநாள். இப்படியே தினமும்.

அனைத்திற்குமே பானுமதி கபாலியுடன் சென்றாள் என்று குறிப்பிடத் தேவையில்லை. தாயின் வேதனை பாய்ந்த முகமோ, ''ஓயாமல் என்னம்மா சினிமாப் பேச்சு'' என்ற தந்தையின் சலிப்போ அவளைத் தடுக்க வில்லை.

லாவண்யா ஒருநாள் திலகவதியிடம் சொன்னாள். ''உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், 'போகாதேடி' என்று தடுப்பதற்கென்ன, அத்தை?'' என்று வினவினாள்.

''அவள் கேட்கமாட்டாளே அம்மா'' என்று அவர் வருத்தத்துடன் பதிலிறுத்தார்.

''இரண்டு அதட்டல் போட்டால் தன்னால் பணிந்து விட்டுப் போகிறாள்'' என்று கற்றுக் கொடுத்தாள் லாவண்யா.

''பழக்கம் இல்லையே கண்ணம்மா.''

''அதான் ஏன் அத்தை? நான் கூட உங்களிடம் கேட்க வேண்டும் என்றே நினைத்திருந்தேன். நீங்கள் ஏன் பிள்ளைகளை அதட்டுவது கூட இல்லை?''

''எப்படி அதட்டுவது? அவர்கள் மேல் உள்ள பாசம்! ஏன் லாவண்யா, உன்னை உன் பெற்றோர் கண்டிப்பாக வளர்த்தார்களா?''

லாவண்யா வியப்புடன் அந்த அத்தையைப் பார்த்தாள். அவளது வார்த்தைகள் சரிவரப் புரியவில்லை. ஆயினும் ஏனோ பேச்சை மாற்றினாள் என்பது தெரிந்தது. ஏன் என்று அழுத்திக் கேட்க விருப்பம் இல்லாமல் திலகத்தின் போக்கிலேயே சென்றாள்.

''அப்பா கண்டிக்க மாட்டார். ஆனால் அம்மா தோலை உரித்து விடுவார்கள். ஒருநாள் ஏதோ காரணம் இல்லாமல் ரகளை செய்தேன் என்று கம்பால் விளாசி விட்டார்கள். நானும் அப்படிப் பிடிவாதம் பிடித்து கத்தியிருக்கக் கூடாது...'' என்று சிரித்துக் கொண்டே நிமிர்ந்த லாவண்யா திடுக்கிட்டாள்.

திலகவதியின் கண்களில் கண்ணீர்!

''அத்தை, அதற்காக நான் வருந்தவில்லை...''

''அவள்... அவள் கொடுத்து வைத்தவள்'' என்று கண்ணீருடன் எழுந்து சென்று விட்டார் திலகவதி.

யார் கொடுத்து வைத்தவள்? பானுவா? அல்லது லாவண்யாவின் தாய் செந்திருவா? பிள்ளைகளை அடிப்பதற்கும் கொடுத்து வைக்க வேண்டுமா? என்ன விசித்திரமான பேச்சு இது?

லாவண்யா ஒன்றுமே புரியாமல் விழித்தாள்.

## 10

திலகவதியிடம் அதுபற்றிப் பேசிப் பயனில்லை என்று உணர்ந்தாள், லாவண்யா. சிவநாதர் இதில் பின்னியுள்ள நுட்ப உணர்வுகளை உணரக் கூடியவர் அல்லர். எனவே, லாவண்யா நேரடித் தாக்குதலில் ஈடுபட்டாள்.

அன்று லீவு நாள். கையில் ''ஸ்டார் டஸ்ட்'' என்ற ஆங்கிலப் பத்திரிகையுடன் அரைத் தூக்கமாகத் தூங்கி வழிந்தாள் பானு லாவண்யா மெல்லச் சென்று அவள் அருகே அமர்ந்தாள். ''பானு'' என்று இனிமையான குரலில் அழைத்தாள்.

குரல் கேட்டு நிமிர்ந்த பானுவின் முகம் கருத்தது. சட்டெனப் பார்வையைப் புத்தகத்தில் பதித்துப் படிக்கத் தொடங்கினாள்.

எவ்வளவு அலட்சியம்! லாவண்யாவுக்குச் 'சுருக்' கென்றது. எழுந்து போய்விடலாமா என்றுகூடத் தோன்றி யது. போய்விடலாம்தான். ஆனால் தோல்வியை ஒப்புக் கொள்வது ஆகுமே. அதோடு மணிவண்ணன்? மன தைப் பிடிவாதமாகக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''கூப்பி டுகிறேனே பானு'' என்றாள் மீண்டும்.

''அதுதான் காதில் விழுகிறதே'' என்று எரிந்து விழுந்தாள் பானு.

''விழுந்ததா?'' என்று கண்களை அகல விரித்தாள் லாவண்யா. ''நீ புத்தகத்தைத் தொடர்ந்து படிக்கவும் உன் காதில் என் பேச்சு விழவில்லையாக்கும் என்றல்லவோ எண்ணி விட்டேன்!''

புத்தகத்தை மூடினாள் பானு. ''இதோ பார். எனக்கு இருக்கிற தொல்லைகள் போதாதா...? நீ வேறு சண்டை போட வேண்டுமா?'' என்று வெடித்தாள்.

''சண்டையா? ஏன் பானு அப்படிச் சொல்லுகி றாய்? இன்று லீவு நாள்தானே. நாம் இருவருமாகப் பேசிக் கொண்டு இருக்கலாமே என்று வந்தேன்'' என் றாள் லாவண்யா இதமாகவே.

''நாம் இருவரும் பேசும்படி என்ன விஷயம் இருக்கிறது?''

''எத்தனையோ? நாம் இருவரும் சம வயதுதானே, இருவரின் எண்ணங்கள், ஆசைகள்...''

''எல்லாம் இரண்டு துருவத்தில் இருக்கின்றன'' என்று குறுக்கிட்டாள் பானு.

மேலே எப்படிப் பேசுவது என்று லாவண்யாவுக்கு புலப்படவில்லை. பேச வந்தது மிகமிக மென்மையான விஷயம். நெருங்கிய தோழிகளுக்குள்ளே கூடச் சடுதியில் பேசிக் கொள்ள முடியாதது. இப்படிப் பட்டு பட்டென்று பேச்சைக் கத்தரிப்பவளிடம் எப்படித் தொடங்குவது?

''நீ பேசி முடித்து விட்டாயல்லவா? இனி நான் படிக்கிறேன்'' என்று புத்தகத்தை எடுக்கக் கை நீட்டினாள் பானு.

''பொறு பானு! நம் மணிவண்ணனைப் பற்றி... வந்து மணிவண்ணன் இருக்கிறாரே...''

''இல்லாமல் என்ன?''

''அவரைப் பற்றி என்ன நினைக்கிறாய்? அவர் மிகவும் நல்லவர் என்று எனக்குத் தோன்றுகிறது. உனக்கு...''

''ஒன்றும் தோன்றவில்லை'' என்றாள் பானு வெடுக்கென்று.

லாவண்யா லேசாக முறுவல் காட்டினாள்.

''அதெப்படி ஒன்றும் தோன்றாமல் இருக்கும்? அவர் அடிக்கடி இங்கே வருகிறார்.''

''நம் வேலைக்காரி காவேரி கூடத்தான் அடிக்கடி வருகிறாள். அவளைப் பற்றி என்ன தோன்றும்? அவ ளைப் போல அப்பாவிடம் வேலை செய்கிறவர் தானே இவரும். இவரைப் பற்றி மட்டும் என்ன தோன்றக் கூடும்?''

''இந்த வீட்டில் எல்லாருமே அவரை ஓர் உறவின ராக, நண்பராக எண்ணித்தான் பழகுகிறார்கள்'' என்றாள் லாவண்யா சிறு சினத்துடன்.

''மற்றவர்கள் பழகுகிறார்கள். அது அவரவர் விருப் பம். என்னைப் பொறுத்தவரையில் அந்த அனாதையைப் பற்றி அக்கறை இல்லை'' என்று எடுத்தெறிந்து பேசி னாள் பானு.

''அப்படிப் பேசாதே பானு. நான்கூட அனாதை தான்'' என்றாள் லாவண்யா.

''அதனால்தான் அந்த அனாதைமேல் அப்படிப் பாசமும் பற்றும் உருவர்கிவிட்டன போலும்'' என்றாள் பானு குத்தலாக.

''அதனால் மட்டும் அல்ல, அவர் நல்லவர், பண்புள் ளவர். மற்றவரின் பலவீனங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் கெட்ட குணம் இல்லாதவர்...'' என்று அடுக் கினாள் லாவண்யா.

''ரொம்பத்தான் தெரிந்து வைத்திருக்கிறாயே'' என்று ஆத்திரத்துடன் எழுந்தாள் பானு.

''நீயும் தெரிந்து கொள்.''

''எனக்கு நீ வந்து சொல்ல வேண்டிய தேவை இல்லை.''

''யாராவது சொல்லியாக வேண்டும் அல்லவா?''

''வாயை மூடு'' என்று கத்தினாள் பானு.

''என்ன சப்தம்...'' என்று அங்கே வந்தாள் திலகவதி. முகம் சிவக்க மூச்சு வாங்கிக் கொண்டு நின்ற இரு பெண்களையும் பார்த்தார். ''என்னம்மா லாவண்யா நீயேனும் பொறுத்துப் போய்விடக் கூடாதா?'' என்று வேதனைப் பட்டார்.

அவ்வளவுதான், பானுவுக்கு வந்ததே கோபம். ''ஆமாம், அவள் பொறுமையில் பூமாதேவி. பொறுத்துப் போவாள். நான் யார்? பேய், பிசாசு, பூதம், பெரிய ராட்சசி அப்படித்தானே? யாருக்குத்தான் என்னைப் பிடிக்கும்? கடைசியாகப் பெற்ற தாயின் பிரியம்கூட இல்லை'' என்று அழுது கொண்டே ஓடினாள் பானு.

லாவண்யா திகைத்து நின்றாள். மகள் விம்மி அழக் கண்டதும் தாயின் கண்களிலும் நீர் சுரக்கக் கண்டாள். தன்னைக் குற்றவாளியாக உணர்ந்தாள். ''அத்தை நான் அவளுக்கு நல்லது என்று எண்ணிச் சொல்லப் போனேன் அத்தை. அவள் இப்படியெல்லாம் நினைத்திருப்பாள் என்று எண்ணவே இல்லை'' என்றாள் மெல்லிய குரலில்.

திலகவதி கண்ணீரை அடக்கிப் புன்னகை புரிய முயன்றாள். ''உன் பேரில் குற்றம் இல்லையம்மா. பார்க்கப் போனால் பானுவிடமும் தவறு இல்லை. எல்லாம் இட்டாருக்கு இட்டபடி நடக்கும். நீ அவளை அவள் போக்கில் விட்டுவிடு'' என்று பெருமூச்சு விட்டார்.

ஆனால் லாவண்யாவால் அது இயலவில்லை. வேண்டுமென்றே ஒருவர் கிணற்றில் விழுகையில்

கையைக் கட்டிக் கொண்டு பார்க்க இயலுமா? ஆனால் இனியும் என்ன முயற்சி செய்வது? இந்த அருண் மட்டும் இங்கிருந்தால்...? அவன்தான் இடையில் ஒருநாள் பம் பாய்க்கு வந்துவிட்டு மீண்டும் பெற்றவர்களிடம் குழந்தை போலக் கொஞ்சப் போய் விட்டானே. ''சின்ன பாப்பா'' என்று பழிப்பு காட்டிக் கொண்டாள் லாவண்யா.

கபாலி பானுவைக் கவர முயன்றாலும் அதன் காரணம் மெய்யான காதல் இல்லை என்றே லாவண்யா நினைத்தாள். பல சமயங்களில் அவனது பார்வை திருட் டுத்தனமாகத் தன்மேல் படிவதை அவள் கண்டிருந்தாள். ஒருத்தியிடம் மெய்யான நேசம் கொண்ட ஒருவனது பார்வை மற்ற பெண்களிடம் இவ்வாறு படியுமா?

''தன் அலங்காரப் பேச்சினாலும், நடை உடை பாவனைகளினாலும் பானுவை மணிவண்ணனிடம் இருந்து பிரித்துக் கவர முயல்கிறான் கபாலி. முள்ளை முள்ளால் எடுப்பது போல கபாலியைத் தன் எழிலால் கவர்ந்து இழுத்தால் என்ன? முடியுமா? கண்ணாடியின் முன்னே நின்று தன்னையே ஒருமுறை நன்கு பார்த்தாள். உச்சி முதல் உள்ளங்கால் வரை ஓர் அங்கமும் அழகற்றுத் தெரியவில்லை. லாவண்யாவின் மனதிலும் தைரியமும் பெருமிதமும் பிறந்தன.

அன்று மாலையும் கபாலி வந்தான். வழக்கமாக வெறும் முகமனுடன் விலகி விடுவாள் லாவண்யா. இன்று நின்று புன்னகை புரிந்தாள். ''அலோ மிஸ்டர் கேபால், அசப்பில் தேவ் ஆனந்த் என்று எண்ணிவிட் டேன். இந்த அலங்காரத்தில் படத் தயாரிப்பாளர்கள்

உங்களைப் பார்த்தால் பிறகு அவருக்கு ஏது படம்?'' என்று ஐஸ் வைத்தாள்.

கபாலிக்கு உச்சி குளிர்ந்தது. கூடவே அச்சமும் பிறந்தது. இந்த லாவண்யா எத்தனையோ தடவை அவன் காலை வாரிவிடவள் ஆயிற்றே. ''மெய்யா கவா?'' என்று எச்சரிக்கையுடன் வினவினான்.

''எங்கே அடிப்பது தலையிலா கையிலா?'' என்று சிரித்தாள் லாவண்யா. கூடவே, ''போங்கள் கேபால், என்னைப் போய் நீங்கள் வாங்கள் என்று சொல்லுகிறீர் களே! உங்கள் கண்ணுக்கு என்னைப் பார்த்தால் உங் களை விடவும் மூத்தவள் போலவா இருக்கிறது. ம்ம்...?'' என்று பொய்க் கோபம் காட்டினாள்.

''அய்யோ இல்லை இல்லை. நீங்...இ...நீ கோபித் துக் கொள்ளாதே லாவண்யா. என்னைச் சொல்லுகி றாயே. உன்னைப் பார்த்தால் அப்படியே ஜீனத் அம னைப் போல் இருக்கிறதே'' என்று கொஞ்சிக் குழைந் தான் அவன்.

''அக்கா, இந்த விளையாட்டு கிரேனில் நூல் ஏறி இறங்கவில்லை. நீ பாரேன்'' என்று சமயம் பார்த்து வந்து சேர்ந்தான் வினு.

''வினு, உன் அக்கா சொல்லுவதைக் கேட்டாயா? நான் தேவ் ஆனந்த் மாதிரி இருக்கிறேனாம்'' என்றான் கபாலி பெருமையாக.

''பானு மக்குதானே, அவள் இப்படித்தான் ஏதாவது உளறுவாள்'' என்றான் வினு அலட்சியமாக.

முகம் சுண்டி, ''பானு சொல்லவில்லை, உன் லாவண்யா அக்காதான் சொன்னாள்'' என்றான் அவன் ஆத்திரத்துடன்.

வினு வியப்புடன் லாவண்யாவைப் பார்த்தான். ''சே அவள் உங்களைக் கேலி செய்திருப்பாள்.''

லாவண்யாவுக்குச் சிரிக்க முடியாத நிலை. வாயைத் திறந்தால் சிரித்து விடுவோமோ என்ற பயம். இரண்டை யும் சமாளித்துக் கொண்டு, ''மெய்யாகவேதான் சொன் னேன் வினு. அவர் நிற்கிற ஸ்டைலைப் பாரேன்.'' 'என்னோடு சேர்ந்து பேசேன்' என்று அவளது விழிகள் கெஞ்சின.

வினுவோ ''ஓகோ'' என்று சிரித்தான். ''தேவ் ஆனந்த் இப்படி இருந்தால் அந்த ஜீனத் அமன் தற் கொலை செய்து கொள்ளுவாள் அக்கா'' என்று மீண்டும் சிரித்தான்.

''இங்கே என்ன சிரிப்பு?'' என்று சிடுசிடுத்தபடி பானு உள்ளே வந்தாள். கபாலி லேசாக மிரண்டான்.

வினுவைப் பேசவிட்டால் காரியம் கெட்டுவிடும் என்று, ''வா, வினு! உன் கிரேனைப் பார்ப்போம்'' என்று அவனோடு உள்ளே சென்றாள் லாவண்யா.

''இவ்வளவு நேரம் அவளுடன் என்ன பேச்சு?'' என்று பானு வெடுவெடுப்பதும் அவன் குழைந்து குழைந்து பதில் சொல்வதும் லாவண்யாவின் காதில் விழுந்தது.

மறுநாளும் கபாலி தவறாமல் வந்தான். சுற்றிப் பார்ப்பது போலக் கீழேயே நின்றாள் லாவண்யா. இன்று

அவள் ஒரு பச்சைப் பாவை சேலை, சோளி, காதணி, வளையல், பொட்டு எல்லாமே பச்சை. அந்தப் பச்சை அவள் உடலின் வெண்மையில் அழகு காட்டியது.

கபாலி கள்ளுண்டவன்போல அவளை விழுங் கினான்.

அவனது பார்வையில் மூண்ட எரிச்சலை வெளிக் காட்டாது மறைத்தாள் லாவண்யா. ''உங்களை எதிர் பார்த்து எதிர்பார்த்துக் கண் பூத்துவிட்டது, கேபால்!'' என்று கிளி மொழி பேசினாள்.

அவனுக்கு உச்சி குளிர்ந்தது. ஆயினும், ''என் னையா? அல்லது மணிவண்ணனையா?'' என வேண்டு மென்றே கேட்டான்.

ஆள் அசடன் அல்ல என்று கண்டு கொண்டாள் லாவண்யா. ''மணிவண்ணனையா?'' என்று அதிசயத் துடன் வினவினாள், ''மணிக்காக நான் இங்கே நிற்பேன் என்றா நீங்கள் எண்ணினீர்கள்?''

''அப்படி இல்லை...'' என்று திருப்தியடைந்தான் கபாலி.

அதற்குள் ''கேபால்'' என பானுவின் அழைப்பு மேலிருந்து கேட்டது. படிகளை இரண்டிரண்டாகத் தாவி ஏறினான் கபாலி. உங்கள் கார் அப்போதே வந்ததே...'' என்று பானு கபாலியின் பின்னால் வந்த லாவண்யா வைக் கண்டாள், ''ஓகோ இவளுடன்தான் சல்லா... பேச்சு நடந்ததோ?'' என்று குமுறினாள்.

''இல்லை இல்லை பானு, நீ தயாரா என்றுதான் அவளிடம் கேட்டேன்'' எனச் சமாளித்தான் கபாலி.

"இன்று வெளியே போக வேண்டுமா கபால்? இங்கேயே பேசிக்கொண்டு இருக்கலாமே?" என்று குழைந்தாள் லாவண்யா.

"ஓ. எஸ். தாராளமாக..."

"எனக்குப் போக வேண்டும்" என்று கீச்சிட்டாள் பானு.

"போகலாமே. உன் விருப்பமே என் விருப்பம்" என்று அவசரமாகப் பணிந்தான் கபாலி.

லாவண்யா திகைத்தாள். சற்றுமுன் அவன் மயங்கி நின்றதென்ன? இப்போது நாய்க்குட்டி போல பானுவின் பின்னே செல்வதென்ன?

யோசனையோடு உள்ளே திலகவதியிடம் சென் றாள். "அத்தை, ஒன்று கேட்கிறேன் சொல்லுங்கள். இந்த பானு தனியே கபாலியிடம் சினிமா அது இதென்று போகிறாள். நீங்கள் தடுக்கவில்லையே. வினுவைக் கூடத் துணைக்கு அனுப்பவில்லை? அங்கெல்லாம் என் தோழி களின் அண்ணன் யாருடனாவது பேசினால்கூட அம்மா 'ஒதுங்கி விடம்மா' என்று தடுப்பார்கள். அத்தை, உங்க ளுக்குத் தெரியாததை நான் சொல்லவில்லை. ஆனால்..."

"அது அங்கே நடக்கும். பக்கத்து பிளாக் நீதுவைப் பார். அந்தப் பையனுடன் சுற்றிவிட்டு இரவில் ஒரு மணி இரண்டு மணி என்று திரும்புகிறாள். கேட்டால் கட்டுப் பெட்டி என்பார்கள். நீங்கள் தடுக்கத் தடுக்கத்தான் எங்களுக்கும் மீறும் ஆசை வருகிறது என்பார்கள். இன்னும் கபடமற்றுப் பழகுகிறோம் என்பார்கள். ஏதோ

நம் பெண் இந்த அளவில் நிற்கிறாளே என்று திருப்தி அடைய வேண்டியதுதான்'' என்றார் திலகவதி. தன் பதிலில் லாவண்யா திருப்தி அடையாதது தெரிந்தது. ''கபாலி என்பதால் கேட்கிறாய். இதுவே மணிவண்ண னாக இருந்தால் என்ன சொல்லுவாய்?''

''மணிவண்ணனும் கபாலியும் ஒன்றில்லையே அத்தை.''

''மெய்தான் அம்மா, தங்கமும் பித்தளையும் ஒன்றா குமா? ஆனால் கழுதை மேய்க்கும் அதிர்ஷ்டம் இருக்க அரசாளும் ஆசை இருந்து என்ன செய்வது'' என்றார் வருத்தமாக.

''உம் வருத்தப்படாதீர்கள் அத்தை. எல்லாம் சரியா கிப் போகும்'' என்று பெரிய மனுஷிபோல அவருக்கு ஆறுதல் கூறினாள் லாவண்யா.

திலகவதிக்குச் சிரிப்பு வந்தது. ''நீ சொன்னால் சரிதானடி தங்கம்'' என்று அவளது முகவாயைத் தொட்டு முத்தமிட்டார்.

இப்போது அருண் இருந்தால்? அவன் சொல்லுக்கு பானு, வினு இருவரிடமும் மதிப்பு இருந்தது.

முன் அறையில் டெலிபோன் மணி அடித்தது.

''போய் எடு லாவண்யா. வினு கூட வீட்டில் இல்லை.''

ஓடிவந்து ரிசீவரை எடுத்தாள் லாவண்யா. ''அலோ இங்கே மிஸ்டர் சிவநாதரின் வீடு.''

''அருண் பேசுகிறேன்.''

ஒரு கூடை ரோஜா இதழ்களை யாரோ லாவண்யா மேல் கொட்டினார்கள். முல்லையின் மணத்துடன் தென்றல் வீசிற்று. இன்னிசை கீதம் முழங்கியது.

எல்லாம் வினாடி நேரத்திற்குள்ளாக.

## 11

பூவின் மென்மையையும் இன்னிசையையும் ரசித்துக் கொண்டிருந்த லாவண்யாவினால் சட்டெனப் பேச முடியவில்லை.

''இம்'' என்றாள் அவள். ஒரு வழியாக.

''லாவண்யா தானே?'' அருண் மீண்டும் பேசினான்.

''என்ன பேச்சையே காணோமே?'' குரல் சிரித்தது.

அவளது முகம் சிவந்தது. ''வந்து இங்கே வருகிறீர்களா?... அதாவது நீங்கள் வருவதாக அத்தையிடம் சொல்ல வேண்டுமா என்று கேட்டேன்'' என்று அவசரமாகச் சேர்த்துச் சொன்னாள்.

அவன் நன்றாகவே சிரித்தான். பிறகு, ''இல்லை லாவண்யா. இன்றுதான் ஊரில் இருந்து வந்தேன். வேலைகள் பாக்கி கிடக்கின்றன. நாளை மாலையில் எப்படியும் வந்து விடுகிறேன். அதாவது வந்து விடுவதாகச் சொன்னேன் என்று சித்தியிடம் சொல்லிவிடு. சரி தானே. வைத்து விடட்டுமா?'' என்று சிரித்துக் கொண்டே டெலிபோனை வைத்தான்.

அந்தச் சிரிப்பு இன்னமும் சற்று நேரம் கேளாதா என்று எண்ணுவதுபோலச் சற்று நேரம் ரிசீவரைக் காதிலேயே வைத்துக் கொண்டு நின்றாள் லாவண்யா.

''யார் பேசினது லாவண்யா?'' என திலகவதியின் குரல் குரல் கேட்டது.

லாவண்யா சுய நினைவுக்கு வந்தவளாய் ரிசீவரைக் கீழே கிடத்திவிட்டு உள்ளே விரைந்தாள். ''அத்தை, நாளை மாலை அவர்...அவர்தான்...அருண் இங்கே வருகிறாராம். உங்களிடம் சொல்லச் சொன்னார்'' என்று அவசரமாக மொழிந்தாள். பின் மடமடவென்று தனது அறைக்குள் சென்றாள். கட்டிலில் பொத்தென அமர்ந்தாள். குப்பென்று சூடேறிச் சிவந்த கன்னங்களை விரல் நுனியால் மெல்லத் தொட்டாள். இந்த அருண் அவளை எழிலூர் இளவரசி என்றவன்; அவளது மென்மையான இதயத்தைக் குத்திக் கிழிக்க முயன்றவன், அவனது வரவில் ஏன் இந்தப் பரபரப்பு? ஒருவேளை பானு விவகாரத்தில் தீர்வு காணும் வல்லமை படைத்த ஒரே மனிதன் என்பதாலோ? என்னவோ? அவனது வரவை அவள் ஆவலோடு எதிர்பார்த்தது உண்மை.

மறுநாள் அழகாக விடிந்தது. வளர்ந்தது. மாலையும் வந்தது. ஆனால் அது வந்த விதத்தில்தான் எங்கோ கோளாறு நேர்ந்து விட்டது.

அன்று லாவண்யா அதிக கவனத்துடன் அலங்காரம் செய்து கொண்டாள். கடல் பச்சை நிறத்தில் அதே வண்ணச் சீக்குவின் தைத்த சேலை. அதே நிறப் பொட்டும் பால் வண்ண நெற்றியில் பளபளத்தது. அலங்காரம் நிறைவு பெற்றதும் கண்ணாடியில் பார்த்தாள். இவ்வளவு

அழகாக இருக்கிறோம் என்று பெருமையாகக்கூட இருந்தது. லேசாக உடலைத் திருப்பி அழகு பார்த்துவிட்டுத் திரும்பினாள்; திகைத்தாள். அங்கே முகத்தில் அசடு வழியக் கபாலி நின்றான்.

என் தனியறைக்குள் இவன் எப்படி வரலாம் என்று அவள் மனதில் ஆத்திரம் பொங்கி எழுந்தது. உடனேயே அதை அடக்கினாள். இது ஆத்திரத்தைக் காட்டும் சமயம் அல்ல. அருணின் வார்த்தைகள் பானுவிடம் மதிப்பிழந்தது என்றால் கபாலியின் நிஜமான நிறத்தை வெளிப்படுத்துவது ஒன்றுதானே மீத்திருக்கும் வழி. அதை அரைகுறையில் கெடுப்பானேன்?

சிவந்த இதழ்களை மெல்ல வளைத்துப் புன்னகை புரிந்தாள். "ஓ... கேபால் வாருங்கள்" வினு முன்னறையில் இருக்கிறானா என்றபடி அதாவது அவனை நோக்கி நடந்தாள்.

அவன் உன் மத்தன்போல அவளைப் பார்த்துக் கொண்டு அசையாமல் நின்றான்.

முகம் மாறாமல் லாவண்யா சிந்தித்தாள். சட்டென திரும்பி அலமாரியில் இருந்த ஓர் ஆல்பத்தை எடுத்தாள். "இந்த ஆல்பம் பார்த்தீர்களா? என் படங்கள் மட்டும் எத்தனையோ வகை உடைகளில் எடுத்தது. இந்தாருங்கள்" என்று ஆல்பத்தை நீட்டினாள்.

"பலவகை உடைகளா?" வாயைப் பிளந்தபடி இரண்டு எட்டு எடுத்து ஆல்பத்தை வாங்கக் கை நீட்டினான் கபாலி.

வேகமாக முன்னே நடந்து வெளியே வந்தாள் லாவண்யா. கதவைத் தாண்டியதும் திரும்பி, "இங்கே

வாருங்களேன் கேபால் ரேடியோ கேட்டபடி பார்க்க லாம்'' என அறையை நோக்கி ஒயிலாக நடந்தாள்.

அவள் மேனியில் வைத்த கண்ணைத் திருப்ப முடியாமல் கபாலியும் தொடர்ந்தான்.

''வினு, நீயும் என் போட்டோ ஆல்பம் பார்க்கிறா யாடா?'' என்று அவனையும் அழைத்துக் கொண்டாள் லாவண்யா.

''ஓ'' என்று ஆவலுடன் ஓடிவந்தான் அவன்.

ஒரு சோபாவில் லாவண்யா அமர்ந்து படங்களைப் புரட்டினாள். சோபாவில் ஒருபுறக் கையில் வினு அமர்ந் தான். மறு கைப்பிடியில் கபாலி அமர்ந்து படங்களைப் பார்க்கத் தொடங்கினான். பல்வேறு விளையாட்டுகளில் கலந்துகொண்டு அவள் ஓடும்போது, பந்தெறியும்போது, பரிசு வாங்கும் போது எடுத்த படங்கள் ஆல்பத்தின் ஒரு பகுதியை நிறைத்தன. மறுபகுதியில் நாட்டியத் தோற்றங்கள். வினு ஆவலுடன் படங்களைப் பார்க்கை யில் கபாலி விழிகளால் தன்னை விழுங்குவதை உணர்ந் தாள். கூடவே, இன்னொரு உணர்வும் உறுத்தியது. உணர்வின் வழியே கண்கள் செல்லத் திரும்பினாள். அங்கே அருண் நின்றான். அவனது கண்களில் அதே உறுத்துப் பழைய குற்றம் சாட்டும் பார்வை, அவளையே பார்த்தபடி நின்றான்.

அதற்குள் வினுவும் தன் அண்ணனைக் கண்டு கொண்டான். ''அண்ணா அண்ணா இங்கே பாருங்கள். லாவண்யாக்கா எத்தனை பரிசு வாங்கியிருக்கிறாள் தெரி யுமா?''

திலகவதியும் விரைந்து வந்தார். ''வா வா. வாப்பா அருண். அக்கா, அத்தான் எல்லாரும் நலமா?'' எனக் குசலம் விசாரித்தார்.

''உங்களைப் பார்த்து நாளாயிற்று'' என்றான் கபாலி.

எல்லாருக்கும் ஒரு புன்னகையைப் பதிலாக ஈந்து விட்டு லாவண்யாவுக்கு நேர் எதிரில் வந்து அமர்ந்தான் அருண். வேலையாளை அழைத்து காரில் உள்ள உடையை எடுத்துவரச் சொன்னான். பார்வை மட்டும் லாவண்யாவை, குறிப்பாகக் கபாலியின் அருகாமையில் அவள் அமர்ந்திருப்பதைக் கண்டிக்கும் வகையில் உறுத் துப் பார்த்தது.

பழைய கோபம் தலை தூக்கியது லாவண்யாவிடம். இவன் என்ன என்னைக் கண்டிப்பது என்று ஆத்திரப்பட் டாள். பானு உட்காரவில்லை? அப்போது எங்கே போயிற்று இவன் புத்தி? ''இவன் பார்வையை நான் லட்சியம் செய்யப் போவது இல்லை. இப்படியே அமர் வேன்'' என்று மனதினுள் சொல்லிக் கொண்டாள்.

ஆனால் அதை நிறைவேற்றுவதற்குள் மிகவும் சங்க டமாக இருந்தது. கடைசியாகப் பொறுக்க முடியாமல் போனபோது திலகவதி சிற்றுண்டித் தட்டுடன் வந்தார். ''நான் காபி கொண்டு வருகிறேன், அத்தை'' என்று சரேலென எழுந்து உள்ளே சென்றுவிட்டாள்.

திலகவதி கலந்து வைத்திருந்த காபியை சம அள வாகக் கோப்பைகளில் ஊற்றினாள். உள்ளூர மனம் பொங்கியது; அவள் அருணை எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்தாள்! — பானுவுக்காக என்றாலும் லாவண்யா

ஆவலுடன் அவனை எதிர்பார்த்தது மெய்தானே. இவன் வந்து விட்டான் குற்றம் சாட்டும் பார்வையுடன். அத்தை யிடம், வினுவிடம், சிரிக்கத் தெரிகிறதே, இந்த அப்பா விப் பெண்ணிடம் சற்றுச் சிரித்தால் முத்தா உதிர்ந்து விடும்? வஜ்ரேசுவரியில் அவன் சிரித்தது நினைவு வந்தது. ஒருவேளை இந்த ஊர் மண்ணை மிதித்தாலே அவன் மாறிவிடுவான் போலும்.

காபிக் கோப்பைகள் நிறைந்தன. ஒரு பெரிய அழகிய தட்டில் கோப்பைகளை அடுக்கினாள். முன் அறைக்கு எடுத்துச் சென்றாள். இந்த அருணைப் பாரா மல் மீள ஒரு வழி யோசித்தாள்.

''அத்தை! அடுத்த காம்பவுண்டு ரிடாவிடம் இந்த லைப்ரரி புத்தகத்தைக் கொடுத்து விட்டு வருகிறேன்'' என்றாள்.

''வேணுமானால் முருகனிடம் அனுப்பேன். அம்மா,'' என்றார் சூது அறியாத அந்த அம்மாள்.

''இல்லை அத்தை. நான் அப்படியே இந்த பூங்கா வரையிலும் போய் வருகிறேன். அன்று பார்த்தோமே— அந்தப் பெரிய வைலட் மொட்டு இன்று மலர்ந்திருக் கும்.'' வாய்க்கு வந்ததைக் கோர்வையாக உளறினாள் லாவண்யா.

கபாலி ஒருவிதமாகப் புன்னகை புரிந்ததையோ, அருணின் முகம் கருத்ததையோ அவள் கவனிக்க வில்லை. ''வரட்டுமா, அத்தை'' என்று ஓடிவிட்டாள். கீழே வந்த பிறகுதான் புத்தகம் கொண்டு வரவில்லை என்பது புரிந்தது. 'பரவாயில்லை' என்று பூங்காவை நாடிச் சென்றாள்.

பூங்காவின் நுழை வாயில் அருகிலேயே ஓர் ஓர மாக அமர்ந்தாள். கை தன் போக்கில் புல்லின் தளிர்களை வருடியது. மனதில் ஒரே ஏமாற்றம்.

''குறிப்பறிந்து வந்துவிட்டேன் பார்.'' என்று கபாலி யின் குரல் அவள் காதருகில் பெருமை அடித்தது!

லாவண்யா திடுக்கிட்டு நிமிர்ந்தாள். வரும்போது அவன் பார்வை சட்டெனு நினைவு வந்தது. இப்படியா நினைத்தான். அட கஷ்ட காலமே? ஆனால் எதுவும் நலமே. மணிவண்ணனுக்கேனும் உதவி புரியலாம்.

ரோஜா வண்ண உதடுகளை மிக அழகாக வளைத் தாள். ''உங்கள் சாமர்த்தியம் யாருக்கு வரும்!'' என மெச்சினாள்.

''நீயும் புத்திசாலிதான். ஜாடையாகச் சொன்னாயே. எனக்கு புத்திசாலிகளைப் பிடிக்கும்.''

''எனக்கும் பிடிக்கும்.''

''லாவண்யா, உன் உடை எனக்குப் பிடிக்கிறது.''

''எனக்கும்தான்.''

''என் உடை?''

''அதுவும் பிடிக்கும்.''

''ஆக எனக்குப் பிடித்ததெல்லாம் உனக்கும் பிடிக் கும் இல்லையா?''

''ஆமாம்'' என்று அசடுபோலச் சிரித்தாள் லாவண்யா.

கபாலியின் கை சட்டென லாவண்யாவின் கரத்தை மூடியது.

லாவண்யா இதை எதிர்பார்க்கவில்லை. கொஞ்சம் அதிர்ந்து போனாள். உடனே சமாளித்துக்கொண்டு வெகு லாவகமாகக் கையை உருவினாள் "ஆமாம் பானு வருகிற நேரம் ஆயிற்றே. ஒரு வேளை வந்திருப் பாளோ? எனக் கேட்டபடி எழுந்தாள்.

அதற்குள் கபாலியும் துள்ளி எழுந்தான். "ஆமா மாம் நல்லவேளை நினைவு படுத்தினாய். பானு வருகிற நேரம் ஆயிற்றல்லவா? அவளைப் பார்க்கத்தான் வந் தேன் பிறகு..."

"அவளை மட்டும்தானா?" என்று லாவண்யாவின் குரல் இழைந்தது.

"சே சே. முக்கியமாக வந்தது உன் தரிசனத்துக்கா கத் தான் லாவண்யா. ஆனால் ஒரு சிக்கல் நான் அதெல்லாம் பிறகு சொல்லுகிறேன். லாவண்யா, இனி நாம் அடிக்கடி இப்படிச் சந்திக்கலாமா?"

"ஓ! சந்திக்கலாமே" என்றாள் லாவண்யா புன்ன கையுடன்.

"நீ கெட்டிக்காரி லாவண்யா, இப்போது நான் வரட்டுமா? வந்து லாவண்யா, நான் முதலில் போகி றேன், நீ சற்றுப் பொறுத்தே வா. சரிதானா?" என்று சொல்ல மனம் இல்லாமல் தயங்கித் தயங்கிச் சென்றான் கபாலி.

சில நிமிடங்கள் சென்றபின் லாவண்யா கிளம்பி னாள். மெல்ல நடந்து பூங்காவின் கேட்டைத் தாண்டும் போது தூக்கிவாரிப் போட நின்றாள். ஏனெனில் ஒற்றைக் காலை மடித்து அந்த கேட்டைத் தாங்கிய தூணின் மேல் ஊன்றியபடி நின்றான் அருண்.

முதலில் லாவண்யா ஒரேயடியாகத் திகைத்துப் போனாள். அவன் நிற்கும் இடத்திலிருந்து லாவண்யா வும் கபாலியும் பேசிய பேச்சையெல்லாம் அருண் நன்றாகக் கேட்டிருக்க முடியும். அதற்கு வசதியான இடத்தில் நின்றிருந்தான்.

அப்படியானால் அருண் உளவறிகிறானா? ஆத்தி ரத்துடன் நிமிர்ந்தாள். ''இங்கே என்ன செய்கிறீர்கள்?''

''நானா? இந்தத் தூண் விழுந்து விடக் கூடாதே என்று முட்டுக் கொடுத்து நிற்கிறேன்'' என்று இடக்காகப் பதில் கூறினான் அருண்.

## 12

லாவண்யா பேசும் வாய்ப்பிழந்து நின்றாள்.

''சரி சரி வா போகலாம்'' என்றான் அருண் அலட்சியமாக.

''நான் வரவில்லை'' என எரிச்சலுடன் மொழிந் தாள் லாவண்யா.

அருண் திரும்பினான். ''வராமல் என்ன செய்யப் போவதாக உத்தேசம்? ஒரு வேளை இந்தப் பூங்காவி லேயே படுத்து உறங்கப் போகிறாயா?''

''அப்படியே படுத்து உறங்கினாலும் அதுபற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை.''

''ஆனால் என் சித்தி கவலைப்படுவார்களே. அத னால் பிடிவாதம் செய்யாமல் வா'' என்றான் அவன் அதிகாரமாகவே.

அதன் பின்னரும் லாவண்யா அசையாமல் நிற்கவே அவன் புருவங்கள் நெரிந்தன. ''நீ புத்தி உள்ளவள் என நினைத்தேன். இப்படி அசட்டு வீண் பிடிவாதம் பிடிப்பாய் என்று நான் எண்ணியதில்லை. நீ தனியாகச் சென்று பழக்கம் இல்லாதவள் ஆயிற்றே என்று சித்தி தான் என்னை உனக்குத் துணையாக அனுப்பினார்கள்'' என்றான்.

அதற்குமேல் நின்றால் சிறுபிள்ளைத்தனமாகிவிடும் என்று அவனுக்குப் பதில் கூறாமல் லாவண்யா மிடுக்காக முன்னே நடந்தாள்.

செல்லும்போதே ''இன்று மதியம் பானு எனக்கு டெலிபோன் செய்தாள்'' என்றான் அருண்.

''.....''

''அவள் கூறியதை என்னால் நம்ப முடியவில்லை.''

''......''

''அவள் என்ன சொன்னாள் என்று கேட்கப் போவது இல்லையா?''

''அண்ணன் தங்கைக்குள் ஆயிரம் இருக்கும். அதை நான் என்ன கேட்பது? அதிலும் நான் எந்தவித உறவும் இல்லாத அன்னியப் பெண்.''

''கேளாததற்கு இதுதான் காரணமா?''

''வேறு என்ன இருக்கக்கூடும்?''

''கேட்டுத் தெரிந்து கொள்ளும் தைரியம் உனக்குக் கூட இல்லாதிருக்கலாம்'' என்று வீட்டின் படியேறத் தொடங்கினான் அருண்.

ஆத்திரத்துடன், ''நான் கோழையல்ல...'' என்று தொடங்கினாள் லாவண்யா.

''அக்கா வந்துவிட்டாள்'' என்று கத்தினான் வராண் டாவில் நின்ற வினு.

விடுவிடுவென்று உள்ளே சென்றாள் லாவண்யா. அவளுக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. எரிச்சல் எரிச்சலாக வந்தது. திலகவதியின் அருகில் சென்று பேசாமல் அமர்ந் தாள்.

''அந்தப் பூ அழகாக இருந்ததா?'' என அவர் கேட்டார்.

''பூவா? அதை யார் பார்த்தார்கள்?'' லாவண்யா திகைத்தாள். கொஞ்சம் யோசித்தபோது அங்கே பூவே பார்க்காதது நினைவு வந்தது. ''இல்லை அத்தை. அதன் அருமை தெரியாத ஒரு மட... யாரோ அதைப் பறித்து விட்டிருக்கிறார்கள்.''

''ஒரு மடசாம்பிராணியா?'' என்று வம்புக்கு இழுத் தான் அருண். ''சொல்ல நினைப்பதைத் தைரியமாகச் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் தொடங்கவே கூடாது.''

''இங்கே யாரும் யாருக்கும் பயப்படவில்லை.''

''பின்னே ஏன் பாதியில் விழுங்க வேண்டும்?''

''பறித்தவர் யாராவது வயதில் பெரியவராகக்கூட இருக்கலாம் அல்லவா? உங்களைப் போலத்தான் இருக்க வேண்டும் என்பது இல்லையே'' என்று சளைக் காமல் பதில் கூறினாள் லாவண்யா.

திலகவதி சிரித்தார். "இன்னமும் பேசினாயானால் உன்னையே மடசாம்பிராணி என்று அழைப்பாள். ஜாக்கிரதை" என மகனுக்கு எச்சரிக்கை செய்தார்.

"சொல்லிப் பார்க்கட்டும், பிறகு தெரியும்."

"தாராளமாகச் சொல்லுவேன். எனக்கு என்ன பயம்."

"உஷ் என்னடா, நீங்கள் இருவரும் எப்போதும் சண்டை போடுகிறீர்கள்" என்றார் திலகவதி.

அவரது முகத்தைக் கூர்மையாகப் பார்த்தாள் லாவண்யா. தன் அக்கா மகனுக்கு லாவண்யாவிடம் என்ன வெறுப்பு என்பதை அவள் அறியாதவளா? "எழிலூர் இளவரசி" என்று முதல் நாள் அருண் சொன்னது நினைவு வந்தது. திடுமென நெஞ்சில் எழுந்த வேதனையுடன் முகத்தைத் திருப்பினாள். பானுவிடம் தாசானு தாசனைப் போல நின்ற கபாலி கண்ணில் பட்டான். "இவன் என்ன மனிதன்?" எனச் சினம் உண்டாயிற்று. எழுந்து உள்ளே சென்றுவிட்டாள்.

அவள் சென்ற பின் திலகவதி அருணை அழைத்துப் பேசினார். "அருண், நீ லாவண்யாவைப் பற்றி நினைப்பது எல்லாம் தவறு. அவள் மிகவும் நல்ல பெண்ணடா."

"நல்லவளா? அல்லது அப்படி வேடமிடுவதில் வல்லவளா?" என ஏளனமாகப் பேசினான் அருண்.

இல்லை என்பது போலத் தலையை அசைத்தாள் திலகவதி. "அப்படி அல்லடா, பழகிப் பார்த்தால் தெரியும்."

அருண் சற்று நேரம் எதையோ யோசித்தபடி அமர்ந்திருந்தான். 'சித்தி, லாவண்யா இங்கே தொங்கும் தோட்டம் எல்லாம் பார்த்தாளா?'' என விசாரித்தான்.

''இல்லையடா, நானும் அவளை அழைத்துச் செல்ல வேண்டும் என்றுதான் பார்க்கிறேன். எப்படி எப்படியோ தட்டிப் போகிறது'' என்றார் திலகவதி.

''நாளை மாலை நான் வந்து அவளை அழைத்துப் போகிறேன். நாலரை மணிக்கு வருகிறேன்'' என எழுந் தான், அருண்.

''அவள் உன்னுடன் வருவாளடா? நீங்கள் இரு வரும் தான் கீரியும் பாம்பும் போல நிற்கிறீர்களே.''

''அதெல்லாம் வருவாள், சித்தி. இப்போது அவளி டம் சொல்லிவிட்டுப் போகிறேன்'' என்று உள்ளே சென்றான் அருண்.

பின்புற வராந்தாவில் எங்கோ பார்த்தபடி உட்கார்ந் தாள், லாவண்யா. லேசாக மடித்த கையில் முகத்தைப் பதித்து அவள் அமர்ந்திருந்த கோலம் நெஞ்சை அள்ளி யது. ''கையில் ஒரு காமிரா இருந்தால்'' என நினைத் தான் அருண். சற்றுப் பொறுத்து, ''லாவண்யா'' என மெல்ல அழைத்தான்.

எண்ணங்களின் தொடர்பு கலையாமலேயே மெது வாகத் திரும்பினாள், லாவண்யா. கனவு மிகுந்த கருவிழி களில் பட்டு படாமலும் ஒரு நீர்த்திரை.

''என்ன லாவண்யா?''

திடுக்கிட்டவள் போல லாவண்யா நிமிர்ந்தாள்.

''என்ன?''

''அதைத்தான் நானும் கேட்டேன். எந்தக் கப்பல், முழுகிப் போயிற்று என்று...''

''கப்பல்!?''

''கப்பல் கவிழ்ந்தால் தானே கன்னத்தில் கை வைப் பார்கள்.''

''கன்னம்? ஓகோ. நான் உட்கார்ந்திருந்த தினுசைச் சொல்லுகிறீர்களா?''

''கண்டுபிடித்து விட்டாயே. அதி புத்திசாலிதான்'' என்று கேலி புரிந்தவனின் குரல் மாறியது. ''என்ன லாவண்யா, உனக்கு என்ன வருத்தம்?'' என மிருதுவாக வினவினான்.

''வருத்தமா? கன்னத்தில் கை வைத்தால் கஷ்டம் என்று அர்த்தமா? இது ஒரு நாகரிக ''போஸ்!'' என்று சிரித்தாள் லாவண்யா.

அருண் முதலில் ஒன்றும் பேசவில்லை. பிறகு ''நாளை, மாலை உனக்கு ஏதும் வேலையில்லையே'' என வினவினான்.

''இல்லை'' எனத் தலையசைத்தாள், லாவண்யா.

''அப்படியானால் நான் உன்னைத் தொங்கும் தோட் டம் பார்க்க அழைத்துப் போகிறேன்.''

''என்னால் உங்களுக்கு ஏன் வீண் சிரமம்?'' என்று தயங்கினாள் லாவண்யா.

''சிரமம் என்றால் உன்னிடம் கேட்டிருக்கவே மாட் டேன். ஒருவேளை என்னோடு தனியே வர பயமாக இருக்கிறதா?'' என்று நகைத்தான் அவன்.

''எனக்கென்ன பயம்? அய்யோ பாவம். இப்போது தானே ஊரிலிருந்து வந்தீர்கள்! என்னால் உங்கள் வேலை கெடுவானேன் என்று நினைத்தேன்.''

''அடேயப்பா! என்ன அக்கறை! ஆனால் அந்தக் கவலை உனக்கு வேண்டாம். என்னிடம் பயம் இல்லை என்றால் நாளை மாலை தயாராக இரு. சரியாக நாலரை மணிக்கு வருவேன்'' என்றான் அருண்.

மறுநாள் மாலை நெருங்கவும் லாவண்யாவின் கண்கள் தாமாக வாயிலை நாடின. திலகவதி அதைக் கவனிப்பது போலத் தோன்றவும் அவர் அருகே சென்று அமர்ந்தாள். ''ஏன், அத்தை தொங்கும் தோட்டம், என்றால் என்ன?''

''அதுவா?'' என இழுத்தார் திலகவதி. ''ஏதோ நீர்த் தேக்கத்துக்கு மேலே இருக்கும் தோட்டம்.''

''அதெப்படி அத்தை, நீர்த்தேக்கத்தின் மேல் தோட்டம் இருக்கும்? ஒருவேளை நீர் செடி வகைகளா?''

''இல்லையே. இது... இந்த இடத்தில் இருந்துதான் பம்பாய் முழுமைக்கும் குடிநீர் தருகிறதாம்.''

''அத்தை, நீங்கள் சொல்வது எனக்குத் தலையும் புரியவில்லை? காலும் புரியவில்லை,'' என்று குறை கூறினாள் லாவண்யா.

''அதுதான் அருண் வருவானே. நீ அவனிடமே கேட்டுக் கொள். இதெல்லாம் அவனுக்குத்தான் தெரியும். தெரிந்ததை எடுத்துச் சொல்லவும் தெரியும்'' என்றார் திலகவதி.

சட்டென உதட்டைக் கோணி அழகு காட்டினாள் லாவண்யா. அதைக் கவனித்துவிட்டு திலகவதி சிரிக்கவே அவள் முகம் சிவந்தது. சமாளித்துக் கொண்டு ''உங்கள் பிள்ளையின் சமர்த்தை நீங்கள்தான் மெச்ச வேண்டும், அத்தை. எனக்குத் தெரிந்த அளவில் அவர் ''இம்'' என்பதற்குள் எண்ணையில் இட்ட அப்பளம் போல நன்றாகக் குதிக்கிறார். அவ்வளவுதான்,'' என்றாள்.

''யார் அப்படிக் குதிக்கிறவர்'' என்று அருணின் குரல் கேட்கவும் லாவண்யா துள்ளி எழுந்தாள். வாயிலுக்கு முதுகு காட்டி அமர்வது எவ்வளவு பிசகு?

கையைப் பிசைந்து கொண்டு லாவண்யா தவிப்பதைப் பார்த்ததும் திலகவதிக்குச் சிரிப்பு பீறிக்கொண்டு வந்தது. பொங்கிப் பொங்கிச் சிரித்தார்.

அவரது சிரிப்பைக் கண்டு அருணின் முகமும் மலர்ந்தது.''என்ன சித்தி, ஒரேயடியாகச் சிரிக்கிறீர்கள்? எனக்கும் சொல்லிவிட்டுச் சிரியுங்களேன்'' என்றான் புன்னகையோடு.

லாவண்யாவின் முகம் வெளிறியது. ''கூடாது, அத்தை. கூடாது சொல்லக் கூடாது'' என்றாள் அவசரமாக.

அவன் லேசாகப் புருவத்தைச் சுருக்கினான், ''எதைச் சொல்லக்கூடாது? ஓ, என் கேள்வியின் பதிலா? அப்படியானால் அந்தக் குதிக்கிற அப்பளம் நான் தானா?'' என்று கேட்டு விட்டான்.

லாவண்யாவின் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே. எழுந்து உள்ளே ஓடப் போனாள். அவன் வழிமறித்தான். ''நான் எண்ணையில் விழுந்த அப்பள மாக இருக்கலாம். ஆனால் நீயும் தண்ணீரில் விழுந்த கல்லாக இருந்தாயே? சொல்லேன்.''

லாவண்யாவும் விடவில்லை. ''என்னைப் பொறுத்த வரையில் நான் வலுச் சண்டையை இழுப்பதும் இல்லை. வந்த சண்டையை விடுவதும் இல்லை.''

''பேச்சு பிரமாதம்தான், ஆனால் நிஜக் கலப்புதான் இல்லை.''

''அதெல்லாம் இல்லை.''

''என்ன இல்லை? வந்த அன்றே என்னை என்ன சொன்னாய்?''

''சின்னப் பிள்ளைகள் போல இது என்ன சண்டை?'' என்று குறுக்கிட்டார் திலகவதி. ஆனால் அதை யார் கவனித்தார்கள்.

''நீங்கள் மட்டும் என்னை ''எழிலூர் இளவரசி'' என்று சொல்லவில்லையா?'' என்றாள் லாவண்யா ரோசத்துடன்.

நிமிட நேரம் அமைதி நிலவியது. அருணும் திலக வதியும், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''நீ...ஒகோ. ஒட்டுக் கேட்டாயாக்கும்?'' என்று மடக்க முயன்றான் அருண்.

''நீங்கள் என்ன ரகசியமாகவா சொன்னீர்கள்? அடுத்த வீடுவரை கேட்டிருக்கும்'' என்று பதிலடி கொடுத் தாள் லாவண்யா.

''நான் ஏன் அப்படி...'' என்று அருண் தொடங்கு முன் ''அருண்'' என்ற கலவரத்துடன் குறுக்கிட்டார் திலகவதி. விழிகள் கெஞ்சின.

உடனே பேச்சை நிறுத்தினான் அருண். அழுந்த மூடிய உதட்டோரமாக ஒரு தசை துடித்தது. சட்டென சன்னல் பக்கம் சென்று வெளியே பார்த்தபடி நின்றான்.

லாவண்யாவின் மனம் படபடத்தது. இது என்ன? என்ன ரகசியம் இது? அருண் என்ன சொல்லப் போனான்!

## 13

கடைசியாகத் திலகவதிதான் சமாளித்தார்.

''சரி சரி. கிளம்புங்கள். அங்கேயும் போய் நாலு பேர் பார்க்க சண்டையிடாதீர்கள்'' என்று வேடிக்கை போலப் பேசிப் பார்த்தார். ஆனால் ஒருவர் முகமும் மலரவில்லை.

அருண் திரும்பிச் சிற்றன்னையைப் பார்த்தான்; ''தனியே இருப்பீர்களே சித்தி. வாருங்கள் உங்களைக் கண்ணன் வீட்டில் விட்டு விட்டுப் போகிறேன்'' என்றான் பரிவுடன்.

திலகவதி புன்னகை செய்தார். ''எனக்கு என்னடா வந்தது? இதோ, வினு வந்துவிடுவான்...'' என்றபோதே வினுவின் குரல் வாயிலில் கேட்டது!

''உனக்கு நூறு வயது நினைக்கவும் வந்து விட்டாயே'' என்றார் மகனிடம்,

''சைத்தானை நினை. உடனே வந்து நிற்கும் என்று ஓர் ஆங்கிலப் பழமொழி உண்டு'' என்று விளையாட்டா கத் தம்பியின் வயிற்றில் குத்தினான் அருண்.

''எல்லாருக்கும் அவரைத் தவிர வேறு நினைப்பே இல்லை'' என்று சிரித்தான், வினு.

''அப்படிச் சொல்லடா,'' என்று கைகொட்டினாள் லாவண்யா.

''எங்கே கிளம்பியிருக்கிறாய், அக்கா?'' என அவ ளிடம் கேட்டடான் வினு.

''தொங்கும் தோட்டம்'' எனப் பெருமையாக அறிவித்தாள் லாவண்யா.

''அங்கே நன்றாக இருக்குமே, நானும் வரட்டுமா?''

''ஓ. வாயேன். எனக்கும் நன்றாகப் பொழுது போகும்'' என அழைத்தாள் லாவண்யா.

''இல்லை வினு'' எனக் குறுக்கிட்டான் அருண். ''நீ பலமுறை பார்த்ததுதானே. இங்கே அம்மாவுக்குத் துணையாக இரு'' என்றான் தீர்மானமாக, ''வா, லாவண்யா. சித்தி நாங்கள் வருகிறோம்'' என முன்னே நடந்தான்.

எதிர்க்க வாயெடுத்தாள் லாவண்யா. ஆனால் வினு ''சரி அண்ணா'' என்று உடனடியாகப் பணியவும் ஒன் றும் சொல்ல முடியவில்லை. இருவரிடமும் விடைபெற் றுக் கொண்டு அருண் பின்னே நடந்தாள்.

காரில் ஏறியதும், ''வினு உங்களுக்குப் பணிகிறான் என்று அவனை நிரம்பவும்தான் ஆட்டிப் படைக்கிறீர் கள்'' என்று குற்றம் சாட்டினாள்.

''எப்படி?'' என்றபடி அவன் காரை எடுத்தான்.

''இப்போது அவன் வந்தால் என்ன?''

''அதுதான் காரணம் சொன்னேனே.''

''இல்லை நீங்கள் சும்மாவேனும் சொல்கிறீர்கள். அத்தைக்குத் துணைக்கு என்றால் அதற்குத்தான் பானு விரைவில் வந்து விடுவாளே.''

''வரும் வரையில்?''

''இது ஒரு கேள்வியா? முருகன் இல்லையா? அவன் வேலைக்காரப் பையன் தானே என்பீர்கள். போகட்டும். நான் இங்கே வரும் முன்னே அத்தை தனியாக இருக்கவில்லையா?''

''சொல்லாமல் நீ விடமாட்டாய். வினு நம்முடன் வருவது என் திட்டத்துக்குச் சரிப்படாது. போதுமா?'' என்று நிதானமாகச் சொன்னான் அவன்.

''திட்...திட்டமா?'' என்று திகைத்தாள் அவள்.

''அப்படித்தான் சொன்னேன்'' என்றான் அவன் ஓர் ஏளன முறுவலுடன்.

லாவண்யாவுக்கு நெஞ்சு படபடத்தது. ''என்ன திட்டம்?'' என்று மெல்லக் கேட்டாள்.

''போகப் போக நீயே தெரிந்து கொள்வாய். ஏனென்றால் நாடகத்தின் நாயகியே நீதான்'' என்று அலட்சியமாகப் பதில் சொல்லிவிட்டுக் காரை வெகு வேகமாகச் செலுத்தினான் அவன்.

அருணனின் பேச்சு லாவண்யாவின் நெஞ்சில் ஒரு பயத்தை உண்டாக்கியது; மெல்ல ஓரக்கண்ணால் அவன்

முகத்தைப் பார்த்தாள். கருங்கல்லால் செதுக்கிய சிலை கூட அவன் முகத்தைவிட மென்மையாக இருக்கும் என்று தோன்றியது. சட்டெனப் பார்வையைத் திருப்பி னாள். இவனைப் பற்றி எண்ணுவது, எதிர்பார்ப்பது எல்லாமே ஏமாற்றமாகவே முடிகிறதே என்று ஏக்கத்து டன் நினைத்தாள். ஒரு நெடிய மூச்சு நெஞ்சைப் பிளந்து கொண்டு வெளியேறியது.

''அவ்வளவு கவலை தரும் விஷயம் என்ன?'' என்று அருண் கேலியாக வினவவும் அவள் திடுக்கிட்டுப் போனாள்.

''எ...என்னையா கேட்டீர்கள்?''

''வேறே யாரும் இங்கே இல்லையே'' என்று புன்னகை புரிந்தான் அவன்.

''ஆகா ஆகா! என்ன பிரமாதமாக ''விட்'' அடித்து விட்டீர்கள்; ஆமாம். அதற்கு இவ்வளவு சிரித்தால் போதுமா? என்று உதடுகளைக் காதுவரை இழுத்து இளித்துக் காட்டினாள்.

முதலில் சற்றுத் திகைத்துவிட்டு, ''கட கட''வென நகைத்தான் அருண். ''உன் 'விட்'தான் பிரமாதம் லாவண்யா'' என்று மெச்சினான்.

''உங்கள் பாராட்டுக்கு என் மனமார்ந்த நன்றி'' என்றாள் அவள் பதிலுக்கு. ''ஏதோ வசிஷ்டர் வாயால் பிரம்ம ரிஷி'' என்றாள் சேர்த்து.

''ஏன்? ஒருவரிடம் உள்ள நல்லதைப் பாராட்ட நான் தயங்கியது கிடையாது.''

''அட, அப்படியா'' என வியந்தாள் அவள்.

''ஆமாம்'' என்றான் அழுத்தமாக. ''நீ அழகி என்பதை ஒப்புக் கொண்டேனா இல்லையா?''

''நிச்சயமாக நாகப் பாம்புபோல அழகு என்று மெய்யாகவே ஒத்துக் கொண்டீர்கள்.''

கவனியாதவன் போல. ''தைரியசாலி என்றேன்'' என்றான்.

''உங்களுக்குப் பயப்படவில்லை என்பதால்''

''நன்றாகப் பேசுகிறாய் என்றேன்.''

''உங்களை எதிர்த்துப் பேசியதால்.''

''இனிமையாகச் சிரிக்கிறாய்.''

வஜ்ரேசுவரியில் அவன் சொன்னது நினைவு வந்தது... காரணம் புரியாமல் தன் கன்னங்கள் சூடாகிச் சிவந்தது நினைவு வந்தது. இப்போதும் அதே மாதிரி கன்னம் சிவப்பதை உணர்ந்தாள். அதை அவனிடமிருந்து மறைக்க எண்ணி வெளியே பார்த்தாள். ''அட மலைப்பாதை வழியே செல்கிறோமே!'' என்று வியப்புடன் வினவினாள்.

''இது மலைப் பாதைதான். மலபார் குன்றுகள் மேல் ஏறுகிறோம்'' என்றான் அருண்.

திரும்பிக் கண்களை விரித்து அவனைப் பார்த்தாள் லாவண்யா.

''என்ன விழிக்கிறாய்? குன்றின் மேல் ஏறி அங்கிருந்து உன்னை உருட்டிவிடப் போகிறேன் என்று பயந்துவிட்டாயா?''

மின்னலைப் போல் அந்த முட்டாள்தனமான எண்ணம் அவள் மனதில் தோன்றி மறைந்தது மெய்தான்.

அவன் 'திட்டம்' என்று மர்மமாகச் சொன்னதன் விளைவு அது. ஆயினும் அவன் வாயால் அதைக் கேட்டதும் வெட்கிப் போனாள். முகம் சிவக்க, ''அதெல்லாம் இல்லை. குன்றின் மேல் ஏறுகிறீர்களே, மலை மேலா தோட்டம் அமைப்பார்கள்?''

''அமைத்திருக்கிறார்களே. நீயே பார்க்கப் போகி றாயே.''

அதற்குள் லாவண்யாவின் கவனத்தை இன் னொன்று கவர்ந்தது. ''ஒரு வினாடி உங்களால் இங்கே பார்க்க முடியுமா? கடலுக்குள் ஒரு கட்டிடம் மசூதி மாதிரி இருக்கிறது. பாதைகூடத் தெரிகிறது.''

''மசூதியேதான். கடல் பெருக்கு சமயத்தில் அந்தப் பாதையைக் கடல்நீர் மூடிவிடும். பிறகு பெருகும் நீர் வடிந்ததும் மக்கள் தொழுகைக்கு வருவார்கள்'' என்றான் அருண். கார் திரும்பிய பிறகும் உடலை வளைத்துத் திருப்பி அவள் அங்கேயே பார்க்கவும், ''உன்னை ஒரு நாள் அங்கே அழைத்துப் போகிறேன்'' என்றான்.

''கட்டாயமாக.''

''நிச்சயமாக''

காரைச் சாலை ஓரமாக நிறுத்திவிட்டு இறங்கினான் அருண். லாவண்யாவும் இறங்கியதும் கதவை மூடி விட்டு இருவரும் நடக்கலாயினர்.

''முதலில் தொங்கு தோட்டத்தைப் பார்த்து விட லாம். பிறகு கமலா நேரு பூங்கா பார்க்கலாம். சரிதானா?

''நீங்கள் சொல்லுவது போலச் செய்யலாம். உங்க ளுக்குத்தானே விஷயம் தெரியும்'' என்று ஒப்பினாள் லாவண்யா.

''இப்போதாவது ஒப்புக் கொண்டாயே'' என்றான் அவன் கேலியாக.

''இந்த இடத்தைப் பற்றிய விவரம் மட்டும் என்னை விட நன்றாக உங்களுக்குத் தெரியும் என்றேன்'' என்று விளக்கம் கூறினாள் லாவண்யா.

அருண் சிரித்துக் கொண்டே, ''ஓர் இம்மியளவுகூட விட்டுவிடக் கூடாதாக்கும்?'' என்றான்.

''அவ்விடத்திலும் அப்படித்தானே?'' என்று புன் னகை செய்தாள் லாவண்யா.

இருவரும் படியேறிச் சென்றனர். பரந்த பூங்கா. அங்கங்கே செடிகளைப் பல்வேறு உருவங்களாக வெட்டி யிருந்தனர். வண்ண வண்ண மலர்கள் எல்லாம் ஒரு சீராகச் சொல்லி வைத்தாற்போல மலர்ந்திருந்தன. லாவண்யா ஆச்சரியத்துடன் சுற்றிலும் பார்த்தாள். புரு வங்கள் மெல்ல நெரிய, ''அத்தை ஏதோ நீர்த்தேக்கம் என்றார்களே?'' என வினவினாள்.

''நீர்த்தேக்கமேதான். இந்தப் பெரிய நந்தவனத்தின் அடியில் ஒரு பெரிய நீர்த்தேக்கம் இருக்கிறது. அங்கி ருந்து தான் இந்த பம்பாய் நகர முழுமைக்கும் நீர் கிடைக்கிறது. நான் சொன்னால் நம்ப மாட்டாய். வேண் டுமானால் நீயே படித்துப் பார். உனக்கு ஆங்கிலம் தெரியுமல்லவா?'' என்று குறும்பாகக் கேட்டான்.

கண்களில் சிரிப்புடன், குறைந்தபட்சம் ''கையெழுத் துப் போடும் அளவு, தெ...ரி...யு...ம்'' என்று ராகம் போட்டுச் சொன்னாள் லாவண்யா.

''பரவாயில்லை, நானே படித்துச் சொல்லுவேன், ஆனால் நான் சொல்வதை நீ நம்ப வேண்டுமே!'' என்று சிரியாமல் சொன்னான் அருண்.

அதற்குள், அந்த அறிவிப்புப் பலகையில் எழுதியிருப்பதைப் படித்து முடித்தாள் லாவண்யா. அவன் சொன்னது சரிதான். ஆயினும் வியப்பு தீரவில்லை அவளுக்கு.

இருவருமாகச் சுற்றிப் பார்த்தார்கள். ஒருபுறம் சென்றபோது, பெரிய பெரிய பறவைகள் கண்ணில் தென்பட்டன.

''பார்சிகள் சவ அடக்கம் செய்யும் இடம் இது. வாயேன், பார்த்துவிட்டு வரலாம்'' என்று அழைத்தான் அருண்.

''வேண்டாம்.''

''இவ்வளவுதானா வீரம். அங்கே எந்த உடலையும் நீ பார்க்க முடியாது. சும்மா, வா'' என்று முன்னே நடந்தான் அருண்.

பேசாமல் அவனைப் பின் தொடர்ந்தாள் லாவண்யா.

சற்று தூரம் சரிவில் சென்றபின் கோட்டைக் கதவு போல ஒரு கதவும் பின்புறம் ஒரு கோபுரமும் தென்பட்டன. கதவு பூட்டியிருந்தது. கோபுரத்துக்கு மேலே சில கழுகுகள் பறந்தன. எங்கும் ஒரே அமைதி. அந்தச் சூழ்நிலையே கொஞ்சம் அச்சம் தர லாவண்யா அருணை நெருங்கி நின்றாள்.

''அதோ அந்தக் கதவின் வழியாகத்தான் சடலங்களைக் கொண்டு வருவார்கள். நெருங்கிய உறவினர்கூட சற்று தூரம்தான் அனுமதிக்கப்படுவார்கள். அங்கிருந்து அதற்கான பணியாட்கள் அந்தக் கோபுரத்துக்கு உடலை எடுத்துச் செல்வார்கள். அங்கே, இயந்திரக் கதவுடன் கூடிய ஒரு வலைத்தட்டு இருக்கும். அங்கே உடலை வைத்துவிடுவார்கள். இந்தக் கழுகுகள் உடலின் தசைப் பகுதியைத் தின்னும். பிறகு, மீந்துள்ள எலும்புகளின் மீது ரசாயன உப்புகளைத் தூவி விசை மூலம் இயந்திரக் கதவைத் திறப்பார்கள். அழிந்து போன எலும்புகள் கீழே பாதை வழியே சேர்ந்துவிடும். ''என்ன கேட்கவே பயமாக இருக்கிறதோ'' குரலில்—இலேசாக ஏளனம் தெரிந்தது.

லாவண்யாவின் உடலில் நடுக்கம் கூட இருந்தது. அவளுக்கு தன் பெற்றோரின் நினைவு பொங்கி எழுந்தது. கண்களை இறுக மூடிக்கொண்டு முகம் வெளுத்து நின்றாள். அருணின் கேள்வி காதில் விழுந்ததும் கண்களைத் திறந்து பார்த்தாள். ''அப்பப்பா! என்ன பயங்கரம்!''

''பயங்கரம் அல்ல, பரோபகாரம். இறந்த பிறகு கூட தங்கள் உடலைப் பறவைகளுக்கு உணவாக...''

''போதும் போதும்'' என்று காதைப் பொத்தினாள் லாவண்யா; ''போகலாம். வாருங்கள்'' என்று திரும்பி நடந்தாள்.

கூடவே நடந்தபடி அருண் கேட்டான். ''இறந்து போனபின் உணர்ச்சி இராது. அந்த உடலை கழுகுகள் கொத்துவதை பயங்கரம் என்கிறாய். உயிருள்ள மனிதர்க

ளின் இதயத்தை சிலர் சல்லடைக் கண்ணாகத் துளைத்து விடுகிறார்களே. அதற்கு என்ன சொல்கிறாய்'' என்று கடுமையான குரலில் கேட்டான், அருண்.

அதைக் கேட்டதும், லாவண்யா அர்த்தத்தோடு அவனைப் பார்த்தாள்!

## 14

**லா**வண்யா முதலில் அருணனது குரலின் கடு மையை கவனிக்கவில்லை. வெறும் வார்த்தைகளை மட்டும் மனதில் எடுத்துக் கொண்டாள் பானு மணிவண் ணனை கொத்தி எடுப்பதை நினைத்தாள். ''ஆமாம்'' என்று முழு மனதுடன் அவனை ஆமோதித்தாள்.

அவன் சினமுற்று, ''நான் பானுவைச் சொன்னேன்'' என்றான்.

''நானும் அவளைத்தான் நினைத்தேன்'' என்றாள் லாவண்யா சிறு வியப்புடன்.

''விளையாடுகிறாயா? பானுவை ஏன் இப்படி வேத னைப்படுத்துகிறாய் என்று கேட்கிறேன்'' என்றான் கடு மையாக.

''நானா அவளை வேதனைப்படுத்துகிறேன்?'' எனும்போதே அன்று பானு அழுதுகொண்டு ஓடியது நினைவு வந்தது. ஆத்திரத்துடன் ''பானு ஒரு முட்டாள். மடத்தனமாக ஏதேதோ எண்ணித் தானும் வேதனைப் பட்டு மற்றவர்களையும் வருத்துகிறாள்,'' என்றாள்.

''ஆமாம், பின்னே எல்லோரும் உன்னை மாதிரி புத்திசாலியாக இருக்க முடியுமா?'' என்றான் அருண் குத்தலாக.

சட்டென நின்றாள் லாவண்யா திரும்பி அவனை நன்றாகப் பார்த்தாள். ''இப்போது எதற்காக என்னை குத்துகிறீர்கள்?'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

அருணும் கோபத்துடன் வாயைத் திறந்தவன் சட்டென முகம் மாறினான். ''லாவண்யா அதோ பார்'' என்றான் தனியாக.

அருண் காட்டிய பக்கம் பார்த்தாள் லாவண்யா. முகம் செவ்வானமாகச் சிவந்தது. அங்கே ஓர் இளைஞன் தோளில் 'மினி டிரஸ்'சுடன் ஓர் இளமங்கை சாய்ந்திருந்தாள், அவன் கரம் அவளது இடையில் இறுகப் பிணைந்திருந்தது.

சிவந்த முகத்தைத் திருப்பி, ''நாம் சீக்கிரம் போகலாம்'' என்றாள் வெட்கத்துடன்.

ஆனால் அவன் பார்வை அன்றுவரை காணாதவிதமாகப் புதுமையாக அவள்மீது படிந்தது. அந்தப் பார்வையில் லாவண்யாவின் சிவந்த கண்கள் குங்கும நிறமே கொண்டுவிட்டன.

அதற்குள் எதிரில் வந்த ஜோடி அவர்களை நெருங்கி வந்தது. அந்த இளைஞன் அருணுக்குப் பழக்கமானவன் போலும். அருணைப் பார்த்ததும், ''அலோ அருண்'' என்று அழைத்தான். கூடவே லாவண்யாவின் சிவந்த முகத்தையும் பார்த்துவிட்டு மீண்டும் அருணிடம் திரும்பி சிரித்தான். ''நல்ல தேர்வு. என் வாழ்த்துக்கள்'' என்று குறும்பாகக் கண் சிமிட்டினான்.

அருண் நகை முகத்துடன் அவன் முதுகில் ஒன்று வைத்தான். ''நீ உன் வேலையைக் கவனி பிரதர். எப்போது திருமண விருந்து?'' என்று கேட்டான்.

அவன் பார்வை தன் அணைப்பில் இருந்த மங்கை யிடம் பாய்ந்தது. ''இவள்தான் சொல்ல வேண்டும். என்னைப் பொருத்தவரையில் இந்த நிமிடம் என்றாலும் நான் ரெடி. ஏன் சியாமி?''

அந்த சியாமி வெள்ளிமணி ஓசையாய் கலகல வென்று சிரித்தாள். ''என் படிப்பு முடியட்டும். இன்ன மும் ஒரே ஒரு மாதம்தானே மது.''

''ம்ம்...ஒரு மா..தம்'' என்று கண்களை உருட்டி னான் மது.

சியாமி கலகலவென்று சிரித்தாள். ''இந்த ஆண் களே அவசரக்காரர்கள். இல்லையா? ''மிஸ்...'' என்று லாவண்யாவைப் பார்த்தாள்.

''லாவண்யா'' என்றான் அருண்.

''ஏய்'' என்று அருணைக் குத்தினான் மது. ''என் னைக் கேட்டாயே. நீ எப்போது தருகிறாய்?...''

''நான்...இங்கும் உன் கதைதான். ஆல்ரைட். இப் போது நாங்கள் கிளம்புகிறோம். உங்கள் தனிமையில் எங்கள் குறுக்கீடு ஏன்?'' என்று கிளம்பினான் அருண்.

''பக்கத்து இலைக்குப் பாயசம் போடச் சொல்கி றாயா?'' என்று ஓர் அசட்டுச் சிரிப்புடன் நடந்தான் மது.

அருண் கேட்டான், ''என்ன புலி பாய வில்லையா?''

''என்ன!'' என்றாள் லாவண்யா திகைப்புடன்.

''ஏன் அவளிடம் அப்படிச் சொன்னீர்கள்? உங்களுக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்?'' என்று லாவண்யா பேசும் பாவனையில் அவன் அடுக்கவும் அவள் சிரித்து விட்டாள். பிறகு ''சும்மா என்னைச் சீண்டுவதற்காகச் சொன்னீர்கள் என்று எனக்குத் தெரியாதா?'' என்றவள் சட்டென முகம் மாற, ''நேரமாகிறதே போகலாமா?'' என்றாள்.

''நிமிடத்துக்குள் எத்தனை நிறம் மாறுகிறாள்'' என அருண் நினைத்தான், ''போவதா? கமலா நேரு பூங்கா பார்க்கவில்லையே'' என அங்கே அழைத்துச் சென்றான்.

தயக்கத்துடன் அவனோடு சென்றாள் லாவண்யா. வெளியே காட்டாத போதிலும் மனதில் குழப்பம் இருந்தது. மது—சியாமி ஜோடியைப் பார்த்ததிலிருந்து அவளை ஏதோ ஒன்று என்னவோ செய்தது.

அருண் காட்டிய ஷூ வடிவ வீடு. புல் தரைக் கடிகாரம் எல்லாம் அரைகுறை கவனத்துடன்தான் பார்த்தாள். கடைசியாக ஓர் ஒதுக்குப்புறமாகக் கைக் குட்டையை விரித்து 'இங்கே உட்காரலாம்' என்று அவன் அமரவும் திகைத்தாள்.

''என்ன விழிக்கிறாய்? ஓகோ, மது கூறியதையே நினைத்துக் கொண்டு இருக்கிறாயாக்கும்?'' என்றான் அவன் கேலியாக.

''இல்லை'' என்றாள் லாவண்யா. அமைதியைக் காட்டி நேரமாகி விடவில்லையா? இருட்டத் தொடங்குகிறதே.''

''இருட்டினால் உன்னைப் பூச்சாண்டி பிடித்துக் கொள்ளுமா? உட்கார் போகலாம்'' அவன் முடித்து விட்டான்.

அரை மனதாக உட்கார்ந்தாள் லாவண்யா. அவள் மனதின் ஒரு பகுதி, ''உட்காரேன்; அவனிடம் பேசி அவன் உன் மீது கொண்டிருக்கும் தப்பான அபிப்ரா யத்தை மாற்றேன்'' என்றது. மறுபகுதியோ, ''வேண் டாம், இவனை நெருங்கினாலே உன் அமைதி கலை கிறது. என்ன வேடிக்கை பேசினாலும் கடைசியாக வேதனைதான் மிஞ்சுகிறது. வீணே இதை எல்லாம் அனுபவிக்காமல் பிடிவாதமாகக் கிளம்பி விடேன்'' என்றது. ஆனால் அவன் சட்டென்று அமர்ந்து விடவும் வேறு வழியின்றி அவளும் அமர வேண்டியதாகிவிட் டது.

''எல்லா ஆண்களிடமும் அவரவர் விருப்பத்துக்கு சாமர்த்தியமாகச் சிரித்துப் பேசிக் கவர்கிறாயே. என்னி டம் என்ன தயக்கம் லாவண்யா?'' என்று ஒரு மாதிரிப் புன்னகையோடு வினவினான் அருண்.

அவளுக்கு நெஞ்சில் சுருக்கென வலித்தது. ''நான் எல்லாரிடமும் ஒரே மாதிரிதான் பழகுகிறேன்'' என்றாள் நிதானமாகவே.

''பொய். மணிவண்ணனிடம் பேசுகிற மாதிரியா என்னிடம் பேசுகிறாய்?''

''மணி உங்களை மாதிரியா ஏட்டிக்குப் போட்டி என்று மட்டம் தட்டுகிறார்? நீ பிறருக்கு என்ன கொடுக்க நினைக்கிறாயோ அதுதான் மற்றவரிடமிருந்து உனக்குக் கிடைக்கும் என்று பைபிளில் வருகிறது'' என்றாள்.

''சகலகலாவல்லி'' என்று கிண்டல் செய்தான், அவன்.

லாவண்யா பேசாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். இவன் பேச்செல்லாம் நெஞ்சைக் குத்துகிறதே. பானுவைப்போல 'முட்டாள் உளறுகிறான்' என்றோ கபாலியைப் போலக் 'கழுதை கிடக்கிறது' என்றோ விட முடியவில்லையே என்று வருந்தினாள்.

திடீரென்று காதருகில் வந்து ''லாவண்யா'' என்று அருண் ரகசியம்போல அழைக்கவும் திடுக்கிட்டுப் போனாள். திகைப்புடன் எழ முயன்றாள்.

அவள் கையைப் பற்றி எழ முடியாதபடி தடுத்து ''ஏன்?'' என்றான் சற்று அழுத்தமாக.

''வீட்டுக்குப் போக வேண்டும். கையை விடுங்கள்'' என்று பிறர் கவனத்தைக் கவராத அளவில் தன் கையை விடுவித்துக் கொள்ள முயன்றாள் லாவண்யா.

''என்ன அவசரம்?'' என்று அவன் அதட்டினான்.

லாவண்யா பதில் பேசாமல் அவன் கையை விலக்க முயன்றாள். அவன் என்ன நினைத்தானோ, சட்டென அவள் கையை விட்டுவிட்டு எழுந்தான். ''சரி. வா.''

பூங்காவின் வாயிலை நோக்கி நடந்தாள் லாவண்யா. ஆனால் அவன் அவளை நிறுத்தினான். பொறு, இன்னமும் ஒன்றே ஒன்று பார்க்க வேண்டும்.''

''வே...வேண்டாம்.''

அவள் மறுப்பைக் காதில் போட்டுக் கொள்ளாமல் அவளைக் கைப்பிடித்து இழுத்துக்கொண்டு போனான் அவன். ஓர் இடத்தில் நிறுத்தி ''எதிரே பார்'' என்றான்.

நிமிர்ந்து பார்த்தாள் லாவண்யா. வியப்பினால் விழிகளை விரித்தாள்.

அவன் விளக்கினான்.''அதுதான் ராணியின் கழுத் தாரம் என்பார்கள். இந்தக் கடற்கரைச் சாலை நல்ல அரைவட்ட வடிவம். அதில் சீராக இருபுறமும் அமைந்த மின் விளக்குகள் இந்த இருளில் ஒரு வைர மாலை போல் ஒளிர்கின்றன. இதை இந்த இருட்டில்தான் நன்கு ரசிக்க முடியும்'' என்று நிறுத்தி விட்டான் அருண்.

லாவண்யாவுக்கு வெட்கமாகிவிட்டது. ''வந்து... என்னை மன்னித்து விடுங்கள்'' என்றாள்.

''பரவாயில்லை. இப்போது வீட்டுக்குப் போக லாம்.''

திரும்பிச் செல்லும்போது லாவண்யாவுக்கு ஒரு சந்தேகம் வந்தது. ''இப்போது எங்கே போகிறோம்?''

''கண்டுபிடியேன்.''

லாவண்யாவுக்கு புரியவில்லை. வந்த வழியில்லை என்பது தெரிந்தது. ஆனால் மேலும் அவன் மேல் சந்தேகப்பட்டு அசட்டுப் பட்டம் கட்டிக்கொள்ள அவள் தயாரில்லை.

வெகுதூரம் சென்றபின் கார் ஒரு வீட்டின் முன்னே நின்றது. இறங்கிப் பார்த்ததும் லாவண்யா திகைத்தாள். ''வீட்டிற்குப் போகிறோம் என்றீர்களே.''

''வீடுதான், என் வீடு. அதையும் பார்த்து விட்டுப் போகலாம்.''

உதட்டைக் கடித்துக்கொண்டு அசையாமல் நின்றாள் லாவண்யா.

''என்ன? புலி சிங்கம் கடித்துத் தின்றுவிடும் என்று பயமாக இருக்கிறதா?''

இவன் என்ன செய்து விடுவான்? லாவண்யா நிமிர்ந்தாள். ''வாருங்கள்'' என்று நடந்தாள்.

''இது தைரியசாலிக்கு அழகு'' என்று முன்னே சென்று ''லிஃப்டி''ல் ஏறிக் கதவை மூடினான் அருண். மூன்றாவது மாடிக்குரிய பொத்தானை அழுத்தினான். அங்கே அவனது பகுதிக்குச் சென்றதும் ''லிஃப்டி''லிருந்து வெளியேறி வீட்டினுள் சென்றதும் கதவைச் சாத்தினான் அவன். கோட்டைக் கழற்றி தாங்கியில் தொங்கவிட்டான். நிதானமாக ஓர் அலமாரியைத் திறந்தான். அதிலிருந்து ஒரு பாட்டிலை எடுத்தான்.

அந்தப் பாட்டிலில் விஸ்கி என்று எழுதியிருந்தது. அதைக் கண்டதும் லாவண்யா திடுக்கிட்டாள்.

ஆனால் அவனோ அதே நிதானத்துடன் பாட்டிலைத் திறந்தான். ஒரு மதுக் கிண்ணத்தில் விஸ்கியை ஊற்றி வந்து அவள் எதிரே வைத்தான்.

''இது உனக்குப் பிடித்தம் அல்லவா? எடுத்துக் குடி லாவண்யா'' என்று ஏளனமாகக் கூறியவாறு எதிரே வந்து நிமிர்ந்தான்.

அவள் பிரமித்துப் போனாள்.

# 15

அருண் 'குடி' என்றதும் லாவண்யா வெகுண்டாள். ''என்ன உளறுகிறீர்கள்!''

''உளறுகிறேனா?'' அவன் அளவுக்கு அதிகமாக புருவங்களைத் தூக்கி, கண்களை விரித்து, தோளை உயர்த்தி வியப்புக் காட்டினான்.

''பின் என்னவாம்? என்னைப் போய் இதை... சே.'' வெறுப்பாக முகம் சுளித்தாள் லாவண்யா.

அருணின் விழிகள் பளபளத்தன. ''என்னடா இது? சரியாகத்தானே கேட்டேன். அல்லது என் காதுகளில் ஏதும் கோளாறா?'' உதடுகளில் ஏளனமான வளைவுடன் அவன் பேசிக்கொண்டே போனான். அவனையே பார்த்துக் கொண்டு அயர்ந்து நின்ற லாவண்யாவுக்கு வயிற்றில் ஏதோ பிசைந்தது. இவன் என்ன பேசுகிறான்? ஏதோ திட்டம் என்றானே, அதன் தொடக்கமா?

லாவண்யாவின் கலக்கத்தை அவன் பொருட்படுத்தவே இல்லை—தன் பாட்டில் தொடர்ந்து பேசிக் கொண்டே போனான். ''கபாலிக்குப் பிடித்ததெல்லாம் உனக்குப் பிடிக்கும். நான் சொல்லுவது சரிதானே'' என மிகுந்த அக்கறையுடன் விசாரித்தான்.

லாவண்யாவின் கலக்கம் மெல்ல மறைந்தது. அவள் சந்தேகித்தது போலவே அவன் நேற்று ஒட்டுக் கேட்டிருக்கிறான். அதைக் கிண்டல் செய்வதற்காக இப்படிப் பேசுகிறான்.

''அதற்கும் இதற்கும் என்ன தொடர்பு?'' என்று மதுக் கிண்ணத்தைச் சுட்டிக் கேட்டாள்.

''என்ன தொடர்பா? இதென்ன இப்படிக் கேட்டு விட்டாய்? மற்ற எல்லாவற்றையும் விடக் கபாலிக்குப் பிடித்தமானது இதுதானே. எனவே உனக்குப் பிடித்துத் தானே இருந்தாக வேண்டும்? உம், எடுத்துக் குடி லாவண்யா நான் வேண்டுமானால் ஊட்டிவிடட்டுமா?'' என்று எழுந்தான் அருண்.

இந்த அசட்டுத்தனம் எல்லை மீறுகிறதே. லாவண்யா சட்டென எழுந்தாள். ''போதும் மிஸ்டர் அருண். நான் வீட்டுக்குப் போக வேண்டும்'' என்று வாசற் கதவை நோக்கி நடந்தாள்.

ஒரே எட்டில் முன்னே வந்து அவள் வழியை மறைத்தான் அருண். ''அது அவ்வளவு சுலபமல்ல பெண்ணே. என் முன்னிலையில் இதைச் சுவைக்காமல் நீ இங்கிருந்து செல்லப் போவது இல்லை.''

''ச்சு.'' அவன் பேச்சை அலட்சியம் செய்து அவ னைச் சுற்றிக் கொண்டு செல்ல முயன்றாள் லாவண்யா. அவன் சட்டென கையைப் பற்றிச் சுண்டி இழுத்தான். அந்த வேகத்தில் சோபாவில் வந்து விழுந்தாள் லாவண்யா, சமாளித்துக் கொண்டு எழுந்து, ''அருண்...'' என்றாள் திகைப்புடன்.

''ஆமாம் லாவண்யா, அருண்தான். வா. எடுத்துக் குடி சீக்கிரம்.''

''இதெல்லாம் என்ன அருண்? எனக்கு ஒன்றும் புரியவில்லை.''

''புரியவில்லை? சபாலிக்குப் பிடித்ததெல்லாம் உனக்கும் பிடிக்கும் என்றாயே. இதுவும் பிடிக்கிறதா என்று பார்க்கச் சொல்லுகிறேன்.''

''இது எனக்குப் பிடிக்காது.''

''பிடிக்காது என்றால் அவனிடமிருந்து விலகி நில்'' என்றான் அவன் அதிகாரமாக.

''ஏனோ? அதில் உங்களுக்கு என்ன அக்கறை?''

''அக்கறைதான். என் தங்கைக்காக.''

''அதாவது ஒரு குடிகாரனிடம் தங்கையை ஒப்பு விக்கும் அக்கறை. அப்படியா? உண்மையில் தங்கை யிடம் அக்கறை இருந்தால் அவளை அல்லவா அவனிட மிருந்து விலக்க வேண்டும்'' என்றாள் லாவண்யா ஏளனமாக.

''தேவை ஏற்படும்போது உன்னிடமிருந்து பாடம் கற்றுக் கொள்கிறேன். ஆனால் இப்போது பிரச்சினை அது அல்ல.''

''ஆமாம் ஆமாம். ஒரு குடிகாரனிடம் எப்படியா வது தங்கையைத் தள்ளுவதுதான் பிரச்சினை'' என்று குத்தி பேசினாள் லாவண்யா.

''என் தங்கையை மணந்தால் பிறகு அவனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எங்களுக்குத் தெரியும். ஆனால் என் தங்கையின் மனம் உடைந்தால் அதைச் சீர்பண்ணும் திறம் யாருக்கும் இல்லை.''

லாவண்யா சற்று சிந்தித்தாள். 'மனம் உடைந்தால்' என்கிறானே. கபாலியிடம் தன் மனத்தைப் பறிகொடுத்து

விட்டதாக பானு கூறுகிறாளா? இருக்குமா? பின்னே மணிவண்ணன் கதி என்ன? ஆனால் பானு மெய்யா கவே கபாலியைக் காதலிக்க முடியுமா? ஊகும். முடி யவே முடியாது ஓர் இளம் பெண்ணின் மென்மையான காதலுக்குக் கபாலி ஏற்றவனே அல்ல.

''பானுவுக்குப் புத்தி சொல்லி அவளை கபாலியிட மிருந்து பிரிப்பதுதான் சரி'' என்றாள் உரக்க.

''உனக்கு அந்த மைனரைப் பிடிக்க வசதியாக இருக்கும் என்பதாலா?''

ஆத்திரம் மிக அவனைப் பார்த்தாள் லாவண்யா. ''என் விஷயத்தைப் பற்றி உங்களுக்கு என்ன?''

''பாழும் கிணற்றுக்குள் விழப் பார்க்கிறாயே, காப் பாற்றலாமே என்ற பரோபகாரம்தான்'' என்றான் அவன் அலட்சியமாக.

''நான் விழுந்தால் பாழுங்கிணறு. உங்கள் பானு விழுந்தால் பஞ்சு மெத்தையா?'' என்று மடக்கினாள் லாவண்யா.

அருணுக்கு ஆத்திரம் மிஞ்சியது. ''என் தங்கை யைப் பற்றிப் பேச நீ யார்?'' என்றான் சினத்துடன்.

''அதுபோல என்னைப் பற்றிப் பேச நீங்கள் யார்?''

''நான்...'' அருண் தன்னை மறந்து அவள் அருகே வந்து அவள் கைகளைப் பற்றினான்.

லாவண்யாவுக்கும் ஆத்திரம் பொங்கியது. ''இது தான் உங்கள் திட்டமோ?'' என்று அவன் கைகளை உதறிவிட்டு ஓடினாள். வாயிற்பக்கம் வழியை அவன்

மறைக்கவே மறுபுறமாக விரைந்தாள். அருணின் ஆத்தி ரச் சிரிப்பு அவளைத் தொடர்ந்தது.

இரு கதவுகளைத் தாண்டி கடைசிக் கதவைத் திறந்த தும் லாவண்யா திகைத்தாள் இது...இது பம்பாய். சென் னையில் போல வேலூரில் போல முன்னும் பின்னும் வெளியேறும் வசதி உள்ள வீடு இது இல்லை. இது பால்கனி. இங்கிருந்து குதித்தால் எலும்பேனும் மிஞ் சுமா? அருண் சிரித்தான். பொருள் புரிந்தது.

''இனி எங்கே போவாய்? என்று அருகில் அவன் குரல் கேட்கவும் திடுக்கிட்டாள். அவன் நெருங்கிக் கொண்டு இருந்தான்.

சட்டென வெளியே பால்கனியில் சென்று நின்று கொண்டாள் லாவண்யா. திரும்பி அவனை வெட்டுவது போலப் பார்த்தாள்.

''அதிக கர்வம் வேண்டாம் லாவண்யா. என் கையெட்டும் தூரத்தில்தான் இருக்கிறாய்'' என்றான் அருண்.

''இருக்கட்டுமே; இங்கே என்னை நெருங்கி வருவீர் களோ? தூரம்தான் என்றாலும் அதோ எதிர் வீட்டு பால்கனியிலும் ஆட்கள் இருக்கிறார்கள். இங்கே ஏதே னும் நடந்தால் அவர்களுக்குத் தெரியாமல் போகாது. நாளை அவர்கள் முகத்தில் நீங்கள் விழிக்க வேண்டுமே'' என்றாள் ல்ாவண்யா ஏளனமாக.

''ஆ...மாம். நீ சொல்வதும் சரிதான். எங்கே எதிர் பால்கனியில் யார்...'' எனக் கேட்டு முன்னே வந்து எட்டிப் பார்த்தான்.

லாவண்யா வெற்றிப் புன்னகை புரிந்து .கொண்டிருந்தபோதே அருண் வேகமாகத் திரும்பினான். எதிர் பால்கனிக்கு முதுகைக் காட்டி லாவண்யாவைத் தன் உருவத்தால் மறைத்தான். வினாடிக்குள் ஒரு கையால் அவள் வாயைப் பொத்தினான். மறுகரத்தால் அவளை வெகு இலகுவாக உள்ளே கொண்டு சென்றான். கதவை உட்புறமாகத் தாளிட்ட பிறகுதான் அவள் வாயைப் பொத்திய கையை எடுத்தான். பிறகு "எப்படி என் வேலை" என்று கர்வத்துடன் சிரித்தான்.

"கெட்டிக்காரர்தான்" என்று சீறினாள் லாவண்யா. வினாடிக்குள் இப்படி ஏமாந்து போனோமே என்ற ஆங்காரம் அவளுக்கு. பொங்கிய சினத்துடன் கையை வேகமாக ஓங்கி வீசினாள். ஆனால், ஓங்கிய கை இறங்குமுன் அவன் கை அதைத் தடுத்தது. "என்னிடமா உன் ஜாலம் எல்லாம்?" என்றபடி அவள் கைகளைப் பற்றிக் கர கரவென்று உள்ளே இழுத்து வந்தான்.

முரட்டுத்தனமாக அவன் இழுத்து வரும்போது சேலையில் கால் தட்டியதால் தடுமாறி விழப் போனாள் லாவண்யா. சட்டென அவளை ஒரு கையால் ஏந்தி அணைத்துத் தாங்கினான் அருண். அணைத்த கரத்தை விலக்கும் எண்ணம் அவனுக்கு வரவில்லை. அந்த அணைப்பில் இருந்து விலகும் எண்ணம் அவளுக்கும் வரவில்லை. மலைப்புடன் நிமிர்ந்த லாவண்யாவைச் சுற்றி அவனது மறுகரமும் விழுந்தது. மெல்ல மெல்ல அவன் அணைப்பு இறுகியது. மந்திரத்தில் கட்டுண்டவள் போல லாவண்யா அவன் கரங்களில் நெகிழ்ந்து போனாள்.

''என்ன இது? இது சரியில்லை. பெருந்தவறு. அவன் என்ன நினைப்பான்? சும்மாவே அவளைப் பற்றி அவனுக்கு நல்ல எண்ணமில்லை. இனி என்ன நினைப் பான்? கேவலம்...'' என்று ஏதேதோ எண்ணங்கள் ஜெட் வேகத்தில் அவள் உள்ளத்தில் பறந்தபோதும் லாவண்யா வின் உடலில் ஓர் அணுக்கூட அவனை எதிர்க்கவில்லை. அவனது அணைப்பு இறுக இறுக அதில் மெய்மறந்து நின்றாள்.

மேலும் மேலும் பொங்கி வரும் பெரு வெள்ளம் அவளை மூழ்கடிப்பது போல உணர்ந்தாள். மூச்சுத் திணறியது.

அந்த வேளையில் அமுதம்போல அழைப்பு மணி ஒலித்தது.

அழைப்பு மணி விட்டுவிட்டு மேலும் மேலும் ஒலித்தது.

அருண் லாவண்யாவை விலக்கித் தள்ளி விட்டுக் கதவை நாடிச் சென்றான்.

தளத்தில் வேர் ஊன்றியவள்போல் அசையாமல் நின்றாள் லாவண்யா.

''எந்தா சாரே, இப்பார்சலை சாயரட்சை போஸ்டு மேன் தந்து...'' என்று மலையாளமும் தமிழுமாக யாரோ கூறினார்கள்.

''ஓகோ, மிகவும் நன்றி நாயர்'' என்று அவரை அனுப்பிவிட்டுப் பார்சலுடன் திரும்பினான் அருண். சற்று நேரம் அசையாமல் நின்றான். பின்னர், கையிலி ருந்த பார்சலை சோபாவில் வீசினான். லாவண்யாவின்

பக்கம் மறந்தும் திரும்பவில்லை. ''கிளம்பு போகலாம்'' என்று ஓர் அதட்டல் அவன் குரலில் பிறந்தது.

லாவண்யா கனவில் நடப்பவள் போல் அவன் பின்னே நடந்தாள். வடாலா வீட்டுக்கு அவளைக் கொண் டுவந்து சேர்த்த பிறகும்கூட அவன் அவ்ளை நிமிர்ந்து கூடப் பார்ப்பது இல்லை. அவ்வளவு தூரம் ஒதுங்கிப் போனான்.

லாவண்யா தன்னையே வெகுவாக வெறுத்துக் கொண்டாள். அந்த நாளிலிருந்து அவளை மட்டம் தட்டியவன்; ஏளனமாக இகழ்ந்தவன்; மற்ற ஆண்களை மயக்குகிறவள் என்று வெளிப்படையாகக் கூடச் சொன் னவன். அந்த மனிதனின் அணைப்பில் அவள் மயங்கிப் போனாளே. அவன் என்ன நினைத்திருப்பான்? ஆண் பிள்ளை என்று ஒருவன் கிடைத்தால் போதும். இவள் அட்டையாக ஒட்டிக் கொள்ளுவாள் என்று நினைத்திருப் பானே. என்ன அவமானம்? சே...சே...சே... லாவண்யா வுக்கு நெஞ்சைக் குமட்டிக் கொண்டு வந்தது.

கூடவே இன்னொன்றும் தோன்றியது.

## 16

அன்று இரவெல்லாம் லாவண்யா சிந்தித்துப் பார்த் தாள். அன்று பூங்காவில் கபாலி அவளது கையைத் தொட்டபொழுது புழுவைத் தொட்டதுபோல எவ்வளவு அருவருப்பாக இருந்தது! இப்போது அருண் தொடும் போது மட்டும் என்ன மாயம் நிகழ்ந்தது. ஒருவேளை இதுதான் காதலோ? வேகமாக எழுந்து உட்கார்ந்தாள்

லாவண்யா. அப்படித்தானோ? அவள் இப்படி உற்சாகத் துடன் எண்ணும்போதே மலர் முகம் மீண்டும் கும்மிப் போயிற்று.

முட்டாளே, முட்டாளே! இது ஒருதலைக் காதல் அல்லவா? உன்னைப் பற்றிய அவனது எண்ணம் நீ அறியாததா? எண்ணும்போதே மனதின் ஒரு பகுதி தீண்டியது!

ஊகூம். காதலில் அணைத்தவன் என்றால் அந்த மலையாளி சென்றபின், அவனை யார் தடுத்தார்கள்! சாக்கு மூட்டை போலக் கொண்டு வந்து தள்ளிவிட்டுப் போனானே. நினைக்க நினைக்க லாவண்யாவுக்கு அழுகை வந்தது.

கண்ணீருடன் எழுந்து சென்று தாய் தந்தையின் படத்தை எடுத்தாள். "இப்போது எனக்கு வழி காட்ட நீங்கள் இல்லையே, அம்மா" என்று அழுதாள். இப்படி எல்லாம் நேரக்கூடும் என்றுதான் 'ஆண்பிள்ளையைக் கண்டால் ஒதுங்கு ஒதுங்கு என்றார்களோ?'

லாவண்யா மெய்யாகவே ஒதுங்கத் தொடங்கி னாள். அது எளிதாகவும் இருந்தது. மணிவண்ணன் வருவதே இல்லை. அருண் எப்போதாவது வருவ துண்டு. முள்ளின் மேல் நிற்பவன் போலத் தவித்துவிட்டு உடனே ஓடிப் போவான்.

கபாலி வருவது மட்டும் நிற்கவில்லை. ஆனால் அவன் வந்தால் லாவண்யா, திலகவதியின் பின்னே மறைந்து விடுவாள். அங்கிருந்து அவளை இழுத்துப் பேச அவனும் முயற்சி செய்யவில்லை. அவன் பானு விடம் அலங்கார வார்த்தைகளை அள்ளி வீசிக் கொண்டு இருந்தான். ஆகவே எல்லாம் எளிதாகிப் போயிற்று.

ஆனாலும் அருண் வந்துவிட்டுப் போனால் இரண்டு நாள் லாவண்யாவுக்கு ஒரே வேதனையாக இருக்கும். திலகவதி கூடக் கேட்டு விடுவார். ''என் னம்மா ஒரு மாதிரி இருக்கிறாயே'' என்று ''அதுவா... அம்மா அப்பாவின் நினைவு வந்தது,'' என்று சமாளிப் பாள் லாவண்யா.

லாவண்யா ஒதுங்க, மணிவண்ணன் ஒதுங்க, அரு ணின் வரவு குறைய எல்லாமாகச் சேர்ந்து பானு—கபாலியின் உறவு நெருக்கமாயிற்று. சில சமயம் திலக வதி ஏதாவது சொல்லுவார். ''கடைசியில் கபாலிதான் மருமகன் ஆகி விடுவான் போலத் தோன்றுகிறதே'' என்று வருந்துவது போலப் பேசுவார்.

திலகவதிக்காக லாவண்யாவின் மனம் இரங்கினா லும் அவள் அலட்டிக் கொள்ளத் தயாராக இல்லை. இந்தப் பொறாமை பிடித்த பெண்ணை மணப்பதைக் காட்டிலும் மணிவண்ணன் சிறிது கஷ்டப்பட்டாலும் அவளை மறப்பதே நல்லது என்று நினைத்தாள். அதோடு பானுவின் வாழ்க்கையைத்தான் அவளுடைய அண் ணன்—பாதுகாத்துக் கொள்வானே போகட்டும். யாரும் எப்படியும் ஒழியட்டும் என்று சலிப்புடன் எண்ணி வாளா இருந்தாள் லாவண்யா.

இந்த மாதிரிச் சமயத்தில்தான் ஒருநாள் வெகு கோபமாகச் சிவநாதர் உள்ளே வந்தார்.

''மனிதர்களுக்குக் கொஞ்சமாவது மூளை இருக்க வேண்டும்'' என்றார் சினத்துடன்.

காபி பலகாரத்தை அவர் முன்னே வைத்துவிட்டுப் பதுமையாக நின்றார் திலகவதி.

''இதையெல்லாம் எடுத்துப் போய்க் குப்பையில் கொட்டு.''

''என்ன நடந்தது? என்னிடம் சொல்லக் கூடாதா?'' என்று மெதுவாக வினவினார் திலகவதி.

''சொல்லக் கூடாமல் என்ன? அதுவும் உன்னிடம் சொல்லாமல் யாரிடம் சொல்வது? திலகம், ஒருவன் கெட்டிக்காரன் என்று கண்டிபிடிக்கிறோம். அடிமட்டத்தி லிருந்து தனிக் கவனத்துடன் விசேடப் பயிற்சி கொடுத்து முன்னே கொண்டு வருகிறோம். பெரிய பெரிய எதிர்கா லம் எல்லாம் இருக்கிறது என்று மகிழ்கிறோம். அந்த வேளையில் 'அடியைப் பிடிடா பவீதப்பட்டா' என்று எல்லாம் தொலைந்து எங்கோ போகிறேன் என்கிற மடையனைப் பற்றி என்ன சொல்வது?''

''யார் அப்படிச் செய்தார்கள்?''

''வேறு யார்? உன் சுவீகார புத்திரன் மணிவண்ணன் தான்'' என்று குண்டு வீசினார் சிவநாதர்.

''மணியா?'' என்று அதிர்ந்து போனார் திலகவதி. லாவண்யாவும் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

''ஆமாம். மணிவண்ணனேதான், தொழிலை நன்றா கப் படித்துக் கொண்டான். இனி அவனுக்கும் ஓரளவு பங்கு கொடுக்கலாம்; பிறகு பாதிப் பங்குக்கே உரிமை யாளனாக்கலாம் என்று எண்ண்யிருந்தேன். இப்போது ஒன்றும் வேண்டாமாம். சொந்த ஊருக்கு ஒடப் போகிறா னாம்.''

''மணி அப்படிப்பட்ட பையன் இல்லையே,'' என்று கையைப் பிசைந்து கொண்டு பரிதவித்தார் திலகவதி.

''அப்படித்தான் என்று அவனே நிரூபித்து விட்டானே.''

''எப்படி மாமா? எப்படி நிரூபித்தார்'' என்று இடையே புகுந்தாள் லாவண்யா.

''ராஜினாமா செய்யப் போவதாகக் கடிதம் எழுதித் தந்துவிட்டான் அம்மா. அதிலும் நேர்மையைக் காட்டுகிறானாம். ஒருமாத நோட்டீசுக்கு பதிலாக ஒருமாதச் சம்பளத்தைக்கூட விட்டுத் தந்து விடுகிறானாம்'' சிவநாதர் கசந்து போய்ப் பேசினார்.

லாவண்யா விக்கித்துப் போனாள். பானு போனால் இன்னொரு சாரு என்று நினைத்தது தவறாகிப் போயிற்றே. அவளுக்காகத் தன் ஒளிமிக்க எதிர்காலத்தையே இருட்டடித்துக் கெள்கிறானோ மணிவண்ணன்.

''ஊருக்குப் போகிறார் என்றால் அங்கே சொத்து ஏதேனும் இருக்கிறதா மாமா? அல்லது வேண்டிய உறவினர்...'' என்னும்போதே பானு அன்று அவனை அனாதை என்று சொன்னது நினைவுக்கு வந்தது.

''மண்ணாங்கட்டி. ஊரில் இவனுக்கு என்று உள்ள சொத்து ஒரு குட்டிச்சுவர் தான் உண்டு. அதுவும் இன்று இருக்கிறதோ அல்லது கழுதை தேய்த்து விழுந்து விட்டதோ தெரியாது. உறவினர், என்று இன்று ஒருவரும் இல்லை. நாளை வசதி வந்தால் நாலு என்ன, நாற்பது பேர் கூடலாம்'' என்றார் சிவநாதர் வெறுப்பாக.

''பின்னே அங்கே போய் என்ன செய்வார்?''

''சட்டியும் பானையும் செய்வான். செய்து தலையில் தூக்கிச் சென்று விற்பான், மடையன்'' என்று கையை உதறிக்கொண்டு எழுந்துவிட்டார் சிவநாதர்.

அவர் மிச்சம் வைத்து விட்டிருந்த சிற்றுண்டித்தட்டு களை எடுக்கக் குனிந்தார் திலகவதி. இரு பெரிய நீர் முத்துக்கள் அவரது கண்களிலிருந்து தரையில் விழுந்து சிதறின.

''அத்தை'' என்று அவரை இரக்கத்துடன் பார்த்தாள் லாவண்யா.

பதில் பேசாமல் அழுகையை அடக்கிய வண்ணம் உள்ளே விரைந்தார் அந்த அன்னை.

அவர் சென்ற திக்கையே யோசனையுடன் பார்த்த படி உதட்டைக் கடித்தாள் லாவண்யா. பிறகு வினுவைத் தேடிச் சென்றாள்.

மணிவண்ணனின் அறைக்கதவு தட்டப்பட்டது!

கதவைத் திறந்த மணிவண்ணன் திகைத்து நின்றான்.

''என்ன மணிவண்ணன் அப்படி நிற்கிறீர்களே. வந்தவர்களை வா என்றுகூடச் சொல்வது இல்லையா? சரி. வழியை விடுங்கள். உள்ளே வா வினு'' என்று கலகலப்புடன் பேசியபடி வினுவுடன் உள்ளே நுழைந் தாள் லாவண்யா.

''இல்... இல்லை லாவண்யா, இந்த நேரத்தில் நீ... இங்கே...''

''உங்களைத் தனியே பார்க்க வேண்டும் என்றால் இந்த நேரத்தில் இங்கேதானே வரவேண்டியிருக்கிறது.''

''லாவண்யா, நான் ஒரு நண்பனைப் பார்க்கச் செல்ல வேண்டியதிருக்கிறது. இப்போதே போக வேண் டும்... அதனால்...?''

''அந்த நண்பர் சற்றுக் காத்திருப்பார். வினு, நீ வேணுமானால் அந்தக் கிரிக்கெட்டு கிளப் காரியதரிசி யின் பையனைப் பார்த்துவிட்டு வா. ஆனால் அரைமணி நேரத்துக்கும் மேலாகத் தாமதம் செய்துவிடாதே'' என் றாள்.

''லாவண்யா!'' என்று பதறினான் மணிவண்ணன். ''அவனும் இருக்கட்டுமே. யாரேனும் நம் இருவரையும் கண்டுவிட்டால்...''

''நீ போய் வா வினு'' என்று வினுவை அனுப்பி னாள் லாவண்யா. அவன் சென்ற பிறகு ஆழப் பார்வை யாக மணிவண்ணனைப் பார்த்தாள். ''ஏன் அண்ணா?'' என்றாள் மிகவும் மென்மையாக.

மணிவண்ணன் குலுங்கிப் போனான். ''லா...லா வண்யா. நான்...நான் உனக்கு...''

''அண்ணனேதான். அண்ணனாக எண்ணாவிட் டால் இந்த வேளையில் உங்களைத் தேடி ஓடி வரு வேனா?'' என்றாள் லாவண்யா.

சற்று நேரம் அமைதியாக நின்றான் அவன். பிறகு ''நீ சொல்வது சரிதான் லாவண்யா. எனக்கும் அதே உணர்வுதான் உண்டாயிற்று'' என்றான் மணிவண்ணன்.

''இப்போது இந்தத் தங்கைக்கு ஒரு வரம் தர வேண்டும்.''

''என்னம்மா வேண்டும்?'' என்றான் மணிவண் ணன் நெகிழ்ந்து போய்.

''நீங்கள் மனமாரச் சிரிக்க வேண்டும்?'' என்றாள் லாவண்யா.

மீண்டும் அதிர்ந்து போனான் மணிவண்ணன். சமா ளித்துக் கொண்டு புன்னகை புரிய முயன்றபடி, ''என்ன உளறுகிறாய்? நான் சிரிப்பது என்ன அதிசயமா?'' என்று ஏதேதோ பேசினான்.

''மனமார என்றேனே அண்ணா'' என்றாள் லாவண்யா.

''லாவண்யா...''

''சொல்லுங்கள் அண்ணா. திடீரென்று என்ன ஆயிற்று? ஏதாவது சொல்லி மழுப்பப் பார்க்காதீர்கள். வாழ்வு வளம் எல்லாவற்றையும் உதறி ஓடும்படியாக என்ன நடந்தது? ஒளிமிக்க எதிர்காலத்தை விட்டுவிட்டு இருட்டுக்குள் ஒளியும்படியாக என்ன ஆயிற்று?

''காரணம்...அது நீ அறியாததா லாவண்யா?'' என்று வெளியே பார்த்தான் அவன்.

''தெரிகிறது அண்ணா. ஆனால் அது பல நாட்க ளாக நடப்பதுதானே. அதைக்கண்டு சகித்தவர்தானே நீங்கள்? இன்று திடீரென்று ஏன் மனம் நெகிழ வேண் டும்? பானு ஏதேனும் சொன்னாளா.''

மணி மூன்றாம் முறையாகக் குலுங்கிப் போனான். ''உனக்கு எப்படித் தெரியும்?''

''அவள் என்ன சொன்னாள்? எப்போது பார்த்தீர் கள்?''

மணிவண்ணன் ஒரு கணம் உதடுகளை அழுந்த மூடிக்கொண்டு நின்றான். பிறகு மனதின் மடை திறந்தது.

''என் நண்பன் சொன்னான். பானுவை ஓர் உல்லாச மைனருடன் அடிக்கடி பார்க்கிறானாம். கை கோத்துச் சென்றார்களாம் அதனால் நேற்று அவளது கல்லூரிக்கே சென்று அவளைச் சந்தித்தேன். புத்தி சொன்னேன் ஆனால்...'' மணியின் உதடுகள் துடித்தன.

''என்ன சொன்னாள்?'' லாவண்யா தாழ்ந்த குரலில் கேட்டாள்.

''அவள் நிறையவே சொன்னாள். ஆனால் விஷயம் இதுதான். அவள் கபாலியைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறாளாம்.''

''ஆ''

''மானமுள்ள மனிதன் என்றால் நான் அவனது முகத்தில் விழிக்கக் கூடாதாம்.''

''அண்ணா'' என்று பச்சாதாபத்துடன் கூவினாள் லாவண்யா.

''இப்போது சொல். நான் வேறு என்ன செய்யட்டும்? எனக்கு மானமும் இருக்கிறதே'' என்றான் மணி வண்ணன்.

மானத்தைப் பற்றி மணிவண்ணன் பேசவும் லாவண்யாவுக்கு பதில் கூற முடியவில்லை. ஆயினும், ''அதோடு வயிறும் இருக்கிறதே அண்ணா'' என்று மெல்லக் கூறினாள்.

''என் ஒரு வயிற்றுக்கு இரண்டு மூட்டை தூக்கினால் கூடப் போதும்.''

''போதாது அண்ணா, நீங்கள் இளைஞர் திறமை உள்ளவர். பொற்காலமாக ஒளிவிடும் எதிர்காலம் இருக்கிறது. அதில் எவ்வளவோ உயர்வாக வாழவேண்டும்.''

''யாருக்காக லாவண்யா?'' என்று அமைதியாகக் கேட்டான் மணிவண்ணன்.

லாவண்யா விக்கித்துப் போனாள். பிறகு ''ஒரு பானு போனால் உலகமே இருண்டு விடுவதில்லை, மணி அண்ணா'' என்றாள் ஆத்திரத்துடன்.

''குறைந்த பட்சம் என் உலகம் இருண்டு போகும். லாவண்யா'' என்றான் அவன் இன்னமும் அமைதியாகவே.

'ஓ!' இத்தகைய அன்பை அலட்சியப்படுத்துகிறாளே ஒருத்தி. அதிலும் கொஞ்சம் கூடத் தகுதியற்ற ஒருவனுக்காக. ஆனால் இன்னமும் பானு கபாலியைக் காதலிப்பதாக அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

''இத்தனைக்கும் அவன் அவளை உண்மையாக நேசிப்பவன் என்றால்கூடப் பரவாயில்லை. அவளது பணத்துக்காக அல்லவா கபாலி அவளைச் சுற்றுகிறான்'' என்றான் மணிவண்ணன் வேதனையுடன்.

''அது என்ன அண்ணா?''

''அதுதான் பானுவின் தாத்தா அவளுக்கு எழுதி வைத்திருக்கிறாரே ஒரு லட்ச ரூபாய்'' என்றான் அவன் கசப்புடன்.

வஜ்ரேசுவரியில் சிவநாதர் ஏதோ பணத்தை பானுவின் கணவனிடம் ஒப்படைக்க வேண்டும் என்றது

நினைவு வந்தது. எனவே அது என்ன என்று விசாரித் தாள்.

''சின்ன வயதில் சிவநாதரிடம் அவருடைய மாம னாருக்கு ஏதோ கோபமாம். அவருக்கு இரண்டே பெண் கள் மட்டும். சாகும்போது சொத்தை இங்கே பேரப் பிள்ளைகளுக்கு மட்டும் பிரித்துக் கொடுத்து விட்டார். அதுவும் பேரப் பிள்ளைகளின் திருமணத்துக்குப் பின் தம்பதிகளிடம் சேர்க்க வேண்டியது என்று எழுதி வைத்தி ருக்கிறார். அந்தப் பணம்தான் கபாலியைக் காந்தமாக இழுக்கிறது.'' என்று வெறுப்பாக விளக்கினான் மணி வண்ணன்.

'ஒகோ!' என்று வேகமாக யோசித்தாள் லாவண்யா. ''இப்போது மணிவண்ண அண்ணன் எனக்கு இன்னும் ஒரு வரம் தரவேண்டும்'' என்றாள் கெஞ்சுதலாக.

மணிவண்ணன் பேசாமல் நின்றான்.

''என்ன அண்ணா சும்மா நிற்கிறீர்கள்? நான் வேறு ஒன்றும் கேட்கவில்லை. ஒரே ஒரு வாரம் இங்கே தங்கியிருங்கள். வழக்கம் போல நடந்து கொள்ளுங்கள். பிறகு உங்கள் விருப்பம் போல நடந்து கொள்ளுங்கள்.''

மணிவண்ணன் மீண்டும் தயங்கிவிட்டு ''ஒரே ஒரு வரம்தான், லாவண்யா'' என்றான்.

''அதுவே போதும்'' என்றாள் லாவண்யா நம்பிக் கையோடு.

ஆனால் வீடு வந்து சேர்ந்தபோது அந்தநம்பிக்கை கலகலத்துப் போயிற்று.

வீட்டில் சிவநாதர்அவளைப் பரபரப்புடன் எதிர் கொண்டார். ''முக்கியமான விஷயம் முடிவாகி இருக்கிறது. நீ எங்கேம்மா போனாய்? வா. வா. சீக்கிரம் இங்கே வந்து கேள்.''

முக்கிய விஷயம்? லாவண்யா சட்டெனப் பானுவைத் திரும்பிப் பார்த்தாள். பானு தன் குரோதப் பார்வையைச் சட்டென விலக்கிக் கொண்டாள்.

''என்ன விஷயம், மாமா?'' என்று அச்சத்துடன் வினவினாள் லாவண்யா.

''நம் பானுவுக்குத் திருமணம்'' என்று பெரிதாக அறிவித்தார் சிவநாதர்.

## 17

லாவண்யா அதிர்ச்சி அடைந்தாள்.

''என்னப்பா?'' என்று அதுவரை பேசாமல் நின்ற வினு கேட்டான்.

''மாப்பிள்ளை யார் மாமா?'' இது லாவண்யா.

''நம் கபாலிதான். நம் பானுவின் சினிமாப் பைத்தியத்துக்குச் சரியான ஈடு,'' என்றார் சிவநாதர்.

லாவண்யா கூர்மையாகப் பானுவைப் பார்த்தாள். சற்று கர்வத்துடன் பதிலுக்குப் பார்த்துவிட்டு பானு எழுந்து போய்விட்டாள்.

லாவண்யா திலகவதியிடம் சென்றாள். ''இது என்ன அத்தை? இத்திருமணத்துக்கு நீங்கள் எப்படி சம்மதித்தீர்கள்?'' என்று படபடத்தாள்.

வாடிய புன்னகை ஒன்று திலகவதியின் முகத்தில் மலர்ந்தது. "என் சம்மதத்தை யாரம்மா கேட்டார்கள்? பெற்ற மகளும் கேட்கவில்லை. உற்ற...போகிறது போ. அவரவருக்கு இட்டபடி நடக்கும். எதையும் போகிற போக்கில் விட்டே எனக்குப் பழக்கம். நீயும் விட்டுவிடு" என்றார்.

"நானா விடுவேன்?" என்று மனதினுள் கறுவினாள் அவள்.

சிவநாதரிடம் சென்று பேசிப் பார்த்தாள். "கபாலி அவ்வளவு நல்லவர் போலத் தெரியவில்லையே மாமா" என்றாள்.

"கெட்டவன் இல்லை, லாவண்யா. பெரியவர்களின் கண்டிப்பு இல்லாமல் வளர்ந்த பையன். எல்லாம் நம் கைக்குள் வைத்துத் திருத்தி விடலாம்" என்றார் அவர் மிகவும் நம்பிக்கையுடன்.

"ஒரு வேளை திருந்தாவிட்டால்?"

"நாம் நல்லதையே நினைப்போம், அதோடு பானுவிடம் வாக்குக் கொடுத்து விட்டேன். இனிமேல் அவள் அல்லது அவன் மாறினால்தான் உண்டு" என்று முடித்தார் அவர்.

மறுநாள் கபாலிக்கு உபசாரமாக வீட்டில் ஒரு விருந்து வைத்தார்கள்.

பானுமதி தகதகவென்று தங்கமாக ஜொலித்தாள். அவளைப் பார்த்துவிட்டுப் பிறகு தன் ஆடைகளைத் தேர்ந்து எடுத்தாள் லாவண்யா. தூய வெண்ணிறத்தில்

பச்சை நிறத்தில் சரிகைக் கரையிட்ட சேலை, பொருத்த மாக வெண்பட்டுச் சோளி, கழுத்தில் தங்கச் சங்கிலியில் ஒரு பெரிய வைரப் பதக்கம். கையில் ஒற்றை வரிசையா கப் பச்சையும் வைரமும் பதித்த ஒரு வளையல், திரும் பும் போதெல்லாம் வானவில்லின் வண்ணங்களை வாரி இரைத்தது. அடக்கத்தோடு அந்தஸ்தையும் பணத்தையும் எடுத்துக் காட்டின அவளது ஆடையும் அணிகளும், கபாலி வலுக்கட்டாயமாகத் தன் பார்வையைப் பானு விடம் பதிக்க முயன்ற போதும் அது வசமிழந்து தன்புறம் பாய்வதை லாவண்யா உணர்ந்தாள். இதழோரம் குறு நகை மலர்ந்தது. அருண் வரக் கண்டதும் அந்த நகை மட்டிலும் வாடப் பார்த்தது. வேண்டுமென்றே ஓர் அலட் சியச் சிரிப்பை ஏந்தி அங்குமிங்கும் சென்று கலகலத்தாள்.

அருண் அவள் இருப்பதைக் கவனியாதவன்போல பானுவிடம் சென்று இரண்டு வார்த்தை பேசினான். பிறகு தன் சிற்றன்னையிடம் சென்றான்.

அவன் முகத்தைச் சற்றுக் கவலையுடன் பார்த்தார். திலகவதி, ''உனக்கும் லாவண்யாவுக்கும் என்னடா சண்டை?'' என்று விசாரித்தார்.

''சண்டையா!'' என்று ஆச்சரியப்பட்டான் அருண். ''இது யார் விட்ட கதை சித்தி?''

''யார் சொல்ல வேண்டும்? எனக்குக் கண்ணில் லையா பார்ப்பதற்கு? நீ அவளோடு பேசவே காணோமே!''

''அடேடே. ஆனாலும் ''நீங்கள் மோசம் சித்தி. அவளோடு இரண்டு வார்த்தை பேசினால் அப்போதும்

சண்டை போடுகிறாய் என்கிறீர்கள், சரிதான், சித்தி பெரியவர்களாயிற்றே; அவர்கள் சொல்லுக்கு மதிப்புக் கொடுத்துப் பேசாமல் இருப்போம் என்று நினைத்து நடந்தால் அப்போதும் சண்டைதான் என்கிறீர்கள்? அட தேவுடா, நான் என்ன செய்வேனடா?'' என்று கன்னத்தில் கை வைத்து சோகமாக போஸ் கொடுத்தான்.

சிரித்துக் கொண்டே அவன் கையை அகற்றி விட்டார் திலகவதி, ''வாயாடி'' என்று செல்லமாக வைதார்.

உண்டு முடித்து எல்லாரும் பேசிக்கொண்டு இருந்தார்கள். ''இன்னும் இரண்டு நாட்களில் கபாலியின் சகோதரர் வெற்றிலை பாக்கு மாற்ற வருவார்?'' என்று கபாலி கூறினான்.

பேச்சின் அலை கொஞ்சம் ஓய்ந்தபோது அறையின் குறுக்கே ஒரு மூலையில் இருந்த சிவநாதரை விளித்தாள் லாவண்யா. ''மாமா, உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும் என்று நினைத்தேன்.''

''என்ன விஷயம்?''

''நிரம்பவும் முக்கியமானது இல்லை. ஆனால் அடிக்கடி மறந்து போவதால் இப்போதே கேட்டு விடுகிறேன். அப்பாவின் கம்பெனி விற்ற பணம், வீடு விற்ற பணம் எல்லாம் சேர்த்து எவ்வளவு இருக்கிறது மாமா?'' என்று கொஞ்சுதலாக ஆனால் தெளிவாக வினவினாள் லாவண்யா.

''இந்த மாத வட்டியுடன் சேர்ந்து மூன்று இலட்சத்து எண்பதினாயிரத்து எழுநூறு ரூபாய் இருக்கு. என்ன

கண்ணம்மா திடீரென்று இந்தக் கேள்வி வந்தது? ஒரு வேளை பானு மாதிரி நீயும்...'' என்று சிரித்தார் அவர்.

''அப்படி இருந்தால் என்ன செய்வீர்கள். மாமா?'' என்று ஓரக் கண்ணால் கபாலியைப் பார்த்தாள் லாவண்யா.

அவன் விழிபிதுங்க விழிப்பதைக் கண்டதும் அவ ளுக்குச் சிரிப்பு வந்தது. ''உனக்கும் ஒரு கல்யாணத்தைச் செய்து ''இந்தாடா அப்பா உன் பணம்'' என்று உன் கணவனிடம் பணத்தை ஒப்படைத்துவிட்டு நிம்மதியாக இருப்பேன்'' என்று அவர் கூறவும் கபாலியின் முகம் மிகவும் சுருங்கிப் போயிற்று.

''போங்கள் மாமா'' என்று கிளிபோல மிழற்றி விட்டு ஒயிலாக எழுந்து உள்ளே சென்றாள் லாவண்யா. செல்லும் போதே அருண் வெறுப்பாகத் தன்னைப் பார்ப்பதையும் கண்டாள். உள்ளூர வலித்தது. கூடவே கோபமும் வந்தது. ''இவன் என்ன நினைத்தால் எனக் கென்ன?'' என்று சினமுற்றாள். கையை உதறிவிட்டு வினுவை அழைத்தாள்.

''என்னக்கா?'' என்று ஓடிவந்தான் அவன்.

''வினு, எனக்கு ஓர் உதவி செய்கிறாயா?''

''உனக்கில்லாத உதவியா அக்கா? என்ன செய்ய வேண்டும்.''

''கபாலியிடம் சென்று நாளை மாலை என்னைப் பூங்காவில் சந்திக்கச் சொல்ல வேண்டும்.''

வினுவின் முகம் மாறியது. உதடுகளை அழுந்த மூடிக் கொண்டு பேசாமல் நின்றான். ''அசல் அருண் தான்'' என்று நினைத்தாள் லாவண்யா.

''வினு, இதைச் சொல்லு. உனக்கு அத்தானாகக் கபாலி வருவது பிடிக்கிறதா?''

''இல்லை''

''இல்லையானால் நான் சொல்வது போலச்செய்.''

''அவர் பானுவை மணப்பது எனக்குப் பிடிக்க வில்லைதான் அக்கா. ஆனால் அதற்குப் பதிலாக நீ அவருக்கு பலியாடாக மாறுவது எனக்கு அறவே பிரிய மில்லை.''

''வினு, நான்...''

''நான் சின்னப் பையன் இல்லை அக்கா. எனக்கு எல்லாம் புரிகிறது. நீ பண்ணுகிற வேலை சரியில்லை. இந்த மாதிரி தியாகமெல்லாம் வேண்டாம்'' என்று பெரிய மனிதனைப் போல அறிவுரை கூறினான்.

லாவண்யா அயர்ந்து போனாள். பிறகு அவளுக்குச் சிரிப்பு வந்தது. சிரித்துக்கொண்டே, ''வினு, நீ பெரிய ஆளடா. இவ்வளவு ஊகித்திருக்கிறாயே! ஆனால் நீ நினைப்பது போல எதுவும் இல்லை. முதலாவதாக நான் எந்தவித தியாகமும் செய்யப் போவது இல்லை. இந்தக் கபாலி இவ்வளவுதான் என்று காட்டப் போகிறேன். அதற்கு மேல் உன் அக்கா பாடு'' என்றாள்.

''இம்ம்...'' என்று அரை மனதாகத் தலையை ஆட்டிவிட்டுச் சென்றான் வினு.

மறுநாள் பார்க்கில் சந்தித்தபோது கபாலி ஒரேயடியாக உருகிப் போனான், "ஏதோ, ஒரு நிமிடம் கூட இல்லை. ஒரு வினாடி பலவீனத்தால் பானுவை மணக்க சம்மதித்து விட்டேன். இப்போது என்ன செய்வது என்றே புரியவில்லையே," என்று தவித்தான்.

"பானுவையே மணந்து கொள்வதுதானே" என்றாள் லாவண்யா கிண்டலாக.

"உன் கால் தூசி பெறுவாளா? அவள்?"

"பின்னே அவளை மணந்து கொள்வதாகக் கூறினீர்களே" என்று கத்தினாள் லாவண்யா.

"உனக்குத் தெரியவில்லையா லாவண்யா? என் தொழிலில் ஒரே நெருக்கடி. விதவைத் தாயார். அண்ணன்மார் எல்லாருக்கும் நான்தான் பணம் கொடுக்க வேண்டும். கொஞ்சம் பணம் இல்லாது போனால் எல்லோரும் அதோ கதி. அதனால் என் இதயத்தின் ராணியாக நீ கொலு இருந்தபோதும் வேறு வழியில்லாமல் என் காதலைத் தியாகம் செய்து அவளை மணக்கச் சம்மதித்தேன்."

ஆகா ஆகா, என்னமாக நடிக்கிறான்? பானுவை சுற்றிச் சுற்றி வந்து அலங்கார வார்த்தைகள், சினிமா என்று மயக்கியதைக் காற்றோடு விட்டாயிற்று. ஏதோ கெஞ்சிக் கூத்தாடி அவனைச் சம்மதிக்க வைத்ததுபோல நாடகம் காட்டுகிறான். "ஊம். எல்லாம் ஓர் இலட்சம் பணத்துக்காக" என்று கேலியாகப் பெருமூச்சு விட்டாள் லாவண்யா.

''ஆமாம். அந்தப் பணத்துக்காக என் மகிழ்ச்சியை, என் காதலை, என் எதிர்கால வாழ்வை, என்னையே தியாகம் செய்தேன் லாவண்யா. ஆனால் அது எவ்வளவு முட்டாள்தனம் என்று இப்போது தெரிகிறது.''

''எப்படி ஒகோ எனக்கு அவளைவிட அதிகமாகப் பணம் இருக்கிறதாலா?''

''ஆமாம் லாவண்யா. கூழாங்கல்லை வைரம் என்று ஏமாந்து போனேன். அதிலும் உண்மையான வைரம் என் கையெட்டும் தூரத்தில் இருந்தபோது காணாமல் கோட்டை விட்டு விட்டேனே. அதை எண்ணும்போது என் இதயமே வெடித்து விடும்போலத் துடிக்கிறது. ''லாவண்யா, நேற்று நீ அணிந்திருந்தவை வைரம் தானே?''

''ஆமாம்'' என்று தலையசைத்து விட்டுக் ''கைக்கு எட்டுவது வாய்க்கு எட்டுவது இல்லை'' என்றாள் லாவண்யா.

முதலில் அவன் திகைத்தான். பின்னர், ''ஆமாம், நீ ஏன் கையருகில் இருக்க நான் ஒரு கழுதையைத் தேர்ந்தெடுத்தேனே.''

''இனம் இனத்தோட'' என்றாள் லாவண்யா.

''என்ன?''

''அதோ பாருங்கள். இதுவரை அந்த நாரை கடல் கொக்குகளோடு கலந்து நின்றது. இப்போது இன்னொரு நாரையிடம் சென்று விட்டது'' என்றாள் அவள் அப்பாவி போல.

''ஓ... அது போகட்டும் லாவண்யா. இப்போது என்ன செய்வது? நம் தெய்வீகக் காதல் தோல்வி அடைவதா? என் உயிரே போய்விடுமே'' என்று புலம் பினான் கபாலி.

''நம் காதலா?...ஓ ஆமாம் ஆமாம். நம் தெய்வீகக் காதல் சாவதா? கூடவே கூடாது. அதெப்படிச் சாகலாம்.''

''மீள வழி?''

''அதுதானே? மீள வழி வேண்டுமே. நான்தான் முன்பே சொன்னேனே, கைக்கெட்டுவது வாய்க்கெட்டு வது இல்லை என்று.''

''எட்டாக் கனியாக நின்று என்னை இம்சிக்கிறாயே கண்ணே'' என்று வசனம் பேசினான் கபாலி.

''யார்...நானா?'' கலகலவென்று சிரித்தாள் லாவண்யா. ''நான் அப்படிச் சொல்லவில்லை. நீங்கள் பானுவுக்கு எட்டாக்கனி ஆகப் போகிறீர்கள் என்றேன்.''

''எப்படி?'' என்று ஆவலுடன் கேட்டான் கபாலி.

''இதோ பாருங்கள் கேபால், தாலிகட்டும் நேரத்தில் கூடப் பல திருமணங்கள் நின்று போகின்றன. நீங்கள் வெற்றிலை பாக்கு கூட மாற்றவில்லையே.''

''அதனால்...''

''நாளை வெற்றிலை பாக்கு மாற்றுவதை நிறுத்தி விடுவது'' என்றாள் லாவண்யா அலட்சியமாக.

''எப்படி நிறுத்துவது?''

''அது வெகு சுலபமாயிற்றே! எனக்கு பானுவைப் பிடிக்கவில்லை. அவளுக்கு மூக்கு சப்பையாக இருக்கிறது என்று சொல்லுங்கள்.''

''இவ்வளவு நாள் அது தெரியவில்லையா என்று கேட்பார்களே!''

''கேட்பார்களா? மாப்பிள்ளை வீட்டாரைப் பெண் வீட்டார் கேள்வி கேட்க முடியுமா?'''

''ம். முடியாதுதான். ஆனால் அந்த அருண் அடிக்கவே வருவானே'' என்று அஞ்சினான் கபாலி.

''அப்படியானால் பானுவையே மணந்து கொள்ளுங்கள்'' என்றாள் லாவண்யா ஆத்திரமாக.

''எனக்கு இன்னொரு யோசனை தோன்றுகிறது.''

''என்ன''

''நாம் இருவரும் எங்கேயும் ஓடிப்போய் விட்டால், என்ன? ஓடிப்போய் எங்கேனும் இரண்டு நாள் கணவன் மனைவியாக வாழ்ந்து விட்டால் பிறகு இவர்களால் என்ன செய்ய இயலும்,'' என்று தன் திட்டத்தை விவரித்தான் கபாலி.

கணவன் மனைவியாக! லாவண்யாவுக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. அதை மறைத்து சாதாரணமாகவே, ''செய்யலாம். ஆனால் பிறகு நம் பணத்தைத் தரமாட்டேன் என்று மாமா மறுத்தால் என்ன செய்வது?''

''சொல்லி விடுவாரா என்ன? வழக்குப் போட்டுப் பிடுங்கிவிட மாட்டேனா'' என்றான் அவன் வீராப்பாக.

''சிவில் கேசா. அது ஒரு பதினைந்து ஆண்டு நடக்கும்.அதன் பின் பணம் வந்தால் போதுமா?'' என்று உயிர் நாடியைப் பிடித்தாள் லாவண்யா.

''அய்யய்யோ அது பயனில்லையே... பின்னே என்னதான் செய்வது?''

''வழி என்னவா? நீங்கள் தைரியமாக மாமாவிடம் இந்தத் திருமணம் வேண்டாம் என்று சொல்லுங்கள்'' என்று சொல்லிக் கொடுத்தாள் லாவண்யா.

''சொல்லலாம். ஆனால் அருண்...'' என்று முதுகை நெளித்தான் கபாலி.

''நான் போகிறேன். நீங்கள் பானுவையே மணந்து கொண்டு அருணுக்குத் தாளம் போடுங்கள்'' என்று கோபம் கொண்டவள் போலப் பேசினாள் லாவண்யா.

''கோபப்படாதே லாவண்யா! நான் ஒன்று செய்கி றேன். விஷயத்தை விளக்கி ஒரு கடிதம் எழுதுகிறேன்.''

''எப்போது? நாளை எழுதினால் நாளை மறுநாள் கிடைக்கும்...''

''ஆமாம், அன்றுதானே நிச்சயம் செய்வது. கடி தத்தை அனுப்பிவிட்டுக் கொஞ்ச நாள் தலைமறைவாக இருக்கிறேன். கலவரம் கொஞ்சம் ஓய்ந்ததும் நீ விஷயத் தைச் சிவநாதரிடம் விளக்கு.''

''விஷயம்?''

''நம் இருவரின் காதலைப் பற்றித்தான். முதலில் சற்றுக் கலங்குவார். நீ பிடிவாதமாக இரு. அவர் கடைசி

யில் நம் திருமணத்துக்குச் சம்மதித்து விடுவார்'' என்றான் கபாலி.

## 18

**லா**வண்யா சற்று யோசித்தாள். கபாலி நேரில் வந்து பேசப் பயப்படுவது புரிந்தது. அழுத்தினால் காரியம் கெட்டு விடுமோ என்று அச்சம் அவளுக்குத் தோன்றியது. நேரில்தான் பேச வேண்டும் என்று என்ன கட்டாயம்? கடிதம் எழுதினாலும் அதேதானே. கபாலி ஒரு பச்சோந்தி என்று பானுவுக்கு உணர்த்த வேண்டும். அவனது மனதின் கருப்பு ஒருமுறை வெளியாகி விட்டால் பிறகு பானுவின் மனம் நேராகிவிடும். அந்த நேரம் மணிவண்ணன் அவள் அருகில் இருந்தால்... மனதில் ஒன்று தோன்றியது. லாவண்யாவிடம் மணிவண்ணன் பாசத்துடன் பேசியது பொறுக்காமல்தானே பானு முதலில் கபாலியிடம் சாயத் தொடங்கினாள். இப்போது கபாலி தன்னைவிட்டு லாவண்யாவை விரும்புகிறான் என்பது தெரிந்தால் அவள் அவனைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாள்! சட்டெனக் கபாலியிடம் திரும்பினாள். ''கேபால், இன்னும் ஒரு சின்ன விஷயம். நீங்களே உங்கள் கடிதத்தில் ''நான் லாவண்யாவை விரும்புவதால் பானுவை மணக்க இயலாது'' என்று எழுதி விடுங்களேன். குழப்பம் இன்னமும் அதிகமாகும். அதுதான் நல்லது. கலங்கிய குட்டையில்தானே மீன் பிடிப்பது எளிது. கடிதமும் வர நானும் அதை ஆதரித்துப் பேசினால் பிறகு மாமாவுக்கு மறுக்கத் துணிவு இராது'' என்றாள் புன்னகையோடு.

கபாலிக்கும் அது சரியாகவே தோன்றியது. லாவண் யாவின் பெயரைக் கடிதத்தில் இழுத்து விட்டால் அவளா லும் பிறகு எளிதில் மாற இயலாது. எப்படியும் ஒரு கட்டுப்பட்ட உணர்வு அவளுக்கே உண்டாகி விடும். ''செய்கிறேன்'' என்று ஆமோதித்தான்.

லாவண்யாவின் முகம் மலர்ந்தது. ''செய்வீர்கள் என்று எனக்குத் தெரியும்'' என்று புன்னகை செய்தாள், ''மறந்து விடாதீர்கள்'' என்று ஒரு நெளிப்புடன் எழுந் தாள். ''வரட்டுமா? ஒன்று ஒயிலாக நடந்து பூங்காவை விட்டு வெளியேறினாள். வாயில் அருகே சென்றதும் திரும்பிப் பார்த்தாள். வாயில் ஈ புகுவது தெரியாமல் அவன் தன்னை பார்ப்பது தெரிந்தது. ஸ்டைலாக ஒரு ''டாடா'' காட்டி விட்டு வெளியேறினாள்.

அப்போது எங்கிருந்தோ வினு வந்து சேர்ந்தான்.

''நீ எங்கிருந்தடா வந்தாய்?'' என்று வியந்தாள் லாவண்யா.

''எல்லாம் இங்கேதான் சுற்றிக் கொண்டு இருந் தேன். உன்னைப் பார்த்துவிட்டு வந்தேன்'' என்று சுவார சியமாகப் பதில் கூறினான் சிறுவன்.

ஏதோ சொல்ல வாயெடுத்து விட்டுப் பிறகு பேசா திருந்து விட்டாள் லாவண்யா.

அன்று பொழுது விடிந்ததில் இருந்து ஒரே பர பரப்பு. வீட்டில் எல்லாருக்குமேதான். பானுவின் முகத் தைப் பார்க்கும்போது லாவண்யாவுக்கு அடிக்கலாம் போலக் கை துருதுருத்தது. இப்படியும் ஒரு மக்கு

இருக்குமா? அசட்டுப் பொறாமையால் வாழ்வையே பாழாக்கிக் கொள்ளுமா? ஒருவரும் பாராதபோது பானு மதியின் கண்களில் கலக்கம் சூழுவதையும் மற்றவர் பார்வையில் வலுக்கட்டாயமான புன்னகை படிவதையும் லாவண்யா கவனித்தாள். லாவண்யாவைப்பார்க்கும் போது மட்டும் கர்வமாகக் காட்டிக் கொண்டு வானத் தைப் பார்க்க முகத்தைத் தூக்கிக் கொள்ளுவாள்.

காலை பதினொன்றுக்கு நல்ல நேரம் குறித்திருந்தார் கள். அதுவரையிலும் மாப்பிள்ளை வீட்டார் என்று ஈ காக்காய் கூட வரவில்லை.

ஆனால் பதினொரு மணி அடிக்கவும் மணிவண் ணன் வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும் லாவண்யா வுக்கு முகம் மலர்ந்தது. அவள் அவ்வளவு கெஞ்சி அழைத்திருந்த போதிலும் அவன் வருவானா என்று லாவண்யாவுக்கு சந்தேகம்தான். அவன் குரலைக் கேட்ட துமே பானுவின் முகம் வெளுப்பதைக் கண்டு ரசித்தாள்.

மணி பதினொன்றுக்கு மேல் பன்னிரண்டை நெருங் கவும் ஒருவர் முகத்திலும ஈயாடவில்லை. லாவண்யா வுக்கும் உள்ளூர உதைப்புதான். கபாலியின் கடிதமும் வரவில்லையே!

''ஒருவரையும் காணோமே'' என்று கீழே வந்தார் சிவநாதர்.

''நான் நேரில் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று கிளம்பினான் அருண்.

இவன் போய் இரண்டு அதட்டல் போட அவன் மிரண்டு கிளம்பி விட்டால் காரியம் கெட்டுவிடுமே?

''இல்லை இல்லை. இன்னும் கொஞ்ச நேரம் பார்ப் போம்'' என்று அவன் கூடவே மாடியிலிருந்து இறங்கி னாள் லாவண்யா.

அப்போது ஒருவன் சைக்கிளில் வந்தான். அவன் பெயர் பெருமாள். கபாலியின் வேலையாள். வந்தவன் சிவநாதரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பிச் சென்று மறைந்தான்.

சிவநாதர் மெல்லக் கடிதத்தைப் படித்தார், பிறகு மடித்தார்.

''என்ன சித்தப்பா?'' இது அருண்.

அவர் பார்வை லாவண்யாவிடம் படிந்தது. ''கபாலி எழுதியிருக்கிறான். பானுவை மணந்தால் வாழ்க்கை சுகப் படாதாம் இந்தக் கல்யாணம் வேண்டாமாம்! சிரமத்துக்கு மன்னிக்க வேண்டுமாம்.''

திரும்பி மேலே பார்த்தாள் லாவண்யா. சன்னல் அருகில் நின்று கேட்டுக் கொண்டு இருந்த பானுவின் அதிர்ச்சியையும் அவள் அருகே மணிவண்ணன் ஆதரவு டன் நெருங்குவதையும் கண்டாள். என்னதான் மறைக்க முயன்றாலும் இயலாமல் அவள் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

ஆனால் அருணின் பார்வை அவள் முகத்தில் படிந்ததையோ அந்தப் பார்வையில் வெறுப்பு ஏறிய தையோ கவனிக்கவில்லை.

படிக்கட்டின் அருகே நின்ற திலகவதியின் முகம் வெளுத்ததைக்கூட அவள் காணவில்லை. ஒரு விரலைக்

குற்றம் சாட்டுவது போல நீட்டி, ''பாவி'' என அவர் அழைத்தபோது லாவண்யா திடுக்கிட்டாள். அதற்குள் ''தாயைப் போலப் பெண் என்று நிரூபித்து விட்டா யேடி'' என்று கதறிவிட்டுத் தள்ளாடினார்.

''அத்தை'' என்று கூவிப் படியேற முயன்றாள் லாவண்யா.

அவளை விலக்கித் தள்ளிவிட்டு மேலே பாய்ந்தான் அருண்.

அதற்குள் சுயநினைவை இழந்துவிட்ட திலகவதி படிகளில் உருண்டு வந்து விழுந்தார். தலையில் அடி பட்டு செந்நிறக் குருதி வெள்ளமாய்ப் பீறிட்டது.

வீட்டில் ஒரே பரபரப்பு!

சிவநாதரும் அருணும் திலகவதியை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றனர். கொஞ்ச நேரம் கழித்து திலகவதிக்கு ஆபத்து இல்லை என்று அருண் போன் செய்தான். ஆனால் ஐந்து மணிக்கு மேல் அருண் மட்டும் திரும்பி வரவும் எல்லாரும் மனம் பதைத்துப் போயினர்.

''சித்திக்கு மனதில் பெரிய அதிர்ச்சியாம். அதோடு ரத்த சேதமும் சேர்ந்து விட்டதால் ஒருவாரம் படுக்கையி லேயே இருக்க வேண்டும் என்கிறார் டாக்டர்,'' என்று விளக்கம் கூறினான் அருண்.

''நாங்கள் எப்போது பார்க்கலாம், அண்ணா?'' என்று கேட்டான் வினு.

''காலையில் போகலாமடா.''

''எல்லாம் என்னால்தான்'' என்று கேவினாள் பானு மதி.

''நீ என்னம்மா செய்வாய்? எல்லாம் சித்தப்பா செய்த தவறு'' என்று லாவண்யாவை வெறுப்புடன் பார்த்தான் அருண்.

சிவநாதர் தன்னை இங்கே அழைத்து வந்ததைத் தான் அருண் குறிப்பிடுகிறான் என்பதை லாவண்யா புரிந்து கொண்டாள். அம்பு பாய்ந்ததைப் போல அந்த வார்த்தை லாவண்யாவின் நெஞ்சில் வேதனை உண்டாக் கிற்று. தாங்கிக்கொண்டு ''அத்தை இப்போது எப்படி இருக்கிறார்கள்?'' என்று மெல்லியகுரலில் வினவினாள்.

''இன்னமும் செத்துவிடவில்லை'' என்றான் அவன் காட்டமாக.

அடக்கமாட்டால் கண்ணீர் உதிர்த்து விட்டாள் லாவண்யா. முகத்தை மூடிக்கொண்டு உள்ளே ஓடினாள்.

சில நிமிட நேரம் அமைதி நிலவியது. அதைக் கலைத்தான் மணிவண்ணன். ''அருண், நீங்கள் நினைப் பது தவறு'' என்று தொடங்கினான்.

அதற்குள் முகத்தைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தாள் லாவண்யா. ''வினு,'' என்று தொண்டை கரகரக்க அழைத்தாள். ''வினு, அத்தையிடம் அழைத்துப் போகிறாயாடா?'' என்று கேட்டு முடிக்கு முன் குரல் உடைந்து கேவிற்று.

''இதோ, அக்கா'' என்று எழுந்து வந்தான் வினு.

ஆனால் அங்கே ஒருவன் மனம் மட்டும் கல்லாக இருந்தது. "எதற்கு? மிச்சம் இருக்கும் உயிரையும் எடுத்து விடவா?"

நெஞ்சில் கைவைத்து அழுத்தியபடி அவனை வெறித்துப் பார்த்தாள் லாவண்யா. "உன்னிடமா என் மனதைப் பறிகொடுத்தேன்?" என்று கேட்டது மனம். மீண்டும் வினுவிடம் திரும்பினாள். "வருகிறாயா வினு?"

"வினு பேசாமல் உட்கார்" என்று அதட்டினான் அருண்.

பார்வையால் வினுவிடம் கெஞ்சினாள் லாவண்யா.

"அண்ணா, பாவம் அக்கா. நான் அழைத்துப் போகிறேனே" என்று அண்ணனிடம் கெஞ்சினான் வினு.

"அல்லது நான்..." என்று எழுந்தான் மணிவண்ணன்.

அருணின் பார்வை பானுவிடம் சென்று மீண்டது.

"வேண்டாம் மணிவண்ணன். நானே அவளை அழைத்துப் போகிறேன். நீங்கள் வீட்டைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று அருண் எழுந்தான்.

"நீங்கள் திட்டித் திட்டியே அக்காவை அழ வைத்து விடுவீர்கள்," என்றான் வினு.

"இரண்டு சொட்டுக் கண்ணீரில் கரைந்துவிட அவள் வெல்லக் கட்டி அல்ல" என்று அலட்சியமாகப் பதிலிறுத்தபடி முன்னே நடந்தான் அருண்.

''வெல்லக் கட்டியா? உங்களுக்கு நான் வேப்பங் காய் ஆயிற்றே?' என்று வேதனையுடன் அவனைப் பின் தொடர்ந்தாள் லாவண்யா.

அந்த மருத்துவமனையை அடையும் வரையிலும் அருண் லாவண்யாவிடம் ஒரு வார்த்தைகூடப் பேச வில்லை. மருத்துவமனையினுள் திலகவதி இருந்த அறை அருகே செல்லும் வரையிலும்கூட அதே மவுனம்தான். பிறகு அவளை நிறுத்திச் சொன்னான். ''நீயும் உன் தாயும் எடுத்தது போக சித்தியிடம் அரை உயிர்தான் பாக்கி இருக்கிறது. எதையாவது சொல்லி அந்த அரை உயிரை யும் நீ பறித்து விடாதே'' என்றான் கடுமையாக.

தாய்! தாய்? லாவண்யா நிமிர்ந்தாள், ''நீங்கள் சொல்லுவது எனக்குப் புரியவில்லை. ஆனால் என் செயலால் கடைசியில் நன்மைதான் விளைந்திருக்கிறது. கண்ணிருந்தால் உங்களுக்கு அது தெரிந்திருக்கும்'' என் றாள்.

''தெரிந்ததால்தான் மணிவண்ணனுக்குப் பதிலாக நான் உன்னை அழைத்து வந்தேன். ஏதோ, நீ உன் வசதிக்குப் பார்த்தாலும் விளைந்திருப்பது நன்மை. இல் லாவிட்டால் உன்னை என் காரில் ஏற்றி வந்திருப்பேன் என்றா நினைக்கிறாய்?'' வாயாலேயே கெட்டான் அவன்.

''இவ்வாறு சிரமப்படுவானேன்? வினுவை அனுமதித்திருக்கலாமே. உங்களுக்கு இந்தக் கஷ்டம் இராதே'' என்றாள் லாவண்யா பதிலுக்கு.

''அவன் சிறு பையன். சித்தியை இந்த நிலையில் படுக்கையில் பார்த்தாலே அவன் பயந்து போவான்.

அதோடு நீ இன்னமும் என்னென்ன நாடகம் ஆடப் போகிறாயோ? அதையெல்லாம் பார்த்து அவன் மனம் கெடுவானேன்?''

''நான் ஆடும் நாடகத்தைப் பார்க்க நீங்களும் தேவையில்லை என்று நினைக்கிறேன்'' என்றாள் அவள் சினத்துடன்.

அலட்சியமாகத் தன் அகன்ற தோளைக் குலுக்கி னான் அவன். ''அங்கே என் சித்தாப்பாவும் இருக்கிறார். ஆகவே அளவுடன் நாடகமாடு. இங்கே இடப்புறமாகத் திரும்பினால் மூன்றாவது அறை. நான் என் அலுவலகத் துக்குப் போய்விட்டு சரியாக அரைமணி நேரத்தில் திரும்பி வருவேன். அதற்குள் நீ உன் பேச்சை எல்லாம் முடித்துவிட வேண்டும்'' கடுங்குரலில் கட்டளையிட்டு விட்டு அவன் திரும்பி நடந்தான்.

நடுங்கும் கீழுதட்டைப் பற்களால் அழுத்தியபடி, சற்று நேரம் நின்றாள் லாவண்யா. சற்று திடம் வந்ததும் திலகவதியின் அறையை நோக்கி நடந்தாள்.

''இல்லாத ஒன்றை எண்ணி இத்தனை காலமும் அவதிப்பட்டுக் கொண்டு இருந்தாயா, திலகா? என்ன அசட்டுத்தனம் பார்'' என்று சிவநாதர் ஏதோ சொல்லிக் கொண்டு இருந்தது வெளியே கேட்டது.

லாவண்யாவுக்கு இதன் தொடர்பாக ஏதோ ஒன்று மனதில் நெருடியது. அன்று வஜ்ரேசுவரியில் அருணு டைய அன்னை திலகவதியிடம் கூறிய அதே வார்த்தை கள்.

கூடவே அருண் கூறிய ''அரை உயிரை எடுத்த அன்னை'' என்ற சொற்கள், ''தாயைப் போலப் பெண்'' என்று திலகவதி கூறியது, எல்லாமே சேர்ந்து அவள் மனதைக் குழப்பின. ஆனால் இவை எதுவும் அடி மனதில் பதியவில்லை. படிகளின் மேலே நின்று ஒற்றை விரலை நீட்டி ''பாவி'' என்று திலகவதி அழைத்தது மட்டுமே அவளைத் தீயால் சுட்டுக் கொண்டிருந்தது.

கதவை மெல்லத் தட்டிவிட்டுத் திறந்தாள். லாவண் யாவின் வெளுத்த முகத்தைக் கண்டு ஆதரவுடன் கைகளை நீட்டினார் திலகவதி.

''அத்தை!'' என்று பாய்ந்தோடி வந்து அந்தக் கைகளில் முகம் புதைத்துக் கதறினாள் லாவண்யா. ''என்னைத் தப்பாக நினைத்து விட்டீர்களே அத்தை. என்னைப் போய் நீங்களே தப்பாக எண்ணி விட்டீர் களே, அத்தை, அத்தை,..''

''தவறுதான் கண்ணம்மா. எல்லாமே என் முட்டாள் தனத்தினால் வந்த வினைதான்...'' என்று தானும் கண் ணீர் உகுத்தார் திலகவதி.

''போதும் போதும். இரண்டு பேரும் அழுது ராகம் பாடியது போதும். நிறுத்துங்கள்'' என்று அதட்டினார் சிவநாதர்.

கண்களைத் துடைத்துக் கொண்டு திலகவதியின் அருகில் அமர்ந்தாள் லாவண்யா. சட்டென முகம் மாறி யது. ''அத்தை, நீங்கள் வரும்போது என்ன சொன்னீர் கள்? என் அம்மா...'' என்று கேட்டவள், பிறகு ''மாமா, அத்தை பேசலாமா? உடம்பு நிரம்பவும் பலகீனமாக

இருக்கிறதா? அதிக அதிர்ச்சி என்று அருண் சொன்னாரே'' என்று சிவநாதரிடம் கேட்டாள் லாவண்யா.

''பேசலாம், பேசலாம். நன்றாக பேசி தீர்த்துவிடு வது தான் நல்லது'' என்றார் சிவநாதர்.

## 19

லாவண்யா திகைத்துப் போய் நின்றாள்.

சிவநாதர் தொடர்ந்து பேசினார். ''அருண் வந்த போது உன் அத்தை மிகவும் பலவீனமாகத்தான் இருந் தாள். பிறகு நான் அவளிடம் ஒரு விஷயம் சொன்னேன். அது பெரிய டானிக் ஆகிவிட்டது. இப்போது உடம்புக்கு ஒன்றுமே இல்லை என்று டாக்டரே கூறிவிட்டார். எதற் கும் இரவு மட்டும் தங்கிவிட்டுக் காலையில் வீடு திரும்பலாம் என்று இருக்கிறோம். அது இருக்கட்டும். இப்போது விஷயத்துக்கு வருவோம். உன் அம்மா பற்றி என்ன என்று கேட்டாய் அல்லவா? சொல்லப் போனால் ஒன்றுமே இல்லை. இருட்டை இருட்டு என்று கூடச் சொல்ல முடியாது. கதவுக்குப் பின்னால் என்ன இருக்கி றது என்று எட்டிக்கூடப் பாராமல் அங்கே பூதம் இருப்ப தாக உன் அத்தை எண்ணிக் கொண்டாள். இதற்கு அருண் வேறு பக்க வாத்தியம்... புரியவில்லையா? சொல்லுகிறேன், கேள்.''

''இது, உன் தாய் உன் வயதில் இருந்தபோது நடந்த கதை! அப்போது திலகத்துக்கும் அதே வயதுதான்.

''திலகத்துக்கும் எனக்கும் சிறு வயது முதலே முடிச்சுப் போட்டிருந்தார்கள். எங்களுக்கும் அது கசக்க வில்லை என்று வைத்துக் கொள்ளேன். கதை நடந்த சமயம் எனக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்புக் கிடைத் தது. சென்றேன். ஆறு மாதம் கழித்து நான் திரும்பி வந்தபோத திலகம் ஒரு புது சினேகிதி பிடித்திருந்தாள். அவள்தான் செந்திரு—உன்தாய்.

''செந்திரு அசப்பில் உன்னைப் போலவேதான் இருப்பாள். பேரழகி, கலகலப்பாகப் பழகுவாள். பேச்சு, பார்வை, அசைவு எல்லாமே தெளிவாக, பளிச்சென்று ஓர் ஒளிபோல இருக்கும். நான் அந்த ஒளியில் மயங்கிப் போனேன்.''

''என்ன மாமா?''

''ஆமாம் அம்மா, அது மதுவின் போதைபோல ஒரு மயக்கம்தான். தானாகத் தெளிந்து விடக்கூடியதும் கூட. ஆனால்அந்த மயக்கத்தின் வசப்பட்டு இருக்கை யில் அதுதான் மெய் போன்ற பிரமை.

''எங்கள் பெரியவர்கள் தம் போக்கில் எங்களுக்கு—அதாவது திலகத்துக்கும் எனக்கும் திருமணம் நிச்சயத் துக்கு நாள் குறித்து விட்டார்கள். எனக்குச் சொல்லவும் முடியவில்லை. மெல்லவும் முடியவில்லை. கோழை யைப் போல ஒளிந்து கொண்டு ஒரு கடிதம் எழுதினேன். கிட்டத்தட்ட கபாலியைப் போலவேதான். அதில் நான் செந்திருவைத்தான் மணப்பேன் என்று எழுதியிருந் தேன்.''

''மாமா'' என்று அதிர்ச்சியுற்றுக் கூவினாள் லாவண்யா.

''ஆமாம் லாவண்யா. ஆனால் அப்படி நான் எழுதியபோது உன் தாயின் மனம் எங்கிருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. என்னிடம் அவள் இயல்பாகச் சிரித்ததை நான் என்னவோ என்று எண்ணிக் கடிதமும் எழுதிவிட்டேன்.''

ஆண்களைக் கண்டாலே ஒதுங்கு ஒதுங்கு என்பாரே அன்னை. காரணம் இந்தக் கதையாகத்தான் இருக்குமோ என்று லாவண்யாவுக்குத் தோன்றியது. ''பிறகு?''

''ஒன்றிரண்டு நாட்களில் செந்திருவிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அவள் அதில் எழுதியிருந்தபடி அவளைக் காணச் சென்றேன். அங்கே அவளுடன் கூட உன் தந்தை சம்பந்தமும் இருந்தான். எனக்கு உன் அன்னை அன்று புத்தி சொன்னாள். தன் மனம் சம்பந்தத்திடம் இணைந்திருப்பதாகக் கூறினாள். அங்கேயிருந்து அதைப் பிரித்தால் அது செத்துவிடும் என்றாள்.''

தந்தையின் மரணத்திற்குப் பிறகு, தாய் ஒளியிழந்து வாடி மறைந்தது லாவண்யாவுக்கு நினைவு வந்தது.

சிவநாதர் தொடர்ந்தார்!

''அது போலவே திலகத்தின் மனம் என்னிடம் பதிந்திருப்பதைப் பற்றியும் எடுத்துரைத்தாள். அந்த மனதைச் சாகடித்துவிடக் கூடாது என்றாள். பேசிக் கொண்டு இருக்கும் போதே சட்டென்று ஒரு காரியம் செய்தாள். என் காலில் விழுந்து என்னை வணங்கினாள். ''உற்றாரின் எதிர்ப்புக்கிடையே இவரை மணக்கப் போகிறேன். புதுவாழ்வு தொடங்கும் எனக்கு ஆசி கூறுங்கள்

அண்ணா'' என்றாள். எனக்கு அப்படியே மயிர்க் கூச்செறிந்துவிட்டது. அன்றே அவள் என் தங்கை ஆனாள்.

''பிறகு சம்பந்தமும் அவளும் சென்னைக்குச் சென்று விட்டார்கள். ஒருவருக்கொருவர் கடித மூலம் கூடத் தொடர்பு வேண்டாம் என்று மறுத்ததும் அவள் தான். தொடர்பு இருந்தால் திலகத்தின் மனம் சஞ்சலப்படும் என்று உணர்ந்து மறுத்திருக்கிறாள்...''

''இவ்வளவுக்கும் மேல் அத்தை உங்களை எப்படி மாமா மணந்து கொண்டார்கள்? நானாயிருந்தால் முகத்தில் கூடத் திரும்ப விழிக்க மாட்டேன்'' என்றாள் லாவண்யா ரோசத்துடன்.

''அதுதானே கண்ணம்மா உன் அத்தையின் சிறப்பு. வீட்டுப் பெரியவர்கள் எவ்வளவோ சொல்லியும்கூட அவள் வேறு யாரையும் மணக்கச் சம்மதிக்கவில்லை. அவள் பெயரே திலகவதி ஆயிற்றே. ''எனக்குக் கணவர் என்று ஒருவர் அமைவது என்றால் அவர் இவர்தான் என்று'' ஒரே உறுதியில் நின்றுவிட்டாள்'' என்று பெருமையடித்தார் சிவநாதர்.

லாவண்யா ஆச்சர்யத்துடன் திலகவதியைப் பார்த்தாள். அவரது முகம் இந்த நேரத்திலும் நாணச் சிவப்பைப் பூசிக் கொண்டது.

''ஆனாலும் நீங்கள் மாமாவிடம் முழு நம்பிக்கை வைக்க வில்லையே அத்தை. மனம் உழன்று கொண்டே இருந்திருப்பீர்கள் போலத் தெரிகிறதே'' என்றாள் லாவண்யா.

''ஆமாம்'' என்று ஒத்துக்கொண்டார் திலகவதி. ''ஆனால் உன் மாமா இன்று சொன்னது ஒன்றுகூட என்னிடம் அப்போது சொல்லவில்லை தெரியுமா? வெறு மனே ''மன்னித்துவிடு'' என்று முடித்துவிட்டார். மற்ற கதை எனக்கு எப்படித் தெரியும்? வேறு ஒருத்தியை மனதில் வைத்து வேண்டா வெறுப்பாக என்னை மணந் தார் என்று எண்ணிக் கொண்டே இருந்தேன். அக்கா எவ்வளவோ எனக்கு புத்தி கூறுவார். ஏறினால் தானே? ஆனால் அருண் மட்டும் என் பக்கம். நிச்சயம் நின்ற நாளில் அவன் ஆறு வயதுப் பையன். என்னிடமே ஒட்டிக்கொண்டு அலைவான். அன்று நான் அழுததைப் பார்த்துக் கொண்டே இருந்தானா? உன் அம்மாவின் பெயரே அவனுக்கு வெறுப்பாகிப் போயிற்று. நீறுபூத்த நெருப்பாக அந்த வெறுப்பு அப்படியே இருந்திருக்கிறது. நீ வருகிறாய் என்பதில் அவனுக்குப் பிரியமில்லை... ஆமாம், உங்கள் இருவருக்கும் இப்போது என்ன தகராறு லாவண்யா?''

சற்று நேரம் பேசவில்லை லாவண்யா. பிறகு, ''அது இருக்கட்டும் அத்தை. நீங்கள் என்னைத் தவறாக எண் ணும்படி ஆயிற்றே. அதை மட்டும் விளக்கிச் சொல்லி விடுகிறேன்'' என்று தொடங்கினாள் லாவண்யா?''

''பரவாயில்லை லாவண்யா. இப்போது நீ எதுவும் சொல்லாவிட்டாலும் எனக்கு உன்மீது முழு நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கையால் நடந்ததை என்னால் ஊகிக்கவும் முடிகிறது'' என்றார் திலகவதி.

''அது என்ன புதுக்கதை?'' என்று வினவினார் சிவநாதர். ''சொல்லிவிடு லாவண்யா. பிறகு அது வேறு ஏதாவதாக விசுவரூபம் எடுத்துவிடும்'' என்றார்.

லாவண்யா அந்தக் கதையைக் கூறினாள். கடைசி யாக பானு மணிவண்ணனின் அணைப்பில் இருந்ததை அவள் கூறவும் திலகவதியின் முகம் வியப்புடன் மலர்ந் தது.

''நான் கவனிக்கவில்லையே'' என்றார் ஆச்சரியத்து டன்.

''நீ தான் தாய் மாதிரியே மகள் என்று ஏதேதோ கதறுவதில் மும்முரமாக முனைந்திருந்தாயே?'' என்றார் சிவநாதர் கேலியாக.

''ஆமாம்'' என்று வருந்தினார் திலகவதி. ''எனக்கு வாழ்வு கொடுத்தவள் செந்திரு. என் மகளின் வாழ்வைக் காத்தவள் அவளுடைய மகள். அந்த இருவரையுமே கடுமையாகப் பேசி விட்டேன். என்னை மன்னித்துவிடு லாவண்யா'' என்றார்.

''அப்படியெல்லாம் பேசாதீர்கள், அத்தை'' என்று அவரது கைகளை மீண்டும் பற்றிக் கொண்டாள் லாவண்யா. ''உங்கள் பக்கத்தில் இருக்கும்போது எனக்கு அம்மா இல்லாத குறையே தெரியவில்லை'' என்றாள் கண்களில் நீர்மல்க.

''என் கண்ணே, எனக்கும் நீ பானுபோல ஒரு மகள் தான். தெரியுமா? முன்புகூட உள்ளூர வேதனை இருந்த போதும்கூட உன்னை என்னால் வெறுக்க முடிய

வில்லை. பாசம் மட்டுமே பெருகியது'' என்று லாவண் யாவின் கண்ணீரைத் துடைத்தார் திலகவதி.

இந்த அன்பின் சங்கமத்தை மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது திடீரென்று கபாலி உள்ளே வந்தான். யாருடைய வரவேற்பையும் எதிர்பார்க்காமல் மடமட என்று திலகவதியின் கட்டில் அருகே வந்தான். ''அத்தை என்னை மன்னியுங்கள். மாமா நீங்களும் என்னை மன்னித்து விடுங்கள்'' என்று வெகு பவ்வியமாகக் கரம் குவித்தான். ''இப்போதுதான் வீட்டுக்குப் போனேன். நடந்ததை எல்லாம் பானு சொல்லக் கேட்டேன். அப்ப டியே பதறிப் போய் இங்கே ஓடி வந்தேன். உங்களுக்குப் பரவாயில்லையே அத்தை? நான் உடனே பானுவிடம் சென்று சொல்ல வேண்டும். அவள் அங்கே தனியே தவித்துக் கொண்டு இருக்கிறாள் பாவம்'' என்று துடித் தான்!

லாவண்யாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. ''தனியா கவா? மணிவண்ணனும் வினுவும் அவளோடு இருந்தார் களே'' என்றாள்!

''யார், லாவண்யாவா? நீயும் இங்கேதான் இருக்கி றாயா?'' என்றான் கபாலி, அவளை அப்போதுதான் பார்த்தவன்போல. மீண்டும் சிவநாதரிடம் திரும்பினான். ''நான் சென்றபோது பானு தனியாகத்தான் இருந்தாள். மாமா, வந்து...மணி ஏதோ சொன்னானாம். பானுவுக்குக் கோபம் வந்து அவனைப் போகச் சொல்லி விட்டாளாம். வினுவை நான் பார்க்கவே இல்லை. அவன் யாரும்

நண்பர்களுடன் பேசப் போயிருப்பான். நண்பர்கள் என்றால்தான் இந்தப் பையன்களுக்கு நேரம் போவதே தெரியாதே. மனம் நன்றாயில்லை. வெளியே போகிறேன் என்றானாம். நண்பர்களோடு பீச்சில் அமர்ந்து விட்டு நள்ளிரவுக்கு மேல் வந்தாலும் வருவான். பாவம், அத்தைக்கு உடல் நலம் இல்லை என்றதும் அப்படியே கலங்கிப் போயிருப்பான்... அவன் போனால் என்ன மாமா? பானுவுக்குத் துணையாக இருக்க நான் போகிறேன். இரவு எந்நேரமானாலும்.''

அறையினுள் இருந்த மூவரும் குழம்பிப் போனார்கள்! கடைசியாகத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு சிவநாதர் வினவினார். ''இன்று காலையில்...''

''காலையில் தானே மாமா? கடவுளே! நான் அதை எப்படி என்று சொல்லுவேன். மாமா ''நீங்கள் அதை பானுவிடம்தான் கேட்க வேண்டும். இப்போதுதான் அவளிடம் சொல்லிவிட்டு வந்தேன். அந்தக் கதையைக் கேட்டதும் அவள் அப்படியே அழுது விட்டாள். என் கைக்குட்டையாலேயே அவள் கண்ணீரை துடைத்து விட்டேன், இப்போது கூட அவளைக் கண்ணீருடன் தனியே விட்டு வந்தது எனக்குத் தாங்க முடியவில்லை. வீட்டிற்கு போய் அவளுக்கு ஆறுதலாகப் பேசலாம் என்றுதான் நினைக்கிறேன். அல்லது பெண் துணை வேண்டுமானால் லாவண்யா, நீ வேண்டுமானாலும் என்னோடு வரலாம். பானு மிகவும் பயந்து குழம்பிப் போயிருக்கிறாள். அல்லது நான் மட்டுமே பானுவிடம் போகட்டுமா? அவளும் என்னுடன் தனிமையை விரும்பக்கூடும்...''

''இல்லை. இல்லை'' என்று அவசரமாக மறுத்தாள் லாவண்யா. ''நானும் வருகிறேன். என்னை வீட்டில் விட்டு விடுங்கள். நானே பானுவுக்குத் துணையாக இருப்பேன். அத்தை நான்...பிறகு போன் செய்கிறேன். இங்கே டெலிபோன் இருக்கிறது அல்லவா?''

''கீழே இருக்கிறது'' என்றார் சிவநாதர்.

''சற்று நேரத்தில் அருண் வருவார். அவரையும் வீட்டுக்கு வரச் சொல்லுங்கள்'' என்று லாவண்யா கிளம்பினாள்.

''நீ அருணோடு வாயேன். நான் முதலில் பானுவிடம் போகிறேன்'' கபாலி பானுவுடன் தனித்திருக்க அக்கறை காட்டிப் பேசப்பேச லாவண்யாவுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது.

''இல்லை இல்லை. நான் உங்களுடனேயே வருகிறேன்'' என்று கபாலியுடன் சென்றாள்.

கபாலி என்னென்னவோ சொல்லுகிறானே என்று லாவண்யா குழம்பிப் போனாள். இவன் கூறுவது மெய்காக இருக்கக்கூடுமா? மணிவண்ணன் பானுவிடம் பரிவு காட்டிப் பேசிக் கொண்டு இருந்தாரே. அவளும் அதை விரும்பியது போலத் தோன்றியதே. இவன் மணிவண்ணன் ஏதோ சொல்ல பானு கோபப்பட்டதாகச் சொல்கிறானே. பானு காரணம் இல்லாமலேயே சினங்கொள்ளக் கூடியவள்தான். ஆனாலும்...எதுவானாலும் இருபது நிமிடங்களில் மிஞ்சிப் போனால் அரைமணி நேரத்தில் தெரிந்துவிடப் போகிறது. இதற்கு ஏன் மனம் பதைக்க வேண்டும்? பற்பல சமாதானங்கள் செய்து கொண்ட போதிலும் அவள் மனம் அமைதியடைய மறுத்தது.

கபாலியின் கார் கிளம்பி ஓடத் தொடங்கிய பிறகும் லாவண்யா அவனிடம் ஏதும் பேசவில்லை. அவனோடு என்ன பேசுவது? ஒன்றும் புரியவில்லை. நேற்று முன்தினம் அவளிடம் அவன் நடத்திய நாடகம் வேறு. காலைச் சம்பவங்கள் அதற்கு ஏற்ப நடந்தபோதும் இப்போது அவன் சிவநாதர் முன்னே நடந்துகொண்ட விதம் மாறானது. எதைப் பேசினாலும் வேறாக முடிந்து விடக் கூடாதே ன்று நினைத்தாள் அவள். அவனே முதலில் பேசட்டும். பிறகு நிலைமைக்குத் தக்கபடி சமாளித்து கொள்ளலாம் என்று முடிவு செய்தாள்.

''அப்பப்பா, உன்னிடம் தனியே பேசுவது என்றாள் எவ்வளவு சிரமப்பட வேண்டியிருக்கிறது?'' என்று கபாலியே தொடங்கினான்.

''என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று ஆவலுடன் வினவினாள் லாவண்யா.

அவன் ஒரு மாதிரியாகச் சிரித்தான்.

''அத்தை, மாமாவிடம் பொய்தானே சொன்னீர்கள்'' என்று ஆவலை அடக்க மாட்டாமல் கேட்டாள், அவள்.

''உன்னைக் கிளப்பிக் கொண்டுவர வேறு வழி இல்லை. உன்னிடம் நான் நிறைய பேச வேண்டியிருக்கிறது.''

''பேசலாமே, காரில் போகப் போகப் பேசலாமே'' என்று வலியச் சிரித்தாள் லாவண்யா.

''அப்படிப் பேசி முடிக்கிற விஷயமில்லை கண்ணே'' என்று கேலி பேசினான் கபாலி.

''பூ...பூங்காவுக்குப் போகலாமா?'' என்று நிமிர்ந்த லாவண்யா திடுக்கிட்டாள். ''கபாலி, கார் எங்கே போகிறது? இது மாமா வீட்டுக்குப் போகிற வழியில்லையே'' என்றாள் சற்றுக் கலவரத்துடன்.

''லாவண்யா கண்ணு, நாம் உன் மாமா வீட்டுக்கும் போகவில்லை; பூங்காவுக்கும் போகவில்லை.''

''பின்னே.''

''எனக்கு உன்னிடம் நிறைய பேச வேண்டியது இருக்கிறது. அதனால் யாருடைய குறுக்கீடும் இல்லாம் நாம் இருவரும் தனியாக இருந்து பேசக்கூடிய இடத்துக்கு உன்னை அழைத்துப் போகிறேன். அங்கே நாம் இரவு முழுவதும் இனிமையாகப் பேசலாம்.''

''இரவு முழுவதும்? என்ன விளையாடுகிறீர்கள்?'' என்று அதட்டினாள் லாவண்யா.

''விளையாட்டுதான். காதல் விளையாட்டு'' என்று வெறிபிடித்தவன் போலச் சிரித்தான் கபாலி.

## 20

கபாலியின் சிரிப்பும் பேச்சும் லாவண்யாவின் நெஞ்சில் திகிலைக் கிளப்பியது!

''என்ன உளறுகிறீர்கள் கபாலி?'' என்று அச்சத்தை மறைத்து வினவினாள், லாவண்யா.

''என்னை உளறுவாயனாக எண்ணிவிட்டாயா, லாவண்யா? இதுவரை உளறினேன்தான். ஆனால் விஷயம் புரிந்தவுடன் மாறிவிட்டேன். சரியாகச் சொல்லப்

போனால் சினிமா பாஷைப்படி நான் இப்போது ஒரு வில்லன். கதாநாயகியைக் கடத்திக்கொண்டு போகி றேன்.''

லாவண்யா திகைத்தாள். ''நீங்கள் மருத்துவ மனைக்கு எப்போது வந்தீர்கள்?'' என்று மெல்ல வினவி னாள்.

''புத்திசாலிதான். அதற்குள் கண்டுபிடித்து விட் டாயே. நீ என்னை இளிச்சவாயனாக்கிய கதையை விவரிக்கத் தொடங்கிய உடனேயே வந்துவிட்டேன். கேட்க எவ்வளவு ஆனந்தமாக இருந்தது தெரியுமா?'' என்று சிரித்தான் கபாலி.

சற்று நேரம் லாவண்யா பேச்சிழந்து போனாள். பிறகு சற்று இதமாகவே, ''கபாலி, சற்று யோசித்துப் பாருங்கள். பானு மணிவண்ணனைத்தான் விரும்புகி றாள். அவருக்கும் அப்படியேதான். அவளை நீங்கள் மணப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். பானு—மணியின் வாழ்வு மட்டும் அல்லாமல் உங்கள் வாழ்வும்தானே நாசமாகிவிடும். அதைத் தடுக்கத்தான் இவ்வாறு நாடக மாடினேன்'' என்றாள்.

''ஆகாகா! என்ன கரிசனம் என்மேல். இந்தக் கரிசனத்தை இன்னும் கொஞ்சம் காட்டேன், தேவி.''

''கபாலி...''

''நீ என்னை மணந்து கொள்.''

லாவண்யா வேகமாக யோசித்தாள். கடைக்கண் ணால் அவன் முகத்தைப் பார்த்தாள். ஏமாந்துவிட்ட ஆங்காரம் அவன் முகத்தில் கொதித்தது. வெறிகொண்ட

வன் போல அவன் காரைச் செலுத்திய வேகம் அவளுக்கு அச்சத்தை ஊட்டியது. அவனிடம் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். அவன் போக்கிலேயே விட்டுத் திருப்ப வேண்டும் என்று தீர்மானித்தாள். நெருப்பு என்றால் வாய் வெந்து விடுமா?

''அதற்கென்ன கபாலி, செய்துவிட்டால் போகிறது'' என்றாள் ஆறுதலாக.

''அதாவது என்னை மணந்து கொள்ளச் சம்மதம் என்கிறாய்.''

''உம்''

''உன்னை எப்படி நம்புவது?''

''நான்தான் சொல்லுகிறேனே.''

கபாலி சிரித்தான். ''நீ மாறமாட்டாய் என்று என்ன நிச்சயம்?''

''என்னை நம்புங்கள், கபாலி.''

''லாவண்யா, நான் சூடு கண்ட பூனை. இனியும் நீ சொல்வதையெல்லாம் நம்பிக் கொண்டு இருக்க நான் அவ்வளவு பெரிய முட்டாள் அல்ல. உன்னை நான் நம்ப வேண்டும் என்றால்...''

''என்ன செய்ய வேண்டும்?''

''என்ன வேண்டுமானாலும் செய்வாய். அப்படித் தானே கண்ணே.''

''வேறு ஒன்றும் செய்ய வேண்டாம். இன்று இரவே நீ என் மனைவியாகி விடு. நீ எந்த விதத்திலும் சொல் மாறமாட்டாய் என்று உறுதியை எனக்குத் தந்துவிடு.''

''கபாலி.''

''ஆமாம் கண்ணே. இன்று இரவில் அந்த உறுதியை நான் பெறப் போகிறேன். அது உனக்குச் சம்மதமானாலும் சரி, இல்லையென்றாலும் சரி, அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை'' என்றான் அவன் உறுதியாக.

லாவண்யா கல்லாய்ச் சமைந்தாள். அசட்டு கபாலி என்று நினைத்தாளே. அவன் இவ்வளவு தூரம் போவான் என்று யாரால் ஊகிக்க முடியும்? இவனிடம் இருந்து தப்பியாக வேண்டுமே!

''இப்போது எங்கே போகிறோம்?''

''இந்தப் பம்பாய்ப் பட்டணத்தில் தாராவி என்று ஓர் பகுதி உண்டு. அங்கே ஊருக்குத் தெரியாமல் எனக்கு ஓர் ஒளிவிடம் இருக்கிறது. உன் அருண், மணிவண்ணன் என்று ஒரு பயலாலும் கண்டுபிடிக்க முடியாத இடம். அங்கே இன்று நாம் இணையப் போகிறோம்...''

கதை கூறுபவன் போலக் கேலியாகச் சொல்லிக் கொண்டு போனவன் திடீர் என்று ''ஓ'' எனக் கத்தினான்.

காரணம், லாவண்யா சட்டெனக் கார் சாவியைத் திருப்பி இஞ்ஜினை நிறுத்தி விட்டாள்.

காரின் வேகம் குறைந்தது. அவன் மீண்டும் சாவியைத் திருப்பு முன் தன் பக்கக் கதவைத் திறந்து கொண்டு அவள் வெளியே குதித்தாள்.

ஓடிக்கொண்டு இருந்த காரிலிருந்து குதித்த வேகத்தில் முதலில் உருண்டு விழுந்தாள். சமாளித்துக் கொண்டு எழுந்து கண்மண் தெரியாமல் ஓடலானாள்.

அதற்குள் காரை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டுக் கபாலியும் அவளைத் துரத்தினான். என்னதான் துரத்தினாலும் காலைத் தட்டிவிடும் சேலையுடன் ஓர் ஆண்மகனை விட ஒருத்தி எவ்வளவு ஓடிவிட முடியும்? அவன் பிடியை உதற முயன்று தோற்றாள். இனிமேல் தன் முயற்சியில் தப்ப இயலாது என்பதை உணர்ந்ததும் உதவி கோரிக் கத்தினாள். ஆனால் அதற்குள் கபாலியின் கரம் இடியென அவள் முகத்தில் இறங்கியது.

ஒரு வினாடி ஆயிரம் மின்னல்கள் அவள் கண்ணுக்குள் மின்னின. மறுகணம் துவண்டு விழுந்தாள். கொஞ்சமும் தாமதியாமல் அவளை இழுத்துச் சென்று காரினுள் தள்ளினான் கபாலி.

இதற்குள்ளாக லாவண்யாவின் குரல் கேட்டு அருகில் இருந்த அடுக்குமாடி வீட்டின் ஒன்றிரண்டு சன்னல்கள் திறந்தன. ஓரிரு கதவுகளும் திறந்தன. தன் வீட்டு வராந்தாவில் அமர்ந்திருந்த ஓர் இளைஞன் எழுந்து கூர்ந்து பார்த்தான். அவன் பார்த்தபோது லாவண்யாவை அரையும்குறையுமாகக் காரினுள் தள்ளிக் கொண்டிருந்தான் கபாலி.

லாவண்யாவின் முகத்தைக் கண்ட அந்தப் பையன், வியப்பில் ஆழ்ந்தான். வேகமாகக் கீழே இறங்கி ஓடினான். தன் ஸ்கூட்டரை உதைத்துக் கிளப்பிக் கொண்டு கபாலியின் காரைத் தொடர்ந்தான். சற்று தொடர்ந்து சென்ற பின் கார் முன்னே சென்றுவிட இவன் ஒரு சிவப்பு

விளக்கில் மாட்டிக் கொண்டு நிற்க நேர்ந்தது. மீண்டும் பச்சை விளக்கு எரிந்ததும் வேகமாகச் சென்று பார்த் தான். முன்னே சென்ற காரின் அடையாளமே தெரிய வில்லை. கொஞ்ச நேரம் இங்கும் அங்கும் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பிச் சென்றான்.

லாவண்யாவிடம் கூறியபடி அருண் அரைமணி நேரத்தில் மருத்துவமனையை வந்தடையவில்லை. மேலும் அரைமணி நேரம் தாமதமாக அவன் அங்கே சென்றபோது அவனோடு இன்னொரு மனிதனும் சென் றார். அவரையும் அழைத்துக் கொண்டு அவன் திலகவதி படுத்திருந்த அறையை அடைந்தான். அறையினுள் சென் றதுமே அங்கே லாவண்யா இல்லாததைக் கவனித்தான். மனதிற்குள் கலக்கம் அடைந்தவனாக, ''லாவண்யா எங்கே சித்தப்பா'' என்று வினவினான்.

''அவள் நம் வீட்டிற்குச் சென்று விட்டாள். அது இருக்கட்டும். நீ அவளை அழைத்துச் செல்லவா வந் தாய்? இவர்...''

நெடிய மூச்சு ஒன்று அருணிடமிருந்து வெளியா யிற்று. ''சித்தப்பா நாம் அந்தப் பெண் லாவண்யாவிற்கு ஒருவகையில் பெரிய நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறோம்'' என்றான்.

''என்னப்பா சொல்லுகிறாய்?''

''இவர் ஒரு ரகசியப் போலீஸ் அதிகாரி. என் நண்பரும் கூட. கபாலிக்கு நம் பானுவைக் கொடுப்பது பற்றி இவருக்குத் தெரியும். இன்று கபாலியைப் பற்றி ஒரு தகவல் தெரிந்து என்னிடம் ஓடி வந்தார்...கபாலி நாம் நினைத்த மாதிரி மட்டும் இல்லை சித்தப்பா. ஏதோ

கொஞ்சம் கெட்ட பழக்கங்கள் இருக்கின்றன. பணத் தாசை, சினிமா மோகம் இருக்கிறது. திருமணமானால் இதெல்லாம் சீர் பட்டு விடும் என்று நினைந்தோமே. அவன் அப்படி திருந்தக் கூடியவனே அல்ல சித்தப்பா. அவன் முழுக்க முழுக்க கெட்டவன். அவன் செய்யாத அயோக்கியத் தனம் கொலை ஒன்றுதானாம். அதிலும் பெண் வழியில்...சொல்லவே அருவெருப்பாக இருக்கி றது...''

''குடி கெட்டதே மகனே'' என்று வீறிட்டார் அவ்வ ளவு நேரமும் மவுனமாகக் கவனித்துக் கொண்டு இருந்த திலகவதி.

''ஏன் சித்தி, பானுதான் தப்பிவிட்டாளே'' என்றான் அருண் புரியாமல்.

''பானு இல்லையடா என் தங்கம், லாவண்யா.''

''லாவண்யாவுக்கு என்ன சித்தி?'' என்று பதறி எழுந்தான் அருண்.

''அவள் அவனிடம் மாட்டிக் கொண்டாளே. அய்யோ, பாவிகள். நாங்களே அவனோடு அனுபபி வைத்தோமே'' என்று கதறினார் திலகவதி.

''சும்மா பதறாதே திலகம். அவன் லாவண்யாவை நம் வீட்டுக்குத் தானே அழைத்துப் போகிறான்'' என்று மனைவியை அமைதிப்படுத்த முயன்றார் சிவநாதர்.

''இல்லை இல்லை. உங்களுக்குப் புரியவில்லையே. அவன் பேசிய பேச்சுக்களை எண்ணிப் பாருங்கள். என்ன எப்படி என்று நாம் குழம்பிப் போகவில்லையா? அவன் முன்னேயே வந்திருக்கிறான். பானுவைக்

காப்பாற்றுவதற்காக அவனிடம் தான் நாடகமாடியதை லாவண்யா நம்மிடம் விவரித்ததையும் கேட்டிருக்கிறான். அதனால் பானுவைமுன் நிறுத்தி நம்மைக் குழப்பிவிட்டு அவன் லாவண்யாவைத் தட்டிப் போய்விட்டான். பானு மீண்டும் மாட்டிவிடக் கூடாதே என்ற அச்சத்தை நமக்கு உண்டாக்கி லாவண்யாவைத் தன் வலையில் விழ வைத்து விட்டான். அய்யோ, அவன் கிளம்பி அரைமணி நேரத்துக்கு மேலாக இருக்குமே. என் செல்வம் அவனி டம் இப்போது என்ன பாடுபடுகிறாளோ?'' என்று விம்மி அழத் தொடங்கினார் திலகவதி.

சிவநாதருக்கும் முகத்தில் ஈயாடவில்லை. ''என்ன சித்தப்பா?'' என்று அவரை உலுக்கி எடுத்தான் அருண்.

''திலகம் சொல்வது மெய்தான் அருண். லாவண் யாவை வீட்டுக்குக் கூட்டிப் போவதாகச் சொல்லித்தான் கபாலி அழைத்துச் சென்றான். ஆனால் அவனது பேச் சையும் சில விஷயங்களையும் யோசித்துப் பார்த்தால் அவன் அவளைக் கடத்திப் போயிருப்பதாகத்தான் தெரி கிறது'' என்று கவலையுடன் கூறினார் அவர்.

அப்போது ஒரு நர்ஸ் உள்ளே வந்தார். சிவநாதரி டம் ''உங்களுக்கு டெலிபோன் வந்திருக்கிறது. உங்கள் மகனாம்'' என்றார். சிவநாதர் எழுந்து சென்றார்.

அருண் ஒன்றையும் கவனிக்கவில்லை, இடி விழுந் தாற் போல அப்படியே நின்றான்.

''அருண்! இப்படி நிற்காதேடா, ஏதாவது செய்ய டா!'' என்று கெஞ்சினார் திலகவதி.

''என்ன செய்வது சித்தி, தன் வீட்டுக்கு லாவண்யா வைக் கடத்திச் செல்லும் அளவுக்குக் கபாலி முட்டாள் அல்ல. வேறே எங்கே என்று இந்தப் பம்பாயில் தேடு வது?'' நம்பிக்கையற்றுப் பேசினான் அருண். பிறகு அருகில் இருந்த அதிகாரியிடம் திரும்பினான்.''மிஸ்டர் ஜான், கபாலி எங்கே போயிருக்கக் கூடும் என்று உங்களுக்கு ஏதேனும் குறிப்பாகத் தெரியுமா...?'' என்று வினவினான்.

அவர் பரிதாபத்துடன் அவனைப் பார்த்தார். ''பம் பாயில் எந்தப் பகுதி என்று தெரிந்தாலும் கொஞ்சம் முயற்சி செய்து பார்க்கலாம் அருண். ஆனால் ஒன்றும் தெரியாமல் என்ன செய்ய முடியும்? எதற்கும் அவனது இருப்பிடத்துக்கு...''

அதற்குள் சிவநாதர் அச்சமும் பரபரப்புமாக ஓடிவந் தார். ''திலகம் நீ சொன்னது சரிதான் திலகம். கபாலி அவளைக் கடத்தித்தான் சென்றிருக்கிறான். லாவண்யா புத்திசாலி அல்லவா? பாதியிலே கண்டுவிட்டாள். எப்ப டியோ காரை நிறுத்தச் செய்து இறங்கி ஓடியிருக்கிறாள். அந்தப் பேயன் அவள் முகத்தில் அறைந்தானாம். அவள் மயங்கி விழவும் தூக்கிக் காரில் போட்டுக் கொண்டு போய் விட்டானாம். இதை எல்லாம் வினுவின் நண்பன் ஒருவன்—அவன் லாவண்யாவின் படங்களை ஆல்பத் தில் பார்த்தவனாம்—கண்டானாம். ஸ்கூட்டரில் பின் தொடர்ந்திருக்கிறான். ஆனால் தாராவியில் ஓர் இடத்தில் காரைத் தவற விட்டு விட்டானாம். தன்னால் ஆனமட் டும் தேடி விட்டு வினுவுக்கு டெலிபோன் செய்தானாம்.

இப்போது பானுவும் வினுவும் அந்த நண்பனிடம் போகி றார்களாம்'' என்றார் பதற்றத்துடன்.

''தாராவியா? தாராவியில் தேடுவது போலீசுக்குக் கூடக் கடினமாயிற்றே சித்தப்பா'' என்று மேலும் இடிந்து போனான் அருண்.

''அந்தப் பாவி என் கண்மணியின் கன்னத்தில் அறைந்தானாமா? பூப்போலக் கன்னம் ஆயிற்றே. அய்யோ அந்த வெறியனிடம் என் தங்கம் என்ன பாடுபடுகிறாளோ? எல்லாம் என்னால்—இந்தப் பாவியி னால் வந்தது. அவளிடம் கொஞ்சம் நம்பிக்கை வைத்து அமைதியாக விசாரித்திருந்தேனேயானால் இதெல்லாம் நடந்து இருக்குமா? அய்யோ லாவண்யா'' என்று முகத்தை மூடிக்கொண்டு புலம்பினார் திலகவதி.

அந்த நேரத்தில் லாவண்யா கபாலியிடம் படாத பாடு பட்டுக் கொண்டு இருந்தாள்!

## 21

மஞ்சள் அரளிப்பழம் பார்த்திருக்கிறீர்களா? மேலே பளபளவென்று மிருதுவாக அழகாக இருக்கும். உள் ளேயோ உண்டால் உயிரை வாங்கிவிடக் கூடிய கொட்டை இருக்கும். கபாலியும் அதே ரகம்தான்.

ஒய்யாரக் கொண்டையிலே தாழம் பூவாம், உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும் என்பார்கள். கபாலியின் குடும்பம், இந்த வகையைச் சேர்ந்தது! நோயாளியாக இருந்து மாண்ட தாய். வெளி இன்பத்தில் லயித்திருந்த தந்தை. இருவருக்கும் இடையில், கட்டுப்பாடோ

கவனிப்போ இல்லாமல் வளர்ந்த மூன்று பிள்ளைகளில் கபாலி கடைசி. இவனுக்கு மூத்தவர்களின் நல்ல காலம் — திருமணம் ஆனதும் அவரவர் குடுமியை மனைவி பிடித்துக் கொண்டாள். இவன்... இவனுக்கும் நல்ல மனைவி வாய்த்திருந்தால் அதுவும் இன்னமும் சிறு வயதிலேயே வாய்த்திருந்தால் உருப்பட்டிருப்பானோ என்னவோ? இப்போது எட்டிக் காயாக எருக்கம் பழமாகிப் போய்விட்டிருந்தான். குடி, கூத்தி என்று மனம் போனபடி செலவு செய்பவன்! அவனது செலவுகளுக்குப் பெருமளவு பணம் தேவைப்பட்டது. அதற்காக வேறு சில வழிகளிலும் இறங்கியிருந்தான். அது போகவும் பணம் தேவைப்பட்டது. பணத்துக்காக போலி வேஷம் போட்டான்! காசைக் கண்ட இடத்தில் எவ்வாறேனும் கைப்பற்ற அவன் தயங்கியது இல்லை.

பானுவுக்கு வரவிருந்த பணத்தைப் பற்றித் தற்செயலாக அவனுக்குத் தெரிய வந்தது. உடனே ஒரு திட்டம் போட்டான். நிறைவேற்றவும் முனைந்தான். இப்படியும் அப்படியுமாகச் சிவநாதருடைய குடும்பத்திற்குள் ஆமை போல நுழைந்து கொண்டான். எப்படியாவது பானுவை மயக்கி மணந்து கொண்டால் இந்த ஓர் இலட்சமும் கிடைக்கும். சிவநாதரும் தன் பெண்ணுக்குத் தாராளமாகவே செய்வார். இரண்டும் சேர்ந்து தன் திருவிளையாடல்களுக்குப் போதுமானதாக இருக்கும் என்று கணக்கிட்டான். பானுவின் சினிமாப் பைத்தியம் அவனுக்கு உறுதுணையாக இருந்தது.

மணிவண்ணன் மட்டும் இல்லாதிருந்தால் முன்பே கபாலி பானுவுடைய கணவனாகியிருப்பான். பானுவின்

மனத்தட்டு மணியின் பக்கமும் அடிக்கடி தாழ்ந்தது. இந்த நிலமையில்தான் லாவண்யா வந்து சேர்ந்தாள். அவளது முழுமையான அழகும் ''பளிச்'' சென்ற சிரிப்பும் அவனை வெகுவாகக் கவர்ந்தன. ஆனால் பணம்? இரண்டுக்கும் இடையில் கபாலி சற்றுத் தடுமாறினான். கடைசியாக லாவண்யாவின் பணம் பானுவைவிடப் பல மடங்கு என்பதை அறிந்ததும் அயர்ந்து போனான். சற்று ஏமாந்து போனோமே என்று ஆற்றாமை மிகுந்தது. அதோடு பானுவை மணந்தால் ஓரளவுக்கேனும் அருண், சிவநாதர் முதலியோரின் குறுக்கீடுகள் இருக்கும். இவளா னால் அப்படியில்லை. அவ்வளவு பணத்துக்கும் அவனே ராஜா, அவளது அழகுக்கும் சேர்த்துதான்!

இந்த ஆசையில்தான் லாவண்யா சொன்னபடி பானுவை மறுத்துக் கடிதம் எழுதினான். ஆனால் அதை எழுதிய பிறகு அவனுக்கு மன நிம்மதி இல்லை. உள்ளூர லாவண்யா தன்னை ஏமாற்றுகிறாளோ என்று சந்தேகம் உண்டாயிற்று. அவன் வீசிய பணத்துக்காக வந்த பெண் கள் அவனை அழகன் என்று ''ஐஸ்'' வைத்ததில் அவன் தன்னை அழகனாகவே எண்ணியிருந்தான். அந்தப் புகழ்ச்சியில் மயங்கித்தான் அவன் எப்படி எப்படியோ ஆடை அணிந்தான். தன் நடை உடைகளை லாவண்யா நகையாடுகிறாள் என்ற எண்ணம் அவனுக்கு உண்டு. அது இப்போது உறுத்தத் தொடங்கியது. கடிதத்தைத் தன் வேலையாளிடமே கொடுத்து அனுப்பினான். மேற் கொண்டு நடப்பதையும் கவனித்து வருமாறு பணித்தான். பெருமாள் வந்து கூறிய சேதிகளைக் கேட்டபின் அவ னது நிம்மதி அடியோடு போயிற்று. லாவண்யா அவனை ஏமாற்றிவிட்டால், இரண்டு வழியும் அடைப்பட்டுப்

போய்விடுமே? அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதையாக அல்லவா போய்விடும். லாவண்யாவைத் தனியே சந்தித்து விஷயத்தை உறுதி செய்து கொள்ளத் துடித்தான். அங்கே சுற்றினான்.

ஆனால் லாவண்யா பூங்காவை மறந்து போனாள். கடைசியாக அவளை அருணுடன் பார்த்ததும் திகைத் தான். அவர்களைப் பின் தொடர்ந்தான். அருண் லாவண் யாவை விட்டு விட்டுச் செல்வதைக் கண்டான். மீண்டும் லாவண்யாவைத் தொடர்ந்தான். அறையில் நடந்த பேச்சை ஒட்டுக் கேட்டான். அவனுக்கு அடி வயிற்றில் தீப்பிடித்து எரிந்தது. வஞ்சகி, ராட்சசீ! இவளை சும்மா விடுவதா? என்று வெகுண்டான்.

கிராமப் புறங்களில் சிறு குட்டைகளில் நீர் வற்றுகை யில் மீன் பிடிப்பார்கள். முதலில் குட்டையை நன்கு கலக்கி விடுவார்கள். பிறகு அங்குமிங்கும் கலைந்து ஓடும் மீன்களை எளிதாகப் பிடித்துவிடுவார்கள்.

அதே தந்திரத்தைக் கபாலியும் கையாண்டான். அதை இதைச் சொல்லி எல்லாரையும் ஒரு கலக்கு கலக்கினான். கபாலியின் கபடத்தை அறிந்திராத மூவ ரும் கலங்கிப் போயினர். பலன்? குட்டை மீனைப் போல லாவண்யா அவனிடம் சிக்கிக் கொண்டாள்.

தாராவியில் ஒரு வீட்டின் முன்னே கார் நின்றபோது தான் லாவண்யாவுக்கு நினைவு திரும்பியது. ''கபாலி'' என்று ஒரு கணம் திகைத்தபோதே எல்லாம் நினைவு வந்தது. முகத்தில் கலவரம் பரவியது.

கபாலி எக்காளத்துடன் நகைத்தான். ''உம், இறங்கு'' என்றான் அதிகாரமாக.

''கபாலி, நான் சொல்வதைக் கேளுங்கள்'' என்று நயமாகப் பேசிப் பார்த்தாள் லாவண்யா

''நாளை கேட்கிறேன் கண்ணே. இன்று மட்டும்.. '' என்று மட்டரகமாகக் கண்ணடித்தான் கபாலி.

வெறுப்புடன் முகத்தைத் திருப்பினாள் லாவண்யா. அவன் அலட்சியமாகச் சிரித்தான். வீட்டின்புறம் திரும்பி ''லோலூ'' என்று விளித்தான். உள்ளிருந்து கட்டைத் தடியன் ஒருவனும், ஒரு பெரிய உடம்புக்காரி ஒருத்தியும் வந்தனர்.

''இவளை இழுத்துப்போய் உள்ளே அந்த அறையில் தள்ளுங்கள்'' என்று உத்தரவிட்டான் கபாலி.

லாவண்யாவுக்கு சப்த நாடியும் ஒடுங்கிப் போயிற்று. சட்டெனை காரை விட்டு இறங்கி ஓட முயன்றாள். ஆனால் அந்தப் பெண்அவளை ஒரு கையால் பிடித்துத் தூக்கிக் கொண்டு உள்ளே சென்றாள்.

லாவண்யாவின் கூச்சலையும், அவள் திமிறத் திமிற ஒரு குண்டம்மா அவளை இழுத்து செல்வதையும் அந்த தெருவில் சென்ற ஓரிருவர் திரும்பிப் பார்த்தனர். ஆனால் அவர்களில் யாரும் விரலைக்கூட அசைக்கக் காணோம். லாவண்யாவுக்கு ஒரே அதிர்ச்சி. பெண்ணை கண்ணாகக் காப்பது எல்லாம் பழைய கற்கால சங்கதி ஆகிப் போயிற்றே. திமிறித் திரும்பும்போது அந்த முரடன் கையில் உருவிய கத்தியை சாதாரணமாகப் பதம் பார்ப்பது தெரிந்தது.

தன் முயற்சியால் அவளிடம் முரண்டு பிடித்துப் பார்த்தாள், லாவண்யா. ஊகூம். ஒன்றும் நடக்கவில்லை.

ஆட்டுக் குட்டியைப் போல அவளைத் தூக்கிச் சென்று உள்ளே ஓர் அறையில் தொப்பென்று போட்டு விட்டுப் போனாள் அவள். கபாலி அவள் பின்னாலேயே வந் தான். அந்தப் பெண் சென்றதும் கதவை உட்புறமாகத் தாளிட்டு விட்டு லாவண்யாவிடம் திரும்பினான்.

லாவண்யா புத்திசாலிதான், கெட்டிக்காரிதான், படிப்பில் நல்ல மார்க்குகள் வாங்கினாள். விளையாட்டில் முன்னணியில் நின்றாள். சாமர்த்தியசாலியும் கூடத்தான். குறும்பாகப் பேசி யாரையும் சிரிக்க வைப்பாள். ஆனால் இந்த மாதிரி ஒரு நிலையை அவள் கற்பனை கூடச் செய்து பார்த்ததில்லை. எனவே நிஜத்தில் இது நடக்கவும் தன் திறமைகள் எல்லாம் மறந்து மறையச் செயலிழந்து பேந்தப் பேந்த விழித்தாள்.

லாவண்யா விழிப்பதைக் கண்டு கபாலிக்குச் சிரிப்பு வெடித்துக் கொண்டு விழுந்து விழுந்து சிரித்தான். அவன் சிரிப்பதைச் சொல்லொண்ணாத திகிலுடன் பார்த் துக் கொண்டு அசைவற்று நின்றாள், லாவண்யா.

சிரித்துச் சிரித்துத் தானாகவே ஓய்ந்தான் கபாலி. சிரிப்பின் மிகுதியால் கண்களில் வழிந்த நீரைத் துடைத் தான். ''என்ன லாவண்யா. அப்படி 'பே' என்று விழிக்கி றாயே. என்னை நீ பார்த்ததே இல்லையா?'' என்று குத்தலாகக் கேட்டான்.

லாவண்யாவின் கண்கள் இன்னமும் விரிந்தனவே தவிர அவளுக்குச் சொல்லும் வரவில்லை; செயலும் வரவில்லை.

''அடி என் கண்ணாட்டி. என்னைக் கண்ணாலேயே விழுங்கிவிடுவாய்போல இருக்கிறதே. ம்ம்... இந்த

நேரத்தில் சினிமாவில் என்ன வசனம் பேசுவான்?... ஆகா, வந்து விட்டது. கண்ணே, லாவண்யா, உன் கண்ணாகிய விரிந்த கடலில் நான் விழுந்துவிட்டேன்... அடச்சீ பானுவுக்கு அல்லவா இந்த சினிமா வசனம் வேண்டும். உனக்கு செயல்தானே தேவை'' என்று அவளை நோக்கி இரண்டு எட்டு எடுத்து வைத்தான்.

ஆனால் லாவண்யாவின் பயந்த விழிகளில், பரிசுத் தமான தோற்றத்தில் எதைக் கண்டானோ? சற்றுத் தயங்கி நின்றான். பிறகு கதவைத் திறந்து மராத்தியில் ஏதோ சொன்னான். சில நிமிடங்களில் அவன் கைகளில் ஒரு விஸ்கி பாட்டிலும் ஒரு மதுக்கிண்ணமும் வந்து சேர்ந்தது. மீண்டும் கதவைத் தாளிட்டுவிட்டு சோபாவில் அமர்ந் தான். மதுவைக் கோப்பையில் ஊற்றி ஒரு தரம் பருகி னான். மீண்டும் ஊற்றிக் கொண்டு லாவண்யாவைப் பார்த்தான். அட்டகாசச் சிரிப்பு மீண்டும் வெடித்தது.

''லாவண்யாக் கண்ணு, நின்று கொண்டே இருக்கி றாயே, கால் வலிக்குமே, இங்கே என் பக்கத்தில் உட்கார். உட்கார்ந்து நீயும் ஒரு ''பெக்'' அடித்தாயானால் இந்த நேர்மை, பயம் எல்லாம் ஓடிவிடும். இந்த உலகமே இந்திர லோகமாகிவிடும். வாடா கண்ணா'' என்று மீண்டும் குடித்தான். மீண்டும் ஒரு தரம் கிண்ணத்தை நிரப்பிக்கொண்டு எழுந்து லாவண்யாவை நெருங்கி னான்.

## 22

**லா**வண்யாவுக்கு அன்றொரு நாள் மதுக் கோப் பையை நீட்டிய இன்னொருவனது நினைவு வந்தது.

கபாலியைப் பிடித்தால் இதையும் பிடிக்க வேண்டும் என்றானே. அவன் சொல்லைக் கேட்டு ஒதுங்கியிருந் தால்... அவளது நெஞ்சில் தீபோல வேதனை எழுந்தது. கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விசித்தாள்.

அவளது அழுகை அவனிடம் மீண்டும் எக்களிப் பான நகையையே கிளப்பியது. "அழுகிறாயா? பாவம் பானுவையும் மீட்டுக் கொண்டு என்னை இளிச்ச வாய னாக்கி விட்டு நீயும் எனக்குத் தண்ணீர் காட்டிவிட்டுப் போய்விடலாம் என்று நினைத்தாய். "அந்தோ பரிதாபம்" நீயே மாட்டிக் கொண்டாய். என் அதிருஷ் டம், பச்சைக் கிளிக்கு வைத்த வலையில் பஞ்சவர்ணக் கிளி சிக்கிக் கொண்டது. கிளி அழுவதைப் பார்த்தால் பரிதாபமாகத்தான் இருக்கிறது. ஆனால் பரிதாபம் பார்த் தால் காரியம் நடக்குமா? ஆட்டுக் குட்டிக்குப் பரிதாபம் காட்டினால் கசாப்புக் கடைக்காரன் பிழைப்பது எப்படி? ஆகவே நான் சொல்லுகிறேன், கேள். இந்த உலகத்தில் யாருக்கும் கருணையே காட்டக் கூடாது" என்று வேதம் ஓதினான் அந்தச் சைத்தான்.

அவன் சொல்வது மெய்தானே. மணிவண்ணனது வாழ்க்கை, பானுவின் எதிர்காலம் என்று பார்க்கப் போய் தானே லாவண்யாவுக்கு இந்த வேதனை! யாரும் எக்கே டும் கெடட்டும் என்று ஒதுங்கிப் போயிருந்தால் இப் போது தொல்லை இல்லாமல் நிம்மதியாக இருந்திருப் பாளே. அடக்க மாட்டாமல் விசும்பினாள் லாவண்யா.

தன் அழுகையால் எந்த விதமான பலனும் இல்லை; மாறாக அதில் ஒருவிதமான கொடூரமான திருப்தியை யும் எக்களிப்பையும் அவன் அடைகிறான் என்பதைக்

கண்ட லாவண்யா அழுகையை அடக்கினாள். கண்களைத் துடைத்துக்கொண்டு மெல்ல முகத்தைத் தூக்கி ''கபாலி'' என்று அழைத்தாள்.

''சொல்லடி என் செல்லக்கண்ணு'' என்று இளிப்புடன் விரைந்து அவள் அருகில் வந்தான் கபாலி. மதுநெடி மூக்கைத் துளைத்தது.

அருவெறுப்புத் தாளாமல் பின்னடைந்தாள் லாவண்யா.

அவள் முகத்தில் காணப்பட்ட வெறுப்பைக் கண்டதும் மீண்டும் அறையே அதிரும்படி இடி இடியென நகைத்தான் கபாலி. ''அடடே, அவ்வளவு அசிங்கமாக இருக்கிறதா குட்டி? என்ன பண்ணுவது? போன பிறவியில் என்ன பாவம் செய்தாயோ? இனி வாழ்க்கை பூராவும் இதைச் சகித்துத்தான் ஆக வேண்டும். அந்தோ பரிதாபம்'' என்று பரிதாபப் படுவதுபோல நடித்தான் அவன்.

அவனிடம் என்னதான் பேசுவது? அவன் அடிபட்ட புலியாக இருந்தான். ஏமாற்றப் பார்த்தாளே என்ற ஆத்திரம், பணத்தின்மேல் உள்ள மோகம், குடிவெறி இவையெல்லாம் மீறி அவள் பேச்சு அவனிடம் எங்கே எடுபடும்? வேண்டுமென்றே அவனது ஆசையைக் கிளப்பிய நேரங்களை எண்ணித் தன்னையே நொந்து கொண்டாள் லாவண்யா.

விளையாட்டாக நினைத்தேனே, அம்மா விலகு விலகு என்பாரே அதை மறந்து தாய் சொல் தட்டி மடத்தனமாக நடந்து கொண்டேனே என்று வேதனைப் பட்டாள்.

மீதி இருந்த மதுவை வாயில் ஊற்றிக் கொண்டு மதுக் கிண்ணத்தை விட்டெறிந்தான் கபாலி.

''வீணாக்கிய நேரம் போதும் லாவண்யா'' என்று அவளை நெருங்கினான்.

லாவண்யா அச்சத்துடன் பின்னடைந்தாள். ஆனால் எவ்வளவு நேரம்தான் ஒருவர் பின்னடைய இயலும்? தன் பின்னே சுவர் தட்டியதும் திகைத்து நின்றாள்.

''ஆகா'' எனச் சிரித்துப் பேயனைப்போல முழக்க மிட்டு வந்தான் கபாலி.

எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை எல்லாம் அடியோடு அழிய சுவரில் சாய்ந்து தொய்ந்தாள் லாவண்யா.

அவள் நிராசையுடன் சுவரில் சாயக் கண்டதும் அவனுக்கு இன்னமும் எக்காளமாக இருந்தது. ''அருண் என்றால் இப்படிப் பின்னடைவாயா? ஓடியே வந்து உடம்பில் ஒட்டிக் கொண்டு இருக்க மாட்டாயா?'' என்று மேலும் ரசக் குறைவாகப் பேசலானான்.

அருண்! அருண்!! லாவண்யா விழிகளை இறுக மூடித் திறந்தாள். அருண் அவளை விரும்புகிறானோ இல்லையோ, அவனை நினைத்த அவளது மேனியில் இன்னொருவன் கை படலாமா? பட விடலாமா? உயிரைக் கொடுத்தேனும் அதைத் தடுக்க வேண்டாமா? சட்டென ஓர் அரசிபோல நிமிர்ந்தாள்.

''கபாலி, உனக்கு ஒரே ஒரு வார்த்தை! மரியாதையாக என்னை வெளியே அனுப்பி விடு'' என்றாள் கம்பீரமாக.

''ஹே, மான்குட்டி சிங்கத்துக்கு உத்திரவு போடு கிறதே!'' என்றான் அவன் கிண்டலாக

''சிங்கத்துக்கு அல்ல. சிறு நரிக்கு. கட்டளை இடுவ தும் மான்குட்டி அல்ல. மானத்தை உயிரினும் பெரிதாகக் கருதும் பெண்புலி'' என்று தன் கூர்மையான நகங்களை விரித்துக் காட்டினாள். காட்டியதோடு நிற்கவில்லை. சட்டெனக் கையை நீட்டி கபாலியின் கன்னத்தில் அந்த நகங்களால் அழுந்தக் கீறிவிட்டாள்.

''ஆ''வென்று அலறினான் கபாலி. இரத்தம் கசிந்த கன்னத்தைக் கையால் பொத்திக் கொண்டு இரண்டு எட்டுகள் பின்னடைந்தான்.

அதைப் பயன்படுத்திக் கொண்டு மின்னலைப் போலக் கதவை நோக்கிப் பாய்ந்தாள் லாவண்யா. அவசர அவசரமாக உட்புறத் தாளை நீக்கினாள். கதவை உள்ளே இழுத்துத் திறக்க முயற்சித்தாள். ஆனால் திறக்க முடியவில்லை. கதவு வெளிப்புறமாகவும் தாளிடப்பட்டு இருந்தது. மீண்டும் நெஞ்சில் நிராசை பொங்கி எழ லாவண்யா துவண்டு போனாள்.

பின்புறமிருந்து கபாலியின் கோர நகை மீண்டும் ஒலித்தது.

அருணின் தோற்றத்தை மனதில் நிறுத்தினாள் லாவண்யா. சிதறிய தைரியத்தை கூட்டினாள். இனி மீதமிருப்பது ஒரே ஒரு வழிதான். அருண் ஆஸ்பத்திரி யில் இருந்து சிவநாதரின் வீட்டுக்குச் சென்று அங்கே லாவண்யா வந்து சேரவில்லை என்பதைக் காண வேண் டும். பிறகு அவளைத் தேடி இங்கே வந்து மீட்க

வேண்டும். அதுவரை அவள் இந்த மிருகத்துடன் போராடித் தாக்குப் பிடிக்க வேண்டும்.

அருண் எப்போது போவான்? போனாலும் லாவண்யாவை ஒரு பொருட்டாக எண்ணித் தேடி வருவானா? அப்படி வந்தாலும் இந்த இடத்தைக் கண்டு பிடிப்பானா? கண்டுபிடித்தாலும் கபாலியின் அந்த முரடனையும் குண்டுப் பெண்ணையும் வென்று அவளை மீட்பானா? என்ற சந்தேகங்களை எல்லாம் பிடிவாதமாக ஒதுக்கினாள். அருண் வருவான்—அவளை மீட்பான். மீட்கும் வரை அவள் தன்னைக் காப்பாற்றியாக வேண்டும். இந்த முடிவுடன் லாவண்யா மெல்லத் திரும்பினாள்.

கபாலி மீண்டும் ஒரு கிண்ணம் மதுவை உள்ளே தள்ளிக் கொண்டிருந்தான். ஒருபுறக் கன்னம் சற்று தடித்து கோடு கோடாக ரத்தம் கசிய, உதட்டோரமாகச் சிவந்த மது வழிய அவனைப் பார்கையில் இரத்தப் பசி கொண்ட காட்டு மிருகம் போலத் தோன்றினான்.

லாவண்யா திரும்பியதும் கபாலியும் அவளைப் பார்த்தான். ஒரு விரலால் இரத்தம் கசியும் கன்னத்தைக் காட்டினான். ''இந்த இரத்தத்தை உன் உதடுகளால்தான் துடைத்தாக வேண்டும்'' என்று உதடுகளை நாக்கால் தடவினான். மறு கணம் வேங்கைபோல லாவண்யாவை நோக்கிப் பாய்ந்தான்.

பிறகு அங்கே ஒரு போர்க்களம் உருவாயிற்று. தற்காத்துக் கொள்ள சபதம் செய்து கொண்ட ஒரு பெண்ணும், அவளைப் பாழாக்கிவிடக் கங்கணம் கட்டி கொண்ட ஓர் ஆணும் போரிட்டனர். இருவருமே முழு

மூச்சுடன் போரிட்டனர். கபாலியிடம் வெறியும், ஆணின் பலமும் மிகுந்திருந்தது. ஆனால் லாவண்யாவிடம் பெண்மையின் உறுதியும், மூழ்குகிறவனின் கடைசிப் பலமும் இணைந்திருந்தன.

போராட்டத்தில் கொஞ்சம் களைத்ததும் கபாலி ஒரு ''பெக்'' விஸ்கி அடிப்பான்.

லாவண்யா தன் களைப்பை மாற்ற அருணின் பெயரை உச்சரிப்பாள்.

குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டுகிற மாதிரி ஓர் அறைக்குள் எவ்வளவு ஓட முடியும்? போராட முடியும்? லாவண்யா மெல்ல மெல்லச் சோர்ந்தாள்!

## 23

வினோதனுடைய நண்பன் செய்த உதவி மிகவும் பெரியதுதான். அவன் மூலம் கபாலியின் கார் தாராவிக்குச் செல்வதை அறிந்ததும் போலீஸ் அதிகாரி ஜான் விரைந்து செயல்பட்டார். கபாலியின் கார் நம்பரைச் சொல்லி யார் யாருக்கோ டெலிபோன் செய்து விசாரித்தார். சற்று நேரத்தில் முகத்தில் கொஞ்ச திருப்தியுடன் திரும்பி வந்தார்.

''தாராவியில் அவன் சென்றிருக்கக் கூடிய இடம் தெரிந்துவிட்டது. அருண் அங்கே கடத்தல் பொருட்கள் இருப்பதாகக்கூட எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அதற்காகவே அந்த வீட்டை...!''

அருண் இடைமறித்தான்.

''கடத்தல் பொருட்கள் எக்கேடும் கெடட்டும் மிஸ்டர் ஜான். இப்போது லாவண்யாவைக் காப்பாற்ற வேண்டும். வாருங்கள்'' என்று அவரது கைகளைப் பற்றி இழுத்தான்.

தன் கைகளை உருவிக் கொண்டார் ஜான். அவனோடு நடந்தபடியே தன் குறுந்தாடியை ஒரு முறை தடவினார். ''அருண், எனக்கு ஒன்று தெரிய வேண்டும். எனக்குக் கிடைத்த தகவல்கள் அவ்வளவு நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை...''

''என்ன சொல்லுகிறீர்கள் ஜான்! லாவண்யா இருக்கும் இடம் நிச்சயமாக இதுதான் என்று தெரியவில்லையா? சொல்லுங்களேன்'' என்று அவரை உலுக்கி எடுத்தான் அருண்.

''அதில்லையப்பா.''

''அப்பாடி'' என்று நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான் அருண்.

''சற்று பொறு அருண்! ஒருவேளை நாம் செல்லு முன் அங்கே காலம் கடந்திருந்தால் அதன்பின் அந்தப் பெண்ணின் கதி என்ன?'' என்று அவனிடம் கேட்டார் ஜான்!

''ஜான்!'' என அதட்டினான் அருண். உடனேயே அவன் கோபம் தணிந்தது: ''ஜான், எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும் லாவண்யாதான் என் மனைவி. அவள் உயிரோடு இருந்தாலே போதும்.''

''ம்...அதுதான் கேட்டேன்'' என்றபடி ஜான் காரில் ஏறினார். கார் தாராவியை நோக்கி விரைந்தது!

அருணின் கார் நேராக தாராவி காவலர் நிலையத்துக்குச் சென்றது. அங்கே கபாலியின் இருப்பிடத்தை அறிந்தவரையும் மற்றும் சிலரையும் அழைத்துக்கொண்டு போலீஸ் வண்டியில் சென்றார்கள்.

''கபாலி உத்தரவிட்டதும், ஒரு குண்டு பெண், ஓர்இளம் பெண்ணைத் தூக்கிச் சென்றதை நான் என் கண்ணால் பார்த்தேன்'' என்றார், சாதாரண உடையில் வந்த வழி காட்டும் காவலர்.

''பார்த்துமா நீங்கள் அவளைக் காப்பாற்றவில்லை?'' என்று சினத்துடன் வினவினான் அருண்.

''என்ன செய்வது? அதில் தலையிட்டால் கடத்தல் விவகாரம் என்ன ஆவது? என் பொறுப்பு அதுதானே'' என்றார் அவர் சாதாரணமாக.

அருண் பார்வையாலேயே அவரைச் சுட்டெரித்தான்.

போலீஸ் வேனைக் கண்டதும் வாயிலில் இருந்த தடியன் நழுவப் பார்த்தான்.

ஆனால் ஜானின் துப்பாக்கி முனையைப் பார்த்ததும் அவன் அசையாமல் நின்றான். அவனைப் பிடித்து வேனில் போட்டு விட்டு உள்ளே சென்றபோது காலம் கடந்து விடவில்லை.

லாவண்யா தன்னை நெருங்கி வரும் கபாலியை அச்சுறுத்தி விரட்டும் வகை புரியாமல் சுற்றுமுற்றும் பார்த்தாள். சிறு மேசை மேல் இருந்த விஸ்கி பாட்டில் கண்ணில் பட்டது. மெல்ல நகர்ந்து சென்று அதைக் கையில் தூக்கினாள். ''கபாலி! ஜாக்கிரதை! இனி

நெருங்கினால் உன் மண்டை நொறுங்கிவிடும்'' என்று உறுதியாக எச்சரித்தாள்.

இப்போது கபாலி திகைத்தான். இவள் இவ்வளவு தூரம் போவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. லாவண்யாவின் கண்களைப் பார்த்தான். களைப்பை மீறிக் கொண்டு திடத்தைக் காட்டின அவை. இவள் சொல்வதைச் செயலிலும் காட்டக் கூடியவள்தான். ஆனால் இதற்குப் பயந்து இவளை விட்டுவிடுவதா? இந்த அழகான உடம்பும் அது தரக்கூடிய பணமும் கையை விட்டுப் போவதா? ஒருக்காலுமில்லை. இவளைத் தந்திரத்தால் வெல்ல வேண்டும். லாவண்யாவின் பின்னே இருந்த கதவைப் பார்த்தான். அவன் முகம் மலர்ந்தது. ''சீக்கிரம் வா லோலூ. பின்னிருந்து இவளைப் பிடி'' என்றான் குதூகலமாக.

இவனை நம்பக் கூடாது என்று எண்ணும் போதே தன்னையும் அறியாமல் திரும்பிக் கதவைப் பார்த்தாள் லாவண்யா.

அவள் திரும்பிக் கதவைப் பார்த்த அந்த ஒரு வினாடியைப் பயன்படுத்திக் கொண்டான் கபாலி. மின்னலாகப் பாய்ந்து சென்று லாவண்யாவின் கையில் இருந்த பாட்டிலைப் பிடுங்க முயன்றான். இந்தப் பாட்டிலையும் விட்டு விட்டால் நம் கதி அதோ கதிதான் என்பதை உணர்ந்திருந்த லாவண்யா அவனது பிடியை உதற முயன்றாள்! அதே நேரத்தில்—

சொர்க்கவாசல் கதவுபோல மெய்யாகவே கதவு திறந்தது.

இருவரும் திடுக்கிட்டு, திரும்பிப் பார்த்தார்கள்!

அங்கே, அருணும், போலீஸ் அதிகாரி ஜானும் நின்று கொண்டு இருந்தார்கள்!

பிறகு நடந்தது எல்லாரும் ஊகிக்கக் கூடியதுதான்! கபாலியை காவலர் கைப்பற்றினர். கூடவே கடத்தல் பொருட்களையும் வேட்டை ஆடினர். இந்தக் காரியத்தை யும் கபாலியே செய்தானா என்று வியந்தான், அருண்! அதுவும் நல்லதுதான் என்றும் எண்ணினான். லாவண்யா வின் பெயர் வெளியில் அடிபடாமல் தடுத்துவிடலாம் அல்லவா?

'ஜான், இது கடத்தல் பொருட்களின் வேட்டை மட்டும்தான்'' என்றான் அருண், பொருள் பொதிந்த பார்வையுடன்!''

லேசான புன்சிரிப்புடன் ஜான் தலையசைத்து அதை ஆமோதித்தார்.

போலீஸ் நிலையத்தில் இருந்தே ''லாவண்யாவுக்கு ஆபத்து இல்லை. பத்திரமாக இருக்கிறாள்'' என்று வீட்டுக்கும் மருத்துவமனைக்கும் தெரிவித்தான் அருண். பிறகு ஜானுக்கு நன்றி கூறிவிட்டு லாவண்யாவுடன் தன் காரில் கிளம்பினான்.

இதுவரையில் லாவண்யா ஒரு பதுமைபோல இயங் கினாளே தவிர ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. இப்போதும் பொம்மை போலவே காரில் அமர்ந்திருந் தாள்.

அடுத்தடுத்து நடந்த நிகழ்ச்சிகள் அவளது கலக லப்பை ஒடுக்கி ஊமையாக்கி விட்டிருந்தன. இன்னமும் அவள் மனதில் கலவரம்தான். கபாலியிடமிருந்து தப்பி யாயிற்று. மெய்தான், ஆனால் இன்னமும் அருண் அவளை நம்புவானா? திடீரென்று ஒருவன் ஒருத்தியிடம் ஒரு தூண்டுதலும் இல்லாமல் நெருங்குவானா? இதற்கு முன் எவ்வளவு இடம் கொடுத்தாளோ என்று அவன் நினைத்தானானால்? மூடிய இமைகளை உறுத்திக் கொண்டு கண்ணீர் வடிந்தது. மெல்ல விரல்களை உயர்த்தி அருண் அறியாமல் விழி நீரைச் சுண்டி விட் டாள்.

ஆனால் அருண் அதை அறியாமல்இல்லை. அவ ளது கண்ணீரைக் கவனித்துவிட்டுக் காரை ஓர் ஒதுக்குப் புறமாக நிறுத்தினான். பையிலிருந்து ஒரு கைக்குட் டையை எடுத்து அவளிடம் நீட்டினான். திகைப்புடன் நிமிர்ந்து விழிகளை விரித்து அவனைப் பார்த்தாள். அவ்வளவுதான், மறுகணம் அருணின் வலிய கரங்களின் அணைப்பில் அவள் சங்கமம் ஆகியிருந்தாள்.

வெகு விரைவிலேயே பம்பாயில் ஓர் இரட்டைத் திருமணம் நடந்தது. பானுவும் மணிவண்ணனும் ஒரு ஜோடி. அடுத்த ஜோடி லாவண்யா, அருண்.

இரு ஜோடிகளும் பெரியவர்களைப் பணிந்து எழுந் தனர். ''செந்திருவும் சம்பந்தமும்போல மனம் ஒருமித்து வாழுங்கள்'' என்று வாழ்த்தினார் திலகவதி.

''அண்ணனையும் அண்ணியையும் முன் மாதிரியாகக் கொண்டு வாழுவோம்'' என்றாள் பானு.

''அண்ணியா?''

''நீதான்'' என்று லாவண்யாவின் அருகே வந்து வணங்கினாள் பானு. மனம் உருகி அவளை அணைத்துக் கொண்டாள் லாவண்யா.

சற்றுப் பொறுத்து லாவண்யாவின் காதில் மெல்லக் கிசுகிசுத்தான், அருண், ''என் இடத்தைப் பானுவுக்கு வெகு தாராளமாக அளிக்கிறாயே!'' என்றான் குறும்புடன்.

இதைக் கேட்டதும் லாவண்யாவின் எழில் முகம் செவ்வானமாகச் சிவந்து போயிற்று.

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in


லாவண்யா
ரமணிசந்திரன்